# பண்டைய தமிழ் நூல்களில்
# சிவன்

(பொ.ஆ.மு 400 முதல் பொ.ஆ 600 வரை)

என்.கே.எஸ்.திருச்செல்வம்

ஐந்திணை எழுபது
மணிமேகலை
மதுரைக்காஞ்சி
ஆசிரிய மாலை
திருமுருகாற்றுப்படை
சிலப்பதிகாரம்
ஆசாரக் கோவை
பரிபாடல்
இன்னாநாற்பது
ஐங்குறுநூறு
இனியவை நாற்பது
திருக்குறள்
முத்தொள்ளாயிரம்
புறநானூறு
தகடூர் யாத்திரை
கலித்தொகை
சிறுபாணாற்றுப்படை
அகநானூறு
பெரும்பாணாற்றுப்படை
தொல்காப்பியம்
கைந்நிலை
பட்டினப்பாலை
பதிற்றுப்பத்து



இராவண சேனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய தமிழ் நூல்களில் சிவன்

**பொ.ஆ.மு. 400 முதல் பொ.ஆ. 600 வரை**

என்.கே.எஸ்.திருச்செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய தமிழ் நூல்களில் சிவன்

## பொ.ஆ.மு. 400 முதல் பொ.ஆ. 600 வரை

என்.கே.எஸ்.திருச்செல்வம் B.A
வரலாற்றுத்துறை, சென்னை பல்கலைக்கழகம்

வெளியீடு
இராவண சேனை-திருகோணமலை
அருந்ததி பதிப்பகம்-கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டைய தமிழ் நூல்களில் சிவன்**
ஆசிரியர்: என்.கே.எஸ்.திருச்செல்வம்

உரிமை: என்.கே.எஸ்.திருச்செல்வம் ©

வெளியீடு: அருந்ததி பதிப்பகம்
68/14, ஸ்ரீ சித்தார்த்த வீதி,
கொழும்பு-05
**வெளியீட்டு அனுசரணை:**
இராவண சேனை-திருகோணமலை
1ஆம் பதிப்பு: மாசி 2020
பக்கங்கள்: xviii+159 = 177
அச்சுப் பதிப்பு: குமரன் அச்சகம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-06
தொலைபேசி.இல. 011-2364550

**Pandaiya Tamil Noolkalil Sivan**
Author: N.K.S.Thiruchelvam

Copyright: N.K.S.Thiruchelvam ©

Publisher: Arunthathy Pathippakam
68/14, Sri Siddhartha Road,
Colombo-05
**Sponsored by:**
Ravana Senai-Trincomalee
1st Edition : February 2020
Pages: xviii+159 = 177
Printed by : Kumaran Printers
39, 36th Lane, Colombo-06
Tel. 011-2364550

**ISBN NO: 978-955-3726-09-4**
**Price.Rs:[redacted]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரலாற்றுச் சிறப்பு மிக்கதும்,**
**இலங்கைத் வேந்தன் இராவணன் வழிபட்டதும்,**
**திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர்**
**ஆகியோரால் பாடல் பெற்றதுமான**
**திருக்கோணேஸ்வரத் திருத்தலத்தில், வீற்றிருக்கும்**



**திருக்கோணேசப் பெருமானுக்கு**
**இந்நூலை**
**சமர்ப்பணம் செய்கிறேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் எழுதிய நூல்கள்

1. தென்னிலங்கையின் புராதன இந்துக் கோயில்கள்
2. பாரம்பரியமிக்க கதிர்காம பாதயாத்திரையும், கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும்
3. கதிர்காமத்தை தரிசித்த சித்தர்களும், முனிவர்களும்
4. தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு
5. இலங்கையில் இராவணன் தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்கள்
6. இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்
7. புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்
8. யார் இந்த இராவணன்?
9. போர்த்துக்கேயர் அழித்த பெந்தோட்டை காளி கோயில்
14. தென்னிலங்கை பிராமிக் கல்வெட்டுகளில் இந்து சமயமும், தமிழும்
11. முன்னேஸ்வரம்-தொன்மையும் வரலாறும்
12. கன்னியா-பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம்
13. கந்தன் கவசங்கள்
14. பண்டைய தமிழ் நூல்களில் சிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

சிவ வழிபாட்டின் தொன்மை அறிய முடியாதது. தமிழருக்குக் கிடைக்கும் பண்டைய நூலான தொல்காப்பியத்தில் சிவனைப் பற்றிய குறிப்புண்டு. தொடர்ந்து வந்த பல்வேறு இலக்கியங்களிலும் வழிபாட்டுக்கு உரியவனாக சிவன் உறைகிறான். தொல்காப்பியர் தொடக்கம் திருஞானசம்பந்தர் வரை சிவ வழிபாட்டின் சிறப்பை எண்பது பாடல்களில் இருந்து எடுத்துத் தருகிறார் ஈழத்து வரலாற்று அறிஞர் திருச்செல்வம்.

இலங்கை சிவபூமி. இலங்கையின் தொன்மை வழிபாட்டிடங்களில் சிவன் கோயில்கள் முதன்மையானவை. தொன்மையான சிவன் கோயில்கள் காலத்தோடு கரைந்தன. ஆங்காங்கே எச்சங்களாக சான்றுகள் இன்னமும் கிடைக்கின்றன. இவ்வாறான இலங்கையின் 70 தொன்மை வாய்ந்த, மண்ணுள் புதைந்து கிடக்கும் சிவன் கோயில்கள் மற்றும் இன்றும் வழிபாட்டில் உள்ள 100 சிவன் கோயில்கள், ஆக 170 சிவன் கோயில்களின் பெயர்களை உள்ளடக்கி "ஈழத்து லிங்காஷ்டகம்" பாடலை இயற்றி பக்திக் கவிஞராகவும் திகழ்கிறார் வரலாற்று ஆய்வாளர் திருச்செல்வம்.

இவரின் முந்தைய வரலாற்று ஆய்வு நூல்களை நான் ஆர்வத்துடன் படித்துள்ளேன். "பண்டைய தமிழ் நூல்களில் சிவன்" எனும் இந்நூல் இவரது 14 வது படைப்பாக வெளிவருகிறது. சைவம் சார்ந்த அறிவுச் செல்வத்தை அள்ளித் தருகின்ற தெள்ளு தமிழ்ப் புலவராக நான் திருச்செல்வத்தைக் காண்கிறேன். அவரது எழுத்துப்பணி தொய்யாது தொடர வாழ்த்துகிறேன்.

**மறவன்புலவு சச்சிதானந்தன்**
காந்தளகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

"பண்டைய தமிழ் நூல்களில் சிவன்" எனும் நூலை எழுதியுள்ள நூலாசிரியர் திருச்செல்வம் அவர்கள் திருஞானசம்பந்தர் காலம் வரையுள்ள பண்டைத்தமிழ் இலக்கியங்களை நுணுக்கமாக ஆராய்ந்து, அவர் இனங்கண்ட ஒரு பிரதான ஆய்வு வினாவுக்கு வெற்றிகரமாக விடை கண்டிருக்கிறார்.

சங்கப் புலவர்கள் பாடிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களிலும், பின்னர் வந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலும் சைவக் கடவுளான சிவன் பற்றிய குறிப்புக்கள் இல்லை என்ற ஓர் கருத்து உண்டு. சங்கப்பாடல்கள் தமிழர்களின் அக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் வழங்கி, அவர்தம் ஆத்மீக சிந்தனையையும், வாழ்க்கையையும் பிரதிபலிக்கவில்லை எனக் கூறுவோரும் உளர்.

இந்நூலாசிரியர் இக்கருத்துக்களை ஒரு சவாலாக ஏற்று இவ்வாய்வில் ஈடுபட்டுள்ளார். சிவன் பற்றிய குறிப்புக்கள் எவ்வாறு பண்டைத்தமிழ் இலக்கியங்களில் பொதிந்து காணப்படுகின்றன என்பதே இவர் எடுத்துக் கொண்ட ஆய்வுப் பொருள். தனது ஆய்வினூடாகக் கண்டறிந்த நூற்றுக்கணக்கான இலக்கிய ஆதாரங்களை கொண்டு அவர் இந்நூலை எழுதியுள்ளார்.

நூலாசிரியர் ஏற்கனவே வரலாறு, சமயம், இலக்கியம் சார்ந்த 14 நூல்களை வெளியிட்டு, எழுத்துத் துறையிலும் ஆய்வுத் துறையிலும் பல அனுபவங்களைக் கண்டவர். அவர் ஒரு வரலாற்றுத்துறை பட்டதாரி. அத்துடன் பண்டைத் தமிழ் இலக்கியத்திலும் சிறந்த புலமை பெற்றவர். தான் பெற்ற கல்வி அறிவையும், அனுபவத்தையும் பயன்படுத்தி தமிழுக்கும், சைவத்திற்கும் பெருந்தொண்டாற்றும் நோக்குடனும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றுபவர்.

தென்னிலங்கையில் ஆங்காங்கு காணப்படும் பண்டைய சைவக் கோயில்களை இனங்கண்டு, அவற்றைத் தரிசித்து அவை தொடர்பான வரலாற்றை அவர் ஆவணப்படுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை ஒரு மகாத்தான பணியாக நாம் கருதுகிறோம். நூலாசிரியர் திருச்செல்வத்தின் இந்நூலுக்கு தமிழ் கூறும் நல்லுலகம் தமது பாராட்டையும், வரவேற்பையும் வழங்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

**பேராசிரியர் சோ. சந்திரசேகரம்**
ஓய்வுநிலை பேராசிரியர்
கொழும்பு பல்கலைக்கழகம்
14.02.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"பண்டைய தமிழ் நூல்களில் சிவன்" எனும் இந்நூல் காலத்தின் கட்டாயமாக குறுகிய காலத்திற்குள் வெளிவரும் எனது நூலாகும். எனது ஆய்வு நூல்கள் வரிசையில் 14 வது நூலாக இது வெளி வருகிறது.

கடந்த சில வருடங்களாக இந்து சமயம், சைவம் அவற்றின் வழிபாடு மற்றும் தெய்வங்கள் பற்றிய தவறான தகவல்களை நாத்திக வாதிகள் சிலர் பகுத்தறிவு, தமிழ்ப் பற்று எனும் போர்வையில் சமூக ஊடகங்களில் பரப்பி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. பண்டைய தமிழ் நூல்களைப் படித்து, அதில் கூறப்பட்டுள்ள சைவ, வைணவ வழிபாடு மற்றும் தெய்வங்கள் பற்றிய உண்மைகளை தெரிந்து கொள்ளாமல், தாம் நினைத்தவற்றை உண்மை போல் சமூக ஊடகங்களில் எழுதி இந்து மக்களை குழப்பும் சூழ்ச்சி வேலைகளை இவர்கள் செய்வதும் தெரிகிறது. சமூக ஊடகங்களில் இவற்றை பார்க்கும் இந்துக்களும் இதன் உண்மைத்தன்மையை பகுத்தறியாது அப்படியே நம்புவதும், அவற்றை தம் நண்பர்களுக்கு பகிர்வதும் கவலைக்குரிய விடயமாகும்.

இந்நிலையில் அண்மையில் ஒருவர் தனது முகநூலில் சிவ வழிபாடு என்பது திருஞானசம்பந்தர் காலத்தின் பின் தான் உருவானது எனவும், சங்க கால நூல்களில் சிவன் என்ற பெயரே இல்லை எனவும் உண்மைக்குப் புறம்பான, விஷமத்தனமான ஓர் கருத்தை பதிவிட்டிருந்தார்.

சங்க நூல்களில் சிவன் என்ற பெயர் இல்லாவிட்டாலும் சிவனைக் குறிக்கும் முதுமுதல்வன், ஆதிரையான், ஆலமர் செல்வன், ஆலமர் கடவுள், ஆனேற்றுக் கொடியுடையான், ஈசன், ஈர்ஞ்சடை அந்தணன், காலக் கடவுள், காரியுண்டிக் கடவுள், தாழ்சடைப் பெரியோன், நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன், மணிமிடற்றன், முக்கட் செல்வன், காளை வாகனன், கங்கையைச் சடையில் கொண்டவன், நெற்றியில் பிறைச் சந்திரனைத் தரித்தவன், உமையொருபாகன், நீல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டன், திரிபுரம் எரித்தவன், முக்கண்ணன், மழுப்படையை உடைய வன், திருவாதிரை நட்சத்திரத்திரத்தை உடையவன், கூற்றுவனைக் காலால் உதைத்தவன் மற்றும் கொடுகொட்டி, பாண்டுரங்கம், காபாலம் முதலிய கூத்துக்களை ஆடுபவன் என சிவனைக் குறிப்பிட்டுள்ளனர்.

சங்க கால நூல்களில் சிவன் என்ற பெயரே இல்லை எனக் கூறும் இவர்கள் சங்க நூல்களைப் படிக்கவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது. மேலும் சங்ககால புலவர்களும், அறிஞர்களும் குறிப்பிட்டு ள்ள இத்தனை பெயர்களும் சிவனுக்கு இருக்கின்றன என்பதும் இவர் களுக்குத் தெரியவில்லை. இதன் மூலம் இவர்களின் தமிழ்ப்பற்று எந்த அளவில் உள்ளது எனவும் தெரிகிறது.

சமூக ஊடகங்களில் பரப்பப்படும் சைவம் மற்றும் சிவன் பற்றிய இப்படிப்பட்ட, உண்மைக்குப் புறம்பான, நம்பகத்தன்மை அற்ற விடய ங்களைத் தகர்த்தெறிந்து, பண்டைய காலத்தில் இருந்த சிவ வழிபாடு பற்றி இந்து மக்கள் மட்டுமல்லாது மேலே கூறப்பட்டுள்ள நாத்திக, பகுத்தறிவு வாதிகளும் அறிந்து கொள்ளும் வகையில் இந்நூலை எழுதியுள்ளேன்.

இதில் பண்டைய காலத்தில் சிவவழிபாடு முதலிடத்தில், மேன்மை யுடன் விளங்கியது என்பதற்கு, சங்க காலம் முதல் பல்லவர் காலம் வரை அதாவது திருஞானசம்பந்தர் காலத்திற்கு முன்பு எழுதப்பட்ட பண்டைய நூல்களில் சிவன் பற்றி எழுதப்பட்ட சங்ககால மற்றும் சங்கம் மருவிய கால நூல் குறிப்புகளை ஆதாரமாக கூறியுள்ளேன். திருஞானசம்பந்தர் காலத்திற்கு முற்பட்ட சிவன் பற்றிய சுமார் 80 ஆதாரங்களை இந்நூலில் உள்ளடக்கி இருக்கிறேன்.

இந்நூலில் பிற்சேர்க்கையாக நான் இயற்றிய "ஈழத்து லிங்கா ஷ்டகம்" எனும் பாடலும் சேர்க்கப்பட்டுள்ளது. இராவணன் காலம் முதல் ஈழ மண்ணில் அழிந்து போய் புதைந்து கிடக்கும் 70 லிங்க ங்கள் உட்பட 170 பழமை வாய்ந்த லிங்கக் கோயில்களின் பெயர் களை வைத்து இப்பாடலை இயற்றியுள்ளேன். இதன் தொடர்ச்சியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும், எனது அடுத்த நூலாகவும் "ஈழத்து லிங்காஷ்டகம்- மூலமும், விளக்கவுரையும்" எனும் நூலை விரைவில் வெளியிடவுள்ளேன்.

சிவனின் பண்டைய பெருமை பேசும் ஆதாரங்களுடனும், ஈழத்து லிங்காஷ்டகத்துடனும் வெளிவரும் "பண்டைய தமிழ் நூல்களில் சிவன்" எனும் இந்நூலை, சிவனின் சிறப்புமிக்க மகா சிவராத்திரி தினத்தன்று திருக்கோணேசப் பெருமானின் திருவடிகளில் சமர்ப்பணம் செய்து வெளியிடுவதிலும், ஈழத்து லிங்காஷ்டகம் எனும் பாடலை அரங்கேற்றம் செய்வதிலும் பெருமையடைகிறேன்.

இலங்கைத் தமிழ் வேந்தன் இராவணன் வழிபட்டதும், வரலா ற்றுச் சிறப்புமிக்கதும், திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர் ஆகியோ ரால் பாடப் பெற்றதுமான திருக்கோணேஸ்வரத் திருத்தலத்தில், விகாரி வருடம் மாசி மாதம் 9 ஆம் நாள் (21.02.2020) மகா சிவராத்திரி தினத்தன்று, இந்நூலை வெளியிட உதவி புரிந்த திருகோணமலை இராவண சேனை அமைப்பிற்கும், திருக்கோணேஸ்வர ஆலய நிர்வாக சபைத் தலைவர் மதிப்பிற்குரிய திரு. அருள் சுப்பிரமணியம் அவர்களு க்கும், இந்நூலை வெளியிட ஏற்பாடுகளை செய்த ஆலய நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**என்.கே.எஸ்.திருச்செல்வம்**<br>
B. A-வரலாறு<br>
சென்னைப் பல்கலைக்கழகம்<br>
மாசி 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


**நூலாசிரியர் எழுதிய நூல்கள்** ........ vi

**வாழ்த்துரை** ........ vii

**அணிந்துரை** ........ viii

**முன்னுரை** ........ x

**அறிமுகம்** ........ 1

**சங்க கால நூல்கள்** ........ 3

**தொல்காப்பியம்** ........ 7

*1.* மாயோன் மேய காடு உறை உலகமும் ........ *8*

2. காமப்பகுதி கடவுளும் **வரையார்** ........ *9*

*3.* கொடிநிலை கந்தழி **வள்ளி என்ற** ........ *10*

**பதினெண் மேற்கணக்கு எனும் எட்டுத்தொகை நூல்களும் பத்துப்பாட்டு நூல்களும்** ........ 13

**எட்டுத்தொகை நூல்களில் சிவன் பற்றிய பாடல்கள்** ........ 14

**அகநானூறு** ........ 15

1. கடவுள் வாழ்த்துப் பாடல்-கார் விரி கொன்றை ........ *16*

*2.* நான் மறை முது நூல் முக்கட் செல்வன் ........ *18*

3. வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து ........ *18*

**புறநானூறு** ........ 20

1. கடவுள் வாழ்த்துப் பாடல்-கண்ணி கார் நறுங் கொன்றை ........ *21*

2. ஓங்குமலைப் பெருவில் பாம்பு ........ *23*

*3.* நீலமணிமிடற்று ஒருவன் போல ........ *25*

*4.* முக்கண் செல்வர் நகர்வலஞ் செயற்கே ........ *27*

*5.* நன்றாய்ந்த நீள் நிமிர்சடை ........ *28*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஆல் அமர் கடவுள் அன்ன நின் செல்வம் ........ 29
7. ஏற்று வலன் உயரிய எரிமருள் அவிர்சடை ........ 29
**கலித்தொகை** ........ 31
1. ஆறறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து ........ 32
2. தொடங்கற்கண் தோன்றிய முதியவன் ........ 35
3. இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன் ........ 36
4. கொலைவன் சூடிய குழவித் திங்கள் போல் ........ 37
5. திருமறு மார்பன் போல் ........ 39
6. மணி மிடற்று அணி போல ........ 40
7. ஆடையான் மூடுய் அகப்படுப்பேன் ........ 41
8. அயம் திகழ் நறும் கொன்றை அலங்கல் ........ 41
**பரிபாடல்** ........ 45
1. காஅய் கடவுள் சே எய் செவ்வேள் ........ 46
2. ஆதி அந்தனன் அறிந்துபரி கொளுவ ........ 47
3. மண்மிசை அவிழ்துழாய் மலர்தரு செல்வத்து ........ 49
4. கடம்பமர் செல்வன் கடிநகர் பேண ........ 50
5. விரிசடைப் பொறையூழ்த்து விழுநிகர் ........ 51
6. விரிகதிர் மதியமொடு வியல் விசும்பு புணர்ப்ப ........ 52
7. கனைக்கும் அதிர்குரல் கார்வானம் நீங்கப் ........ 52
**பதிற்றுப்பத்து** ........ 54
1. எரி எள்ளு அன்ன நிறத்தன் ........ 54
2. கவரி முச்சிக் கார்விரி கூந்தல் ........ 56
**ஐங்குறுநூறு** ........ 58
1. நீலமணி வாலிழை பாகத்து ........ 58
**பத்துப்பாட்டு நூல்களில் சிவன் பற்றிய பாடல்கள்** ........ 59



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமுருகாற்றுப்படை** ..... 60

1. வெள்ளேறு வலவயின் உயரிய பலர் புகழ் ..... *61*

*2.* நாற்பெருந் தெய்வத்து நன்னகர் ..... *61*

3. இருமூன்று எய்திய இயல்பினின் ..... *62*

*4.* ஆல்கெழு கடவுட் புதல்வ ..... *63*

5. குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர் தடிந்தாய் ..... *63*

6. முருகனே செந்தி முதல்வனே ..... *64*

**பெரும்பாணாற்றுப்படை** ..... 65

1. இமையவர் உறையும் சிமையச் செவ்வரை ..... *66*

**சிறுபாணாற்றுப்படை** ..... 67

*1.* நீலநாகம் நல்கிய கலிங்கம் ..... *68*

**மதுரைக்காஞ்சி** ..... 69

1. தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின ..... *70*

2. நீரும் நிலனுந் தீயும் வளியும் ..... *72*

**பட்டினப்பாலை** ..... 74

*1.* கழிசூழ் படப்பைக் கலியாணர் ..... *75*

**சங்கம் மருவிய கால நூல்களில் சிவன் பாடல்கள்** ..... 77

**முப்பால் (திருக்குறள்)** ..... 79

1. அகர முதல எழுத்தெல்லாம் ..... *80*

*2.* கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன் ..... *83*

*3.* மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் ..... *85*

*4.* வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு ..... *87*

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் ..... *89*

6. பொறிவாயில் ஐந்தவித்தான் ..... *91*

7. தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு ..... *93*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. அறவாழி அந்தணன்.......... 94
9. கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்.......... 96
10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர்.......... 99
**இரட்டைக் காப்பியங்கள்**.......... 101
**சிலப்பதிகாரம்**.......... 102
1. கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில்.......... 103
2. குழவித் திங்கள் இமையவர் ஏத்த.......... 104
3. பிறவா யாக்கைப் பெரியோன்.......... 105
4. திரிபுர மெரியத் தேவர் வேண்ட.......... 106
5. பிறைமுடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய.......... 107
6. இளம்பிறை சூடிய இறையவன் வடிவின் ஓர்.......... 108
7. ஆலமர் செல்வன் பெயர் கொண்டு வளர்ந்தோன்.......... 108
8. ஆல் அமர் செல்வன் புதல்வன் வரும்.......... 109
9. கயிலை நன் மலையிறை மகனை.......... 110
10. நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி.......... 110
11. தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்.......... 111
12. செஞ்சடை வானவன் அருளினில் விளங்க.......... 113
13. உமையவள் ஒரு திறன் ஆக.......... 114
14. உமை ஒரு பாகத்து ஒருவனை வணங்கி.......... 114
**மணிமேகலை**.......... 116
1. நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்.......... 118
2. ஆலமர் செல்வன் மகன்.......... 118
3. இறைவன் ஈசன் என நின்ற சைவ வாதி.......... 119
**முத்தொள்ளாயிரம்**.......... 121
1. முன்னம் படைத்த முதல்வனைப் பின்னரும்.......... 122



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. செங்கண் நெடியான் மேல் ............ *123*

**தகடூர் யாத்திரை** ............ 124

1. மழுவான் மிளையோய் மதிலான் ............ *125*

**ஆசிரிய மாலை** ............ 126

1. மூஇலை நெடுவேல் ஆதி வானவன் ............ *127*

2. நஞ்சுகறை படுத்த பூண்மிடற்று இறைவன் ............ *127*

**பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்** ............ 128

**இன்னா நாற்பது** ............ 130

1. முக்கண் பகவன் அடிதொழா தார்க்கின்னா ............ *131*

**இனியவை நாற்பது** ............ 132

1. கண்மூன்றுடையான் தாள் சேர்தல் கடிதினிதே ............ *133*

**ஆசாரக் கோவை** ............ 134

1. ஆர்எயில் மூன்றும் அழித்தான அடி ஏத்தி ............ *135*

**ஐந்திணை எழுபது** ............ 136

1. முண்டத்தான் அண்டத்தான் மூலத்தான் ஆலஞ்சேர் சண்டத்தான் *137*

**கைந்நிலை (இன்னிலை)** ............ 138

1. வேலன் தரீஇய விரிசடைப் பெம்மான் ............ *139*

**திருமந்திரம்** ............ 140

**காரைக்கால் அம்மையார் பாடல்கள்** ............ 142

1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் ............ *142*

2. அற்புதத் திருவந்தாதி ............ *143*

3. திருவிரட்டைமணிமாலை ............ *143*

**பிற்சேர்க்கை** ............ 145

**ஈழத்து லிங்காஷ்டகம்** ............ 145

**உசாத்துணை நூல்கள்** ............ 153



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கங்கள்

பொ.ஆ.மு=பொது ஆண்டுக்கு முன் ( கி.மு )

பொ.ஆ=பொது ஆண்டு ( கி.பி )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

சமயம் என்பது மனிதனால் அரிதாக உணரக்கூடியதாகும். ஆனால் எளிதாகப் புலப்படக்கூடியது. இதனை, "இயற்கைக்கு அப் பாற்பட்டு விளங்கும் ஒரு பேருண்மையை நம்புவது தான் சமயம் ஆகும்'' என்கிறது வாழ்வியற் களஞ்சியம். அன்புக்கு அடுத்தபடியாக மனிதனை அமைதிப்படுத்தி அவனது உணர்வுகளைப் பண்படுத்தும் சிறந்த கருவியாகச் சமயம் பயன்படுகிறது. இவ்வாறு மனிதனின் நாகரீ கமான வளர்ச்சியில் பங்கெடுத்து அவனுடைய வாழ்க்கைப் போரில் இரண்டறக் கலந்து அவனுக்குச் சிறந்த வழிகாட்டியாக அமைகின்ற சமயங்களைத் தொடாத இலக்கியவாதிகளே இல்லை எனக் கூறலாம். இவ்வகையில் பண்டைய தமிழ் நூல்களில் சமயங்கள் பற்றிய குறிப் புகள் அக்கால அறிஞர்களால் அவர்களின் நூல்களில் எழுதப் பட்டுள்ளன. இச்சமயங்களில் சிவனைக் கடவுளாகக் கொண்ட சிவ சமயமே பண்டைய காலத்தில் முதன்மை பெற்றதும், பெருமதமாகவும் விளங்கியுள்ளது. சிவனைப் பற்றிய பல விபரங்களை பண்டைய தமிழ் நூல்கள் கூறுகின்றன. பண்டைய கால தமிழ் நூல்களில் எமக்குக் கிடைக்கும் மிகப்பழமையான நூல் தொல்காப்பியமாகும். இதன் காலம் பொ.ஆ.மு. 5 ஆம், 4 ஆம் நூற்றாண்டு எனக் கணிக்கப்பட்டுள்ளது. இது ஓர் கடைச்சங்க நூலாகும். எமக்குக் கிடைக்கும் பழமைவாய்ந்த நூல்களான பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் கடைச்சங்க நூல்களே.

தொல்காப்பியத்திற்கு முன்பு பல தமிழ் நூல்கள் இருந்தமை பற் றிய குறிப்புகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. கடைச்சங்கத்திற்கு முன்பு இடைச்சங்கம் ஒன்று இருந்ததாகவும், இகாலத்தில் பெருங்கலி, குருகு, வெண்டாளி, வியாளமாலை, மாபுராணம், பூதபுராணம், இசை நுணுக்கம் ஆகிய நூல்கள் இருந்ததாகவும் குறிப்புகள் கூறுகின்றன.

இடைச்சங்கத்திற்கும் முன்பு முதற்சங்கம் ஒன்று இருந்ததாகவும், அச்சங்க காலத்தில் அகத்தியம், பெரும் பரிபாடல், முது நாரை, முது குருகு, களரியா விரை ஆகிய மிகத்தொன்மை வாய்ந்த நூல்கள் இருந்ததாகவும் அக்குறிப்புகளில் கூறப்பட்டுள்ளது. இந்நூல்கள் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரரை பின்பற்றி முசிறி நீலகண்டர் "இறையனார் அகப்பொருள் உரை" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவை பற்றிய விபரங்க ளையும், சிறு குறிப்புகளையும் மயிலை சீனி வேங்கடசாமி "மறைந்து போன தமிழ் நூல்கள்" எனும் நூலிலும், சுந்தர சண்முகனார் "தமிழ் நூல் தொகுப்புக் கலை" எனும் நூலிலும் கூறியுள்ளனர்.

தொல்காப்பியத்திற்கு முற்பட்ட இந்நூல்களில் சிவன் பற்றிய பாட ல்கள் உள்ளதா என்பது தெரியவில்லை. இருப்பினும் நக்கீரர் எழுதிய இறையனார் அகப்பொருள் உரையில், முதல் சங்கத்தில் "திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும்" இருந்தனர் எனக் கூறியுள்ளார். இக்கூற்று முதல் சங்க காலத்தில் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளான சிவனும், குன்றெறிந்த முருகவேளான முரு கனும் மக்களால் வழிபடப்பட்டனர் என்பதையே குறிப்பதாகும். இதன் படி பண்டைய காலத்தில் சிவன் பெருந்தெய்வமாக வழிபடப்பட்டு ள்ளார் என்பது உறுதியாகிறது. ஆனால் அக்காலத்தில் எழுதப்பட்ட தமிழ் நூல்கள் அழிந்து போய் விட்டதால் அது பற்றிய விபரங்கள் தெரியவில்லை.

இருப்பினும் சிவன் பெருந்தெய்வமாக வழிபடப்பட்டமை கடைச் சங்ககால புலவர்களுக்குத் தெரிந்துள்ளது. ஏனெனில் கடைச்சங்க நூல் களான பத்துப் பாட்டிலும், எட்டுத் தொகையிலும் சிவன் நஞ்சுண் டமை, திரிபுரத்தை எரித்தமை, கொடுகொட்டி, பாண்டுரங்கம், காபாலம் முதலிய கூத்துக்களை ஆடியமை, எமனைக் காலால் உதைத்தமை போன்ற சம்பவங்களை குறித்தே சிவன் குறிப்பிடப்படுகிறார். கடைச் சங்க நூல்கள் எதிலுமே இச்சம்பவங்களைக் குறிக்கும் கதைகள் இடம் பெறவில்லை. எனவே இக்கதைகள் கடைச்சங்க நூல்களுக்கு முற்பட்ட இடைச்சங்க நூல்களிலோ அல்லது முதல்சங்க நூல்களிலோ அல்லது வடமொழி நூல்களிலோ குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அப்படியும் இல்லாவிட்டால் சிவன்பற்றிய இக்கதைகள் அக்காலத்து மக்கள் மத்தி யில் வழிவழியாகப் பேசப்பட்டு வந்திருக்க வேண்டும். எனவே கடைச் சங்க காலத்திற்கு முன்பே சிவன் தமிழ் மக்களிடையே பெருந்தெய்வ மாக வழிபடப்பட்டுள்ளார் என்பது உறுதியாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க கால நூல்கள்

சங்க கால நூல்கள் எனப்படுவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழில் எழுதப்பட்ட இலக்கியங்கள் ஆகும். சங்க நூல்கள் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட வரை 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்புலவர்களுள் மன்னர்களும், சிற்றரசர்களும், பலதரப்பட்ட தொழில் நிலையில் இருந்தோரும், பெண் களும் அடங்குவர். சங்க நூல்கள் அக்கால கட்டத்தில் வாழ்ந்த தமிழர் களின் தினசரி வாழ்க்கை நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டு வதாய் உள்ளன. பண்டைத் தமிழரது வாழ்க்கை, தொழில், பண்பாடு, வழிபாடு, காதல், போர், வீரம், ஆட்சியமைப்பு, வணிகம் போன்ற விடயங்களா சங்க இலக்கிய நூல்களில் உள்ள பாடல்கள் நமக்கு அறியத் தருகின்றன.

சங்க நூல்களில் நமக்குக் கிடைக்கும் பழமையான நூல் தொல் காப்பியம் ஆகும். இதனுடன் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என வழங்கப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றில் உள்ள 18 நூல்களும் சங்க இலக்கிய நூல்கள் ஆகும். இவை மதுரையில் அமை ந்திருந்த கடைச் சங்கத்தில் பாடப்பட்டதாகக் கருதப்படுகின்றன.

## சங்க நூல்களின் காலம்

சங்க நூல்கள் எழுதப்பட்ட காலங்களை அறிஞர்கள் பலர் கணித்து தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். டாக்டர். மு.வரதராஜன் சங்க காலம் பொ.ஆ.மு. 500 முதல் பொ.ஆ.200 வரை எனவும், பேராசிரியர் ரா.சீனிவாசன் பொ.ஆ.மு. 500 முதல் பொ.ஆ.100 வரை எனவும், பேராசிரியர் எம்.ஆர்.அடைக்கலசாமி பொ.ஆ.மு. 300 முதல் பொ.ஆ.100 வரை எனவும் கூறியுள்ளனர். இதன்படி சங்க நூல்களின் காலத்தை பொ.ஆ.மு. 500 முதல் பொ.ஆ.200 வரை என எடுத்துக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

தொல்பழங்காலத்தில், அக்காலப் பாண்டிய அரசர்களின் ஆதரவில், ஒன்றுக்குப்பின் ஒன்றாக மூன்று தமிழ்ச் சங்கங்கள் தமிழை ஆராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்ததாகவும், அக்காலத்தில் தமிழிலக்கியங்கள் பல எழுதப்பட்டதாகவும் நம்பப்படுகிறது. முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என அழை க்கப்படும் இச்சங்கங்கள் சார்ந்த இலக்கியங்களில் கடைச்சங்க நூல்கள் மட்டுமே தற்போது கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. முன்னிரண்டு சங்கங்களையும் சேர்ந்த நூல்கள், அக்காலங்களில் ஏற்பட்ட கடல் கோள்களின்போது நாட்டின் பெரும்பகுதியுடன் சேர்ந்து அழிந்து போன தாகக் கருதப்படுகிறது. அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் மறைந்து போன தமிழ் நூல்கள் எனும் தனது நூலில் நூற்றுக் கணக்கான நூல்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார்.

## தொல்காப்பியத்தில் சிவன்

பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் குறிஞ்சி,பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நிலப்பிரிவுகள் கூறப்பட்டுள்ளன. குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த இடமுமாகும். பயனுள்ள விளைச்சல் அற்ற இடம் பாலை எனப்படும். காடும் காடு சூழ்ந்த இட மும் முல்லையாகும். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படும். நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த இடமுமாகும். ஒவ் வொரு நிலமக்களும் ஒரு தெய்வத்தை வணங்கி வந்தனர் என தொல் காப்பியம் கூறுகின்றது. குறிஞ்சி நிலத் தெய்வமாக முருகன் வழிபடப் பட்டான். பாலைநிலத் தேவதையாகக் கொற்றவை வழிபடப்பட்டாள். மாயோன் முல்லை நில மக்களால் வழிபடப்பட்டான். மழைக்கு அதி தேவதையான இந்திரன் மருதநில மக்கள் வணக்கத்துக்கு உரியவனா னான். கடலரசனான வருணன் நெய்தல் நில மக்களால் வழிபடப் பட்டான். இவ்வாறு ஒவ்வொரு நிலத்திற்கும் அமைந்த தெய்வத்தைத் தவிரக் கடவுள் என்ற ஒருவர் வழிபடப்பட்டு வந்ததாகவும் தொல் காப்பியம் கூறுகின்றது. ஆனல் அப்பொருள் சிவன் என்ற பெயரை உடையதாக இருந்தது என்பதற்குத் தொல்காப்பியத்தில் சான்றில்லை. இருப்பினும் சங்க கால நூல்களில் ''முதுமுதல்வன்'', ''பெரியோன்'' என சிவன் போற்றப்படுவதால் தொல்காப்பியர் குறிப்பிடும் கடவுள் சிவனாகத்தான் இருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகை நூல்களில் சிவன்

எட்டுத் தொகை நூல்கள் எனப்படும் அகநானூறு, புறநானூறு, பரிபாடல், ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை என்பவற்றிலும், திருமுருகாற்றுப்படை முதலிய பத்துப் பாடல்களிலும் சிவனைப் பற்றிய குறிப்புக்கள் மிகப் பலவாகக் காணப்படுகின்றன. ஆயினும் அவற்றுள் சிவன் என்னும் பெயர் காணப்படவில்லை. இருப்பினும்,

சிவன்- தாழ்சடை பொலிந்த அருந்தவத்தோன், முக்கட் செல்வன், கறை மிடற்று அண்ணல், நீலமணி மிடற்று அண்ணல், முது முதல்வன், நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன், மழை தலை வைத்தவன், புங்கம் ஊர்பவன், முக்கண்ணன், ஆலமர் செல்வன் முதலிய பல பெயர்களால் குறிக்கப்படுகிறான். அவன் சடையிலும் மார்பிலும் கொன்றைமாலை அணிந்தவன்; முடிமேல் பிறைச் சந்திரனைச் சூடியவன்; முடிமீது மேகத்தையும் கங்கையையும் தாங்கியவன்; வேதத்தை வாயில் உடையவன்; அதனை அந்தணர்க்குச் சொன்னவன்; எட்டுக் கைகளை உடையவன்; புலித்தோல் ஆடையன்; உமாதேவியைப் பாதியாகக் கொண்டவன்; அரிய தவம் செய்பவன்; உயிர்கட்குப் பாதுகாவலன்; முப்புரங்களை எரித்தவன்; எரித்த அச்சாம்பலைப் பூசிக்கொண்டவன்; அவன் பல வடிவங்களைக் காட்டியும் ஒடுக்கியும் எல்லாவற்றையும் அழித்து நின்று ஆடுபவன்; ஊழி இறுதியில் அவன் கொடுகொட்டி கூத்து ஆடுபவன்; அவன் முப்புரங்களை அழித்து பாண்டரங்கம் கூத்து ஆடுபவன்;அவன் புலியைக் கொன்று அதன் தோலை உடுத்துக் கொன்றை மாலை தோளில் அசைய காபாலக் கூத்து ஆடுபவன்; அவன் உமையம்மையுடன் இமய மலைமீது வீற்றிருப்பவன் எனப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள் கூறுகின்றன.

# காப்பியங்களில் சிவன்

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு காப்பியங்களிலும் பத்துப்பாட்டுள் ஒன்றான மதுரைக் காஞ்சியிலும் தெய்வங்கள் வரிசையில் சிவபிரான் முதலிடம் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரன் செங்குட்டுவன் சிவனருளால் பிறந்தவன், சிவபூசை செய்தவன் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. அவனது அவையில் சேர நாட்டுச் சாக்கையான் ஒருவன் சிவபிரான் ஆடிய கொடு கொட்டிக் கூத்தை ஆடிக்காட்டுகிறான். தமிழ் நூல்களில் சைவம் என்னும் சொல் முதன்முதலாக மணிமேகலையிலேயே காணப்படுகிறது.

மணிமேகலை ஒவ்வொரு மதவாதியிடமும் சென்று அவர்தம் மதக்கொள்கையையும், கடவுள் தன்மையையும் கேட்டறிந்தாள். அவள் சைவ வாதியிடம் சென்று, "உன் கடவுள் எத்தகையவர்?" என்று கேட்டபோது, அதற்குச் சைவவாதி, "என் இறைவன் இருசுடர் இயமானன்; ஐம்பூதம் என்ற எட்டினையும் உயிராகவும் உடம்பாகவும் உடையவன்; கலைகளை உருவாக உடையவன் ; உலகங்களையும் உயிர்களையும் படைத்து விளையாடுபவன் ; அவற்றை அழித்து உயிர்களின் களைப்பைப் போக்குபவன்; தன்னைத் தவிரப் பெரியோன் ஒருவனைப் பெற்றிராதவன்; அவன் ஈசன் எனப் பதில் கூறுகிறான். இது பண்டைய காலத்தில் சைவ சமயம் தமிழர்கள் மத்தியில் எவ்வாறு மேன்மையுடன் வழிபடப்பட்டது என்பதை எடுத்தியம்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்காப்பியம்

**(பொ.ஆ.மு. 4 ஆம் நூற்றாண்டு)**

**பாடியவர் : தொல்காப்பியர்**

சங்க இலக்கியங்களை நாம் அறிந்து கொள்வதற்கு முன்னால் சங்க இலக்கியங்களுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த தொல்காப்பியம் பற்றி அறிந்து கொள்வது தேவையான ஒன்றாகும். சங்க இலக்கியங் களை அகம், புறம் எனப் பிரித்துப் பார்ப்பதற்கும், தமிழ் மொழியின் முழுமையான இலக்கணத்தை அறிந்து கொள்வதற்கும் தொல்காப்பியம் துணை நிற்கிறது. சங்க இலக்கியங்களுக்கு முன்னால் அழிந்து போன பல நூறு ஆண்டு காலத் தமிழ் இலக்கியங்கள் இருந்துள்ளன.

அவ்விலக்கியங்களுக்கு அகத்தியர் எழுதிய அகத்தியம் என்ற இலக்கண நூல் இருந்ததாகவும், அதனைத் தொடர்ந்து அகத்தியரின் மாணவரான தொல்காப்பியர் தொல்காப்பியத்தை எழுதியதாகவும் தமிழ் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தொல்காப்பியர் பொ.ஆ.மு.500 ஆம் ஆண்டளவில் வாழ்ந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன. தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியமே சங்க இலக்கியத்தின் இலக்கணமாகத் திகழ் ந்தது. தொல்காப்பியம் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட இலக்கண நூலாகும். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்பன அவை. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

## தொல்காப்பியத்தில் கடவுள் பற்றிய பாடல்கள்

பண்டைய தமிழர் வாழ்ந்த ஐந்திணை நிலங்களில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நான்கு திணை நிலத்திற்கும் உரிய தெய்வங்கள் என்னென்ன என்பதை தொல்காப்பியர் தொல்காப்பியத் தில் பாடியுள்ளார். அதன்படி மாயோன் எனும் திருமால் காடும், காடு சூழ்ந்த நிலப்பகுதியான முல்லைக்கு காவல் தெய்வமாகவும், சேயோன் எனும் முருகன் மலையும், மலை சூழ்ந்த நிலப்பகுதியான குறிஞ்சிக்கு காவல் தெய்வமாகவும், வேந்தன் எனும் இந்திரன் நீர்வளம் மிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுகள் மற்றும் வயல் சூழ்ந்த நிலப்பகுதியான மருதத்திற்கு காவல் தெய்வமாகவும், வருணன் கடற்கரைப் பெருமணல் மற்றும் கடல் சார் ந்த நிலப்பகுதியான நெய்தல் நிலத்திற்கு காவல் தெய்வமாகவும் விளங் கியுள்ளனர். இவ்விபரங்களை கீழ்வரும் தொல்காப்பியரின் பாடல் கூறு கின்றது.

## 1. மாயோன் மேய காடு உறை உலகமும்

***நான்கு நிலங்களுக்கும் உரிய காவல் தெய்வங்கள் பற்றிய பாடல்***

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே

*(தொல்-பொருள், அகம்: நூற்பா-5)*

**பாடலின் பொருள்:**

மாயோன் = திருமால், மேய = விரும்பிய, காடுறை = முல்லை நிலம் (காடும் காட்டைச் சார்ந்த இடமும்), சேயோன் = முருகன், மைவரை = குறிஞ்சி நிலம் (மலையும் மலையைச் சார்ந்த இடமும்), வேந்தன் = இந்திரன், தீம்புனல் = மருதநிலம் (வயலும் வயலைச் சார்ந்த நில மும்), வருணன் = நீர்க்கடவுள், பெருமணல் = நெய்தல் (கடலும் கடலைச் சார்ந்த இடமும்)

**தெளிவுரை:**

திருமால் விளங்கிக் காக்கும் காடு சூழ்ந்த நிலப்பகுதி முல்லை எனவும், முருகன் விளங்கிக் காக்கும் மலை சூழ்ந்த நிலப்பகுதி குறிஞ்சி எனவும், இந்திரன் விளங்கிக் காக்கும் நீர்வளம் மிக்க ஆறு கள் சூழ்ந்த நிலப்பகுதி மருதம் எனவும், வருணன் விளங்கிக் காக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரைப் பெருமணல் சூழ்ந்த நிலப்பகுதி நெய்தல் எனவும் சொல்லப்படும் இயல்புடையதாகும்.

இப்பாடலின் படி நான்கு நிலங்களுக்கும் நான்கு காவல் தெய்வங்களை சங்க கால தமிழர் வணங்கியுள்ளனர் என்பது தெளிவாகிறது. திருமால், முருகன், இந்திரன், வருணன் ஆகிய தெய்வங்கள் காவல் தெய்வங்கள் என்றால் இவை எல்லாவற்றிற்கும் பொதுவாக ஒரு பெருந்தெய்வம் இருந்திருக்க வேண்டும். அத்தெய்வமே சிவன் என அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பழங்காலம் முதல் சிறப்பாக, அதிகமாக வழிபடப்பட்ட பெருந்தெய்வம் சிவபெருமான் என்பது சங்க இலக்கியப் பாடல்களாலும், வரலாற்று அறிஞர்களில் குறிப்புகளாலும் அறியப்படுகிறது. சங்க காலத்தில் பெருந்தேவ மதங்கள் இரண்டு இருந்ததாகவும், அவற்றில் முதலாவது சிவமதம் எனவும், இரண்டாவது திருமால் மதம் எனவும் அறிஞர் தேவநேயப்பாவாணர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியர் சில பாடல்களில் கடவுள் எனும் சொல்லை பயன்படுத்தியுள்ளார். எனவே தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள கடவுள் எனும் பொதுப் பெயர் சிவனையே குறிப்பதாக இருக்கவேண்டும் எனக் கருதப்படுகிறது. இவற்றிலிருந்து பழந்தமிழர்கள் கடவுள் கொள்கை உடையவர்கள் என்பதும், எல்லாவற்றையும் கடந்து நின்ற முழுமுதற் கடவுள் ஒருவனைப் பற்றிய கோட்பாட்டினை உடையவர்கள் என்பதும் தெளிவாகிறது. பழந்தமிழர்கள் முழுமுதற் கடவுளையே தம் கருத்தில் கொண்டிருந்தனர் என்பர். இன்றும் பேச்சு வழக்கில் தெய்வத்தைக் குறிப்பதாக உள்ள கடவுள் என்னும் சொல் எல்லாவற்றையும் "கடந்து நிற்பது" என்னும் பொருளைக் காட்டி நிற்கிறது. தொல்காப்பியர் இச் சொல்லை சில இடங்களில் எடுத்தாள்கிறார்.

## 2. காமப்பகுதி கடவுளும் வரையார்

***தொல்காப்பியர் கடவுள் பற்றிக் கூறும் பாடல்.***

காமப்பகுதி கடவுளும், வரையார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர் [5]

*(தொல்காப்பியம். பொருள், புறம்: நூற்பா-81)*

**விளக்கவுரை:**

காமப்பகுதி கடவுள் பக்கமும் கொள்ளப் பெறும். கடவுள்பால் தெய்வப் பெண்டிர் நயந்த பக்கமும், மானிடப் பெண்டிர் நயந்த பக்கமும் பாடப்பெறும் என்பதாம்.

## 3. கொடிநிலை கந்தழி வள்ளி என்ற

***தொல்காப்பியர் கடவுள் பற்றிக் கூறும் இன்னுமோர் பாடல்.***

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே

*(தொல்காப்பியம். பொருள், புறம்: நூற்பா-85)*

**விளக்கவுரை:**

கொடிநிலை, கந்தழி, வள்ளி எனும் குற்றம் தீர்ந்த மூன்றும் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வரும் காலத்துக் கடவுள் வாழ்த்துடன் பொருந்தி வரும். தொல்காப்பியத்தில் வரும் கந்தழி என்னும் சொல்லும் தெய்வத்தையே குறிக்கும்.

## கந்தழி பற்றி அறிஞர்கள் கூறியவை

கந்தழி என்பது சிவலிங்கத்தைக் குறிப்பது என பல அறிஞர்கள் கூறியுள்ளனர். இறைவன் முழுமுதற் கடவுள், சுதந்திர முடையவன், கடந்து நிற்பவன் என்னும் பொருள்களை இச்சொல் குறிக்கும் என்று நச்சினார்க்கினியர் கூறுகிறார். மேலும் கந்தழி பற்றி நச்சினார்க்கினியர் பின்வருமாறு கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தழியைப் பெற்றான் ஒருவன் அதனைப் பெறாதான் ஒருவனுக்குப் பெறுமாறு கூறி அவனை வழிப்படுத்துக் கூறுவான் என்பது பற்றி நக்கீரனார் திருமுருகாற்றுப்படையைப் பாடியுள்ளார் என்பர் நச்சினார்க்கினியர். "கந்தழியாவது ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள்; அது,

"சார்பினாற் றோன்றாது தானருவா யெப்பொருட்குஞ் சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பம் தகைத்தரோ வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த தூய்மையதா மைதீ சுடர்"
என்பதாம். இதனை,

"உற்ற வாக்கையினுறுபொருள் நறுமலரெழுதரு நாற்றம்போல்
பற்றலாவதோர் நிலையிலாப்பரம்பொருள்"

என அதனை உணர்ந்தோர் கூறிய வாற்றானுனர்க என நச்சினார்க்கினியர் கூறிய விளக்கம், இத்திருமுருகாற்றுப் படையும் திருவாசகம் முதலிய திருமுறைகளும் போற்றும் முழுமுதற் கடவுள் ஒன்றேயென்பதனை இனிது புலப்படுத்துதல் காணலாம்.

வழிபடும் தெய்வம், நடுகல் தெய்வம் போன்றவை பகைவரின் வலிமையை அழித்துப் பற்றுக் கோடாகித் துணை நின்ற பாங்கைப் பாராட்டிப் பாடுவது கந்தழி, கந்து என்னும் சொல் துணை நிற்றலைக் குறிக்கும்.

கொடிநிலை, கந்தழி, வள்ளி ஆகிய மூன்றும் கடவுள் வாழ்த்தோடு ஒப்ப வைத்து எண்ணப்படும். இது போக தமிழ்த் தத்துவக் கொள்கையும் இங்கு எண்ணத் தக்கது கொடிநிலை ஒன்றைப் பற்றுக் கோடாக கொண்டு படர்தலையும் அதாவது உயிரின் இயல்பையும் வள்ளி அருள் நிலையாகவும் கந்து கட்டு என்றும் பொருளில் கந்தழி கட்டழிந்த பரம்பொருளையும் குறிக்கும்.

கந்தழி என்னும் சொல் பழந்தமிழ் நூல்களில் இடம்பெற்று வழங்கும் தொன்மையுடையதென்பதும், அச்சொல் கந்து- அழி, கந்தழி என இரு சொற் புணர்ச்சியாய் ஒட்டி ஒரு சொல்லாய் நின்று, பற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டினையழித்தல் என்ற பொருளில் பகைவர்க்குப் பற்றுக் கோடாகிய அரணையழித்த பெருந்திறலைக் குறிக்கும் புறத்துறையின் பெயராய் வழங்குவதென்பதும், இத்துறையில் புலவர்பாடும் பாடாண்திணைப் பாடல்களில், மாயோனாகிய காத்தற் கடவுள் 'சோ' என்னும் அரணையழித்த பேராற்றலும் இணைத்துப் போற்றப்படுதலால் அத்துறை கடவுள் வாழ்த்தொடு பொருந்திய நிலையினையுடையதாயிற்று என்பதும் இங்கு உய்த்துணரத் தக்கனவாம்.

கந்தழி என்பது, கந்து-அழி என இரு சொற்புணர்ச்சியாய் ஒட்டி ஒரு சொல்லாய் நின்று, தன்னுடைய பற்றுக் கோட்டை, தான் சார்ந்த பொருளை அழிப்பதால் அது தீயைக் குறிப்பதாகும் என இளம் பூரணார் குறிப்பிட்டுள்ளார்.

கந்தழி என்பது சிவலிங்கத்தைக் குறிக்கும் பண்டைய பெயர் என பனாரஸ் இந்து பல்கலைக்கழக பேராசிரியர் ஜி. சுப்ரமணிப்பிள்ளை தனது ஆய்வுக் குறிப்புகளில் கூறியுள்ளார். பண்டைய காலத்தில் தமிழர்கள் மரத்தை புனிதமாக வழிபட்டனர். அப்படிப்பட்ட புனிதமரம் காலப்போக்கில் அழிந்து போனதும் அதன் அடிப்பகுதி மட்டும் எஞ்சியிருக்கும். அதை மக்கள் வழிபடுவர். அதுவே கந்தழி (கந்து+அழி) எனப்பட்டது. சில காலத்தின் பின் மரத்தின் அந்த அடிப்பகுதியும் அழிந்துபோன பின் அவ்விடத்தில் ஓர் உருளையான கல்தூணை நட்டு வழிபட்டு வந்தனர். காலப்போக்கில் அதுவே லிங்க வழிபாடாக மாறியது என அவர் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினெண் மேற்கணக்கு எனும் எட்டுத்தொகை நூல்களும் பத்துப்பாட்டு நூல்களும்

சங்க காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என வழங்கப்கப்படுகின்றன. இவற்றை எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு எனவும் கூறுவர். எட்டுத்தொகை தொகை நூல்கள் எவை என்பதை பின்வரும் செய்யுள் மூலம் அறியலாம்.

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம் புறம்
என்று இத்திறத்த எட்டுத் தொகை

எட்டுத் தொகையில் எட்டு நூல்கள் உள்ளன. அவையாவன: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித் தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவையாகும். அதுபோல பத்துப்பாடல்கள் எவை என்பதை அறிவதற்கும் ஓர் செய்யுள் உள்ளது. அச்செய்யுள் பின்வருமாறு:

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகுவள மதுரைக் காஞ்சி - கோல நெடு
நல்வாடைக் கோல் குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

பத்துப் பாட்டு நூல்களில் திருமுருகாற்றுப்படை, பொருநர்ஆற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்து நூல்கள் உள்ளன. சிறிய பாடல் கள் எல்லாம் எட்டுத் தொகையுள் அடங்கி விட பத்துப் பெரிய பாடல் களின் தொகுதி பத்துப்பாட்டு எனப் பெயரிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டுத்தொகை நூல்களில் சிவன் பற்றிய பாடல்கள்

சங்ககாலத் தமிழகத்தில் சிவபெருமான், முருகப் பெருமான், திருமால், கொற்றவை, இந்திரன், வருணன் ஆகிய தெய்வங்கள் சிறப்பாக வழிபடப்பட்டனர். சிவன் எனும் பெயர் சங்க நூல்களில் காணப் படாவிட்டாலும் சிவனுக்குரிய உவமைப் பெயர்கள் அனைத்தும் சங்க நூல்கள் பலவற்றிலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அப்பெயர் கள் பின்வருமாறு:

ஆதிரையான், ஆலமர்செல்வன், ஆலமார்கடவுள், ஆனேற்றுக் கொடி யுடையான், ஈசன், ஈர்ஞ்சடை அந்தணன், காலக் கடவுள், காரியு ண்டிக் கடவுள், தாழ்சடைப் பெரியோன், நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன், மணிமிடற்றன், முதுமுதல்வன், முக்கட்செல்வன், காளை வாகனன், கங்கையைச் சடையில் கொண்டவன், நெற்றியில் பிறைச் சந்திர னைத் தரித்தவன், உமையொரு பாகன், நீலகண்டன், திரிபுரம் எரித்தவன், முக்கண்ணன், மழுப்படையை உடையவன், திருவாதிரை நட்சத்திரத்திரத்தை உடையவன், கூற்றுவனைக் காலால் உதைத்தவன், மற்றும் கொடுகொட்டி, பாண்டுரங்கம், காபாலம் முதலிய கூத்துக்களை ஆடுபவன் என சிவனைக் குறிப்பிட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகநானூறு

## (பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டு)

அகநானூறு சங்க காலத்தைச் சேர்ந்த எட்டுத்தொகை எனப்படும் தமிழ் நூல் தொகுப்பில் உள்ள ஒரு நூலாகும். இது ஓர் அகத்திணை சார்ந்த நூல் என்பதுடன் இதில் நானூறு பாடல்கள் அடங்கியுள்ளதால் இது அகநானூறு என வழங்கப்படுகிறது. நெடுந்தொகை என்ற பெயரும் இதற்கு உண்டு. இதில் அடங்கியுள்ள பாடல்கள் ஒரே புலவராலோ அல்லது ஒரே காலத்திலேயோ இயற்றப்பட்டவை அல்ல. இது பல்வேறு புலவர்கள் வெவ்வேறு காலங்களில் பாடிய பாடல்களின் தொகுப்பு ஆகும். அகத் தொகையுள் நீண்ட பாடல்களைக் கொண்டமையால் இதனை "நெடுந்தொகை" என்றும் கூறுவர். [11]

அகநானூறு நூலைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திரசன்மர். இதனைத் தொகுப்பித்த மன்னன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியார். இத்தொகை பாடிய புலவர்கள் நூற்று நாற்பத்தைவர். அகநானூற்றுப் புலவர்கள் 146 பேர். மன்னர்கள், அந்தணர், இடையர், பொற்கொல்லர், வணிகர் எனப் பல தரப்பினர் புலவர்களாக இருந்த செய்தி அவர்களின் பெயர்களின் முன்னால் அமையும் அடைமொழிகளால் தெரிகிறது. மூன்று பாடல்களின் (114, 117, 165) ஆசிரியர் பெயர் காணப்படவில்லை.

அகநானூறு குருநில மன்னர்கள் பற்றிய எண்ணற்ற வரலாற்றுச் செய்திகளைத் தருகிறது. அலெக்சாண்டரின் படையெடுப்பின் போது கஞ்சி நந்தர்கள் தமது செல்வங்களையெல்லாம் கங்கையாற்றின் அடியில் புதைத்து வைத்த வரலாற்றுச் செய்தியும் இந்நூலின் 20,25 ஆம் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகநானூற்றில் சிவன் பற்றியும், சிவன் கோயில் இருந்த இடம் பற்றியும் குறிப்பிடும் பாடல்கள்

## 1. கடவுள் வாழ்த்துப் பாடல்-கார் விரி கொன்றை

*சிவன் பற்றிக் குறிப்பிடும் கடவுள் வாழ்த்துப் பாடல்*

***பாடியவர் : பெயர் குறிப்பிடப் படவில்லை***

கார் விரி கொன்றைப் பொன்நேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்
மார்பி னஃதே மை இல் நுண்ஞாண்
நுதலது இமையா நாட்டம்; இகல் அட்டுக்,

கையது கணிச்சியொடு மழுவே; மூவாய்
வேலும் உண்டு அத் தோலா தோற்கே;
ஊர்ந்தது ஏறே; சேர்ந்தோள் உமையே
செவ்வான் அன்ன மேனி, அவ்வான்

இலங்குபிறை அன்ன விலங்குவால் வைஎயிற்று,
எரியகைந் தன்ன அவிர்ந்து விளங்கு புரிசடை,
முதிராத் திங்களொடு சுடரும் சென்னி,
மூவா அமரரும் முனிவரும் பிறரும்

யாவரும் அறியாத் தொன்முறை மரபின்,
வரிகிளர் வயமான் உரிவை தைஇய,
யாழ்கெழு மணிமிடற்று, அந்தணன்
தாவில் தாள்நிழல் தவிர்ந் தன்றால் உலகே. [12]

*(அகநானூறு- களிற்றுயானை நிரை-கடவுள் வாழ்த்து)*

**கடவுள் வாழ்த்துப் பாடலின் விளக்கவுரை:**

கார்காலத்தில் கட்டவிழ்ந்து மலரும் கொன்றையின் பொன்னைப் போன்ற புதுமலர்களினால் சேர்ந்த தாரினை உடையவன், கட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையினை உடையவன், தொடுத்த கண்ணியினையும் உடையவன் சிவபிரான். குற்றமில்லாத நுண்மையான பூணூல் அவன் மார்பினி டத்தே விளங்கும். அவன் நெற்றியிடத்தோ இமையாத கண்,

அவன் கைகளில் விளங்குவனவோ குந்தாலியும், மழுவாயுதமும். அவை பகைவரை வென்ற சிறப்பும் உடையன. தோல்வியே அறியா தவன் அவன். அத்தகைய அவனுக்கு முத்தலை வேலும் உண்டு. அவன் ஏறி ஊர்ந்தது ஆன் ஏறு, அவனில் ஒரு பகுதியாகச் சேர்ந்தி ருப்பவள் உமையம்மை. செவ்வானத்தைப் போன்ற ஒளியுடைய செந்நிறம் வாய்ந்தது அவன் திருமேனி,

அவ்வானத்திலே விளங்கும் பிறை நிலவினைப் போன்ற வளைந்த வெண்மையான கூரிய பற்கள் அவனுடையவை. நெருப்பு கப்புவிட்டு எரிந்தாற் போன்று விரிந்து, இடையீடு பட்டு விளங்குவது அவனுடைய முறுக்குண்ட செஞ்சடை. வளர்ந்து முதிராத இளந் திங்களுடன் கூடியதாக அவன் சென்னி ஒளிவீசும். மூப்பே இல்லாத அமரர்களும், முனிவர்களும், மற்றையோரும்,

பிறர் யாவரும் அறிய முடியாத, அத்துணைப் பழமையான தன்மை யினை உடையவன் அவன். கோடுகளுடன் விளங்கும் வலிய புலியின் தோலினை உடுத்தவன். யாழ் இசை முழங்குகின்ற நீலமணிக் கழுத் தினன். உயிர்கள் பால் அளப்பருங் கருணையை உடைய அந்தணன் அச்சிவபெருமான். அவனுடைய அழிதல் இல்லாத திருவடி நிழலையே உலகம் தனக்குக் காப்பாகக் கொண்டு என்றும் தங்கியிருக்கிறது. [13]

## சிவனின் ஆலமரக் கோயில் பற்றிய பாடல்

நான்கு வேதங்களை அருளிச் செய்த முக்கண்ணனான சிவனின் ஆலமர முற்றத்தில் இருக்கும் கோயில் பற்றி ஓர் அகநானூறு பாடல் கூறுகிறது. இப்பாடலின் மூலம் சங்க காலத்தில் சிவனுக்கு மரத்தடியின் கீழ் கோயில்கள் இருந்துள்ளன என்பதை அறியக் கூடியதாக உள்ளது. இது போன்று சிவபெருமானுக்கு கோயில்கள் இருந்தமை பற்றி மேலும் சில சங்ககால நூல்களின் பாடல்கள் கூறுகின்றன. ஆலமரக் கோயில் பற்றிக் கூறும் அகநானூறு பாடலின் விபரம் பின்வருமாறு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நான் மறை முது நூல் முக்கட் செல்வன்

*முக்கண்ணனான சிவனின் ஆலமர முற்றத்தில் இருக்கும் கோயில் பற்றிய பாடல்*

***பாடியவர்: பரணர்***

ஞாலம் நாளும் நலம்கெழு நல்இசை
நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்,
ஆல முற்றம் கவின்பெறத் தைஇய
பொய்கை சூழ்ந்த பொழில் மனை மகளிர்
கைசெய் பாவைத் துறைக்கண் இறுக்கும்

*(அகநானூறு - 181 : 15-19)*

**விளக்கவுரை:**

உலகம் எல்லாம் புகழ்மணம் பரவிய, நன்மை பொருந்திய, நற்புகழை யுடைய, நான்கு மறைகளாகிய பழைய நூலினை அருள் செய்த முக் கண்களையுடைய பரமனது ஆலமுற்றம் என்னுமிடத்திலே அழகு பெறு மாறு இயற்றப் பெற்ற பொய்கைகள் சூழ்ந்துள்ள பொழிலின் கண்ணே, சிற்றிலிழைத்து விளையாடும் சிறுமியர்களது கையாற் செய்யப் பெற்ற மணற்பாவைகள் விளங்கும் துறையினிடத்தே சென்று தங்கும்.

**பி.டி.சீனிவாச அய்யங்கார் விளக்கவுரை:**

உலகமெல்லாம் சென்று பரவும், நலம் தரும் நல்ல புகழ் வாய்ந்த நான்மறையாகிய முதுபெரும் நூலை அருளிய, முக்கண் கடவுள் வீற்றிருக்கும் ஆலமரம் நிற்கும் மன்றம்...

## 3. வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து

*சிவனையும், சக்தியையும் இருபெரும் தெய்வங்கள் என வர்ணிக்கும் பாடல். இருபெரும் தெய்வங்கள் என்பது சிவனும், திருமாலும் எனவும் சில அறிஞர்கள் கூறியுள்ளனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாடியவர்: மதுரைக் கண்ணத்தனார்*

வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம் போல
அந்தி வானமொடு கடலணி கொளாஅ
வந்த மாலை பெயரின் மற்றிவள்
பெரும்புலம் பினளே தெய்ய அதனால்,

*(அகநானூறு- நித்திலக்கோவை- 360 : 6-10)*

**விளக்கவுரை:**

மாலைக் காலத்துச் செக்கர் வானமும், நீலக்கடலும் அடிவானத்து ஒருங்கே இணைந்திருக்கும் காட்சியைச் செம்மேனியனான சிவ பிரானும், நீலமேனியின்ளான அம்மையும் உருவால் ஒன்றாகிப் பொருந் தியிருக்கும் தன்மை போலிருந்தது என்கின்ற நயத்தினை அறிந்து இன்புறுக.

பலவாகிய பூக்களையுடைய குளிர்ச்சியான பொழிலினிடத்தே பகற் போதெல்லாம் தலைவியுடனே கூடியிருந்து கழித்தனை. ஒற்றைச் சக்க ரத்தினைக் கொண்ட தேரினை யுடையவன் ஞாயிறாகிய அழகிய செல்வன், அவன் மேற்றிசைக் கண்ணதாகிய பெரிய மலையிற்சென்று மறைந்தனன். வளைந்த கழியிலேயுள்ள தண்ணிய சேற்றிலே செறிந் துள்ள திரண்ட தண்டினையுடைய நெய்தற்பூவின் நுண்ணிய தாதினை உண்ட வண்டினங்களும் அதனைவிட்டு நீங்கின. அஞ்சத்தகும், மிக்க வலிமையினையுடைய இரண்டு பெருந் தெய்வங்களான சிவமும் சக்தி யும், ஓர் உருவத்தே உடன் பொருந்திச் சிவசக்தியாக விளங்குகின்ற தோற்றத்தைப் போல, அந்திச் செவ்வானத்துடன் நீலக்கடலும் இணை ந்து அழகு கொண்டது. இங்ஙனமாக வந்த மாலைக் காலத்திலே, நீயும் நீங்கிச் சென்றனையானால் இவள் பெரிதும் தனிமை கொண்டவளாகி வருந்துவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறநானூறு

## (பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டு)

புறநானூறு என்னும் தொகைநூல் நானூறு பாடல்களைக் கொண்ட புறத்திணை சார்ந்த ஒரு சங்க கால தமிழ் நூலாகும். புறம், புறப்பாட்டு என்றும் வழங்கப்படும் இது சங்க காலத் தமிழ் நூல் தொகுப் பான எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். இந்நூலைத் தொகுத்தவர் பெயரும், தொகுப்பித்தவர் பெயரும் அறியப்படவில்லை. புறநானூற்றின் பாடல்கள் சங்க காலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும், மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் எடுத்துரைக்கின்றன

இந்நூலில் அடங்கியுள்ள பாடல்கள் பல்வேறு புலவர்களால் பல் வேறு காலங்களில் பாடப்பட்டவையாகும். இப்பாடல்கள், 150-க்கும் மேற்பட்ட புலவர்களால் எழுதப்பட்டவை. அரசன் முதல் குயவன் மகள் வரை பல்வேறு நிலைகளில் இருந்த ஆடவரும், பெண்களுமாக பல புலவர்கள் இப்பாடல்களைப் பாடியுள்ளனர். இந்நூலில் முடிமன்னர் மூவர், குறுநில மன்னர், வேளிர் ஆகியோரைப் பற்றிய பாடல்களும், போர், கையறு நிலைப் பாடல், நடுகல், மகளிர் தீப்பாய்தல் ஆகியவை பற்றிய பாடல்களும் பாடப்பட்டுள்ளன. இந்நூலில் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் திணை, துறை, பாடினோர், பாடப்பட்டோர், பாடப்பட்ட சூழல் போன்ற குறிப்புகள் உள்ளன.

பெண்கள் மங்கல அணி அணிதல், இறந்தவரைத் தாழியில் கவி த்தல், நடுகல் நடுதல், நட்ட கல்லைச் சுற்றி மயிற்பீலி அணிவித்து மது வார்த்தல், கணவனை இழந்த பெண்கள் அணிகளைக் களைந்து கைம்மை நோன்பு நோற்றல், உடன் கட்டையேறுதல் போன்ற பழக்க வழக்கங்களையும், 10 வகை ஆடைகளையும், 28 வகை அணி கலன்களையும், 30 படைக் கலக்கருவிகளையும், 67 வகை உணவு களையும் புறநானூறு பாடல்கள் எடுத்து இயம்புகின்றன. பால் மணம் மாறாத பச்சிளம் குழந்தைக்கு கையில் வேல் கொடுத்து போருக்கு அனுப்பும் மகளிர், முறத்தால் புலியை விரட்டும் மகளிர் எனப் பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் வீரத்தையும் புறநானூறு பாடல்கள் போற்றுகின்றன. அக்கால சமூக நிலையைக் காட்டும் கண்ணாடி என புறநானூற்றைக் கூறலாம்.

பாண்டியன் நெடுஞ்செழியன் முதலான 15 பாண்டிய மன்னர் களையும், கரிகாற்சோழன் போன்ற 18 சோழ அரசர்களையும், இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன் போன்ற 18 சேர அரசர்களையும் சிறப்பித்துப் பாடியுள்ளனர். பண்டையப் போர்க்களங் களான வெண்ணிப் பறந்தலை, வாகைப் பறந்தலை, கழுமலம், தகடூர், தலையாலங்கானம், போன்ற போர்க்களங்கள் பற்றியும் புறநானூறு குறிப்பிடுகிறது.

## புறநானூறில் சிவன் பற்றிக் குறிப்பிடும் பாடல்கள்

## 1. கடவுள் வாழ்த்துப் பாடல்-கண்ணி கார் நறுங் கொன்றை

*நீலகண்டன், பிறைச்சந்திரனைச் சூடியவன், உமாதேவியை இடப் பாகத்தில் கொண்டவன் என சிவனை வர்ணிக்கும் பாடல்.*

***பாடியவர்: பாரதம் பாடிய பெருந்தேவனார்***

கண்ணி கார் நறுங் கொன்றை; காமர்
வண்ண மார்பின் தாரும் கொன்றை:
ஊர்தி வால் வெள் ஏறே; சிறந்த
சீர் கெழு கொடியும் அவ் ஏறு என்ப:

கறை மிடறு அணியலும் அணிந்தன்று; அக் கறை
மறை நவில் அந்தணர் நுவலவும் படுமே:
பெண் உரு ஒரு திறன் ஆகின்று; அவ் உருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்:

பிறை நுதல் வண்ணம் ஆகின்று; அப் பிறை
பதினெண் கணனும் ஏத்தவும் படுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா உயிர்க்கும் ஏமம் ஆகிய,
நீர் அறவு அறியாக் கரகத்து,
தாழ் சடைப் பொலிந்த, அருந் தவத்தோற்கே.

*(புறநானூறு- கடவுள் வாழ்த்து)*

இப்பாடல் முழுவதும் சிவனைப் பற்றிய வர்ணனை பாடப்பட்டுள்ளது. நீலகண்டன், நெற்றியில் பிறைச்சந்திரனைச் சூடியவன், உமாதேவியை இடப்பாகத்தில் கொண்டவன் போன்ற வர்ணனைகள் மூலம் சிவனைப் போற்றுகின்றனர்.

**அவ்வை துரைசாமிப் பிள்ளை விளக்கவுரை:**

தலையில் கொன்றைப் பூ சூடியவன், மார்பில் கொன்றை-மாலை அணிந்தவன். ஊர்தி வெண்ணிறக் காளைமாடு. கொடியும் காளைமாடு என்று கூறுகின்றனர்.

தொண்டையில் நஞ்சுக் கறை. அந்தக்கறை அந்தணர் மறையில் போற்றப்படுகிறது. ஒருபாதி (இடப்புறம்) பெண்-உருவம். அதனைத் தனக்குள் மறைத்துக் கொள்வதும் உண்டு.

நெற்றியில் பிறை. அந்தப் பிறை 18 வகையான தேவ கணங்களாலும் போற்றி வணங்கப்படும். அவன் எல்லா உயிரிங்களுக்கும் பாதுகாவலாக விளங்குபவன். நீர் வற்றாத கரகத்தைக் கையில் வைத்திருப்பவன். தாழ்ந்த சடைமுடியிலும் நீர் வற்றுவதில்லை. இந்தக் கோலத்தில் அவன் தவம் செய்துகொண்டிருக்கிறான்.

**புலியூர் கேசிகன் விளக்கவுரை:**

தவமுதிர்ச்சியின் சான்றாக விளங்குவது அவனது தாழ்சடை.அனைத்து உயிர்களுக்கும் காவலாக விளங்கும் அருளுடைமையைக் காட்ட, நீர் வற்றுதல் இல்லாத கமண்டலமும் அவன் கையிலே உள்ளது. மேலும் அவன் தலையிலும், மார்பிலும் கொன்றை மலரினை அணிபவன். வாகனமாகவும், கொடியாகவும், தூய வெண்ணிற ஆனேற்றினைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பவன். அவன் திருக்கழுத்தை காலகூட விஷத்தின் நச்சுக் கறை அழகு செய்கிறது. மறைகளை ஓதுபவர்களான அந்தணர்களால் அது புகழவும் படுகிறது. பெண் உருவை ஒரு பாகத்தில் அறியக் காட்டியும், தன்னுள் அதனை அடக்கி ஒளித்துத் தானாகத் தனித்தும் அவன் விளங்குகிறான். அவன் தனது திருநுதலில் பிறையைச் சூடி யிருக்கிறான். அவனது திருநுதலுக்கு வனப்புத் தரும் அப்பிறை பதினென் தேவராலும் போற்றவும் படுகிறது. இத்தகைய பெருந் தெய்வ மான சிவபிரானைப் பணிபவர் தாமும் தம் துயர் தீர்வர் என்பது இது.

## 2. ஓங்குமலைப் பெருவில் பாம்பு

*திரிபுரம் எரித்தவன், நெற்றியில் பிறைச்சந்திரனைச் சூடியவன் என சிவனை விபரிக்கும் பாடல்*

***பாடியவர்: மதுரை மருதன் இளநாகனார்***

ஓங்குமலைப் பெருவில் பாம்பு ஞாண் கொளீஇ,
ஒரு கணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறை மிடற்று அண்ணல் காமர் சென்னிப்
பிறை நுதல் விளங்கும் ஒருகண் போல,

*(புறநானூறு - 55 : 1-5)*

**அவ்வை துரைசாமிப் பிள்ளை விளக்கவுரை:**

சிவபொருமானின் முக்கண்ணில் நெற்றிக்கண் போல ஏனைய இரு பெரு வேந்தரின் மேம்பட்டு விளங்கும் மாறனே!

**புலியூர் கேசிகன் விளக்கவுரை:**

மூவெயில் எய்து அழித்த இறைவனின் நெற்றிக்கண்ணைப் போலப் பிற வேந்தரினும் மேம்பட்டு விளங்கும் மாறனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கவுரை:**

ஓங்கி உயர்ந்த மலைத் தொடரான மேருமலைத் தொடரையே வில் ஆக்கி, பாம்பரசனான வாசுகியை வில்லின் நாண் ஆக்கி, அக்னி, வாயு, விஷ்ணு ஆகியோரை ஒரு அம்பு ஆக்கி, அந்த ஒரே அம்பால் அசுரர்களின் முப்புரங்களை எரித்து, ஆற்றல் மிகுந்த அமரர்களுக்கு வெற்றியைத் தந்தவர் சிவபெருமான். காலகூட விஷத்தின் நச்சுக்கறை அழகு செய்ய விளங்கும் திருக்கழுத்தை உடைய பெருமானான அவரின் திருநுதலில் விளங்கும் சிறப்பு மிக்க நெற்றிக்கண் போலத் தனிச்சிறப்பு பெற்று விளங்கும் மாறனே.

## திரிபுரம் எரித்த சிவன்

தாருகன் என்ற அரக்கனின் புதல்வர்கள் வித்துன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் என்ற மூவர். இவர்கள் பிரம்ம தேவனை நோக்கி கடுந்தவம் புரிந்தார்கள். தவத்தை மெச்சி, தரிசனம் அளித்த நான்முகனிடம், "நினைத்த இடமெங்கும் செல்லும்படியாக ஆகாய மார்க்கத்தில் பறக்கத் தக்க மூன்று கோட்டைகள் வேண்டும். நாங்கள் மூவரும் ஒன்று சேர்ந்து இருக்கும்போது மட்டுமே ஒரே கணையால் தான் எங்கள் உயிர் பிரிய வேண்டும்" என்ற அரிய வரத்தைப் பெற்றார்கள். வரம் பெற்ற பின் இந்திராதி தேவர்களை துன்புறுத்தினார்கள். இம்மூவரையும் யாராலும் வெல்ல முடியவில்லை. மேலும் அவர்கள் சிவ பக்தர்களாகவும் திகழ்ந்தார்கள். எனவே அவர்களை சிவ பெருமானால் மட்டுமே அழிக்க முடியும் என்று கருதிய தேவர்கள், பிரம்மனுடனும், திருமாலுடனும் சென்று சிவபெருமானை வேண்டினர். உடனே சிவன் மேருமலையை வில்லாகவும், வாசுகி பாம்பை நாணாகவும், நான்கு வேதங்களை நான்கு குதிரைகளாகவும் கொண்டு பிரம்மா சாரதியாக ரதத்தை இயக்க திரிபுரங்களை எதிர்க்கப் புறப்பட்டார். தேவர்களையும் காக்க வேண்டும், சிறந்த சிவபக்தர்களாகிய அந்த அரக்கர்களையும் வதம் செய்யக் கூடாது என கருத்தில் கொண்டு இறைவன், வில்லை வளைக்காமல், நாணைப் பூட்டாமல் அண்ட சராசரங்கள் நடுங்கும் வண்ணம் ஒரு புன்னகை செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது தோன்றிய அக்னியினால் முப்புரங்களும் எரிந்து சாம்ப லாயின. தன்னைப் பூஜித்து வந்த அந்த மூவரில் இருவரை தன் வாயில் காப்போராகவும், ஒருவரை குடமுழா முழுக்குபவராகவும் தமது அருகில் இருக்கும்படி ஆணையிட்டார் அந்த திரிபுராந்தக மூர்த்தி. திரிபுரத்தை எரியச் செய்ததற்கு, ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைத் தன் திருவருள் நோக்கால் சுட்டு எரித்தான் சிவன் என்று பொருள் என புராணங்கள் கூறுகின்றன.

## 3. நீலமணிமிடற்று ஒருவன் போல

*சிவனை நீலகண்டன் எனக் கூறும் பாடல்*

***பாடியவர்: ஔவையார்***

நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கினி குறியாது,
ஆதல் நின்னகத்து அடக்கிச்,
சாதல் நீங்க, எமக்கு ஈத்தனையே.

*(புறநானூறு - 91 : 6-11)*

**அவ்வை துரைசாமிப் பிள்ளை விளக்கவுரை:**

சிவபெருமான் பால் போன்ற வெண்ணிற நெற்றியைக் கொண்டவன். நீலமணி நிறம் கொண்ட தொண்டையை உடையவன். பெருமானே, நீ இந்தச் சிவபெருமான் போல நிலைபெற்று வாழ்வாயாக! தொன்று தொட்டுப் பெருமலை வெடிப்பு ஒன்றில் பெறுவதற்கு அரிதாக, சிறி யிலை நெல்லிப்பழம் ஒன்றை, உண்டால் சாகாமல் நீண்டநாள் வாழக் கூடிய அதன் தன்மையை உன் மனத்திலேயே வைத்துப் பூட்டிக் கொண்டு, நான் சாகாமல் நீண்டநாள் வாழவேண்டும் என்று எண்ணி என்னை உண்ணச் செய்தாயே. அதனால் நீ சிவபெருமானைப் போல வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புலியூர் கேசிகன் விளக்கவுரை:**

வீரச் செல்வமும் பொன்மாலையும் உடைய அஞ்சியே! மலைச்சரிவிலே கடுமுயற்சியுடன் பெற்ற நெல்லியின் இனிய கனி அது. அதனைப் பெறுதற்கு அரிது என்றும் கருதாது, அதனால் விளையும் பேற்றினையும் கூறாது, நின்னுள்ளத்திலேயே அடக்கிக்கொண்டு, எம் சாதல் ஒழிய எமக்கு அளித்தனையே! பெருமானே! பிறையணிந்த நீலமணி மிடற்று இறைவனைப் போல, நீயும் நிலைபெற்று வாழ்வாயாக!

## நீலகண்டன்

தேவர்களும், அசுரர்களும் மேருமலையை மத்தாகவும், வாசுகி பாம்பை நாணாகவும் கொண்டு அமிர்தம் வேண்டிக் கடலைக் கடைந்த போது, வாசுகி என்ற அந்தப் பாம்பானது வலி பொறுக்க மாட்டாது தனது நஞ்சைத் திரண்டு வரும் அமிர்தத்தில் கக்கி விட்டது. அதைக் கண்ட தேவர்கள் கலங்கினர். உடனே சிவன் அந்த விஷத்தை எடுத்து உண்டார். உமாதேவி அதைக் கண்டு பயந்து நஞ்சை உடலுக்குள் செல்ல விடாது சிவனின் கண்டத்தினைப் பிடித்தாள்.அதனால் அந்த நஞ்சானது கண்டத்திலேயே நின்றுவிட்டது. இதன் காரணமாக சிவன் நீலகண்டன் என்று பெயர் பெற்றான் என்கிறது புராணக்கதை.

## சிவபெருமான் கோயில்

புறநானூற்றில் காணப்படும் ஒர் பாடல் சிவனின் கோயில் பற்றிக் குறிப்பிடுகிறது. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி எனும் பாண் டிய மன்னன் மீது புலவர் காரிகிழார் பாடிய அப்பாடலில், மன்னன் நகர்வலத்தின் போது அங்கிருக்கும் முக்கண்ணன் கோயிலை வலம் வரும்போது அவனின் வெண்குடை தாழ்ந்து செல்ல வேண்டும் எனப் பாடியுள்ளார். இப்பாடலின் மூலம் மிகப் பண்டைய காலம் முதல் சிவபெருமானுக்கு தமிழகத்தில் கோயில்கள் இருந்தமை பற்றியும் தெரிய வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. முக்கண் செல்வர் நகர்வலஞ் செயற்கே

*நகரில் சிவனின் கோயில் இருந்தமை பற்றிய பாடல்*

***பாடியவர்: காரிகிழார்***

பணியியர் அத்தை நின் குடையே; முனிவர்
முக்கண் செல்வர் நகர்வலஞ் செயற்கே,
இறைஞ்சுக, பெரும, நின்சென்னி, சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே
*(புறநானூறு- 6. 17-20)*

**அவ்வை துரைசாமிப் பிள்ளை விளக்கவுரை:**

சிவபெருமான் ஊர்வலம் வரும்போது உன் குடை வணங்க வேண்டும். நான்மறை முதல்வர் உன்னிடம் கையேந்தும் போது நீ தலைவணங்க வேண்டும்.

**புலியூர் கேசிகன் விளக்கவுரை:**

நின் வெண் கொற்றக் குடை முக்கண்ணன் கோயிலை வலம் வருங் கால் மட்டுமே தாழ்ந்து விளங்குக, மறையாளர் வாழ்த்தும் போது நின் தலை தாழ்க.

## நீள்நிமிர்சடை முதுமுதல்வன் சிவன்

சிவபெருமானை நீளமான நிமிர் சடை கொண்ட முது முதல்வன் என்றும், வேதங்களை உருவாக்கியவர் என்றும் புறநானூறு பாடல் கூறுகிறது.

திருநாவுக்கரசு நாயனார் தனது தேவாரத்தில் “நிமிர்சடை” பற்றிப் பாடியுள்ளார். 5ஆம் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ள இப்பாடலில் ஓங்கிய சடையில் (நிமிர்சடை) கங்கையாறு அலைவீச நின்று ஆடும் பெருமான் (சிவன்) எனப் பாடியுள்ளார். பாடலும், அதன் பொருளும் பின்வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீற லைத்ததோர் மேனி நிமிர்சடை
ஆற லைக்கநின் றாடும் அமுதினைத்
தேற லைத்தெளி யைத்தெளி வாய்த்ததோர்
ஊற லைக்கண்டு கொண்டதெ னுள்ளமே.

**பொழிப்புரை :**

திருநீறு நன்கு பூசப்பெற்ற ஒப்பற்ற மேனியையும், ஓங்கிய சடையில் கங்கையாறு அலைவீச நின்று ஆடும் அமுதமும், தேனும் அதன் தெளிவும் அத்தெளிவுவாய்த்த ஊறல் போல் வானுமாகிய பெருமானை என் உள்ளம் கண்டு கொண்டது.

## 5. நன்றாய்ந்த நீள் நிமிர்சடை

*சிவன் நீளமான நிமிர் சடை கொண்ட முது முதல்வன் எனக் கூறும் பாடல்*

***பாடியவர்: ஆவூர் மூலங்கிழார்***

நன்றாய்ந்த நீள்நிமிர்சடை
முது முதல்வன் வாய்போகாது
ஒன்று புரிந்த ஈரிரண்டின்,
ஆறுணர்ந்த ஒரு முதுநூல்
இகல் கண்டோர் மிகல் சாய்மார்

*(புறநானூறு -166: 1-5)*

**அவ்வை துரைசாமிப் பிள்ளை விளக்கவுரை:**

விண்ணத்தாயனின் மூதாதையர் நல்லது கெட்டது என்று தெளிவாக ஆராய்ந்து அறிந்தவர்கள். நீண்டு நிமிர்ந்த சடையை உடைய பரமன் வழியில் தவறு நேராமல் ஒன்றுபட்டு வாழ்பவர்கள். அவர்கள் பின் பற்றிய நெறிநூல் 'முதுநூல்'. அவை ஈரிரண்டு. (நான்கு வேதம்). அது வாழும் ஆற்று நெறிகளைக் கூறுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ஆல் அமர் கடவுள் அன்ன நின் செல்வம்

*ஆலமர் கடவுள் சிவபெருமான் எனக் கூறும் பாடல்.*

**பாடியவர்: வடமவண்ணக்கண் பேரிசாத்தனார்.**

ஆல்அமர் கடவுள் அன்னநின் செல்வம்,
வேல்கெழு குருசில்! கண்டேன்; ஆதலின்,
விடுத்தனென்; வாழ்க, நின் கண்ணி! தொடுத்த
தண்டமிழ் வரைப்புஅகம் கொண்டி யாகப்,
பணிந்துக்கூட் டுண்ணும் தணிப்பருங் கடுந்திறல்

*(புறநானூறு- 198: 9-13)*

**அவ்வை துரைசாமிப் பிள்ளை விளக்கவுரை:**

ஆலமர் செல்வன் சிவபெருமான் போலப் பெருமிதச் செல்வம் படைத்தவனாக நீ இருப்பதைப் பார்க்கிறேன். ஆதலின் பரிசில் நல்க வேண்டும் என்னும் வேண்டுகோளை உன் முன் வைக்கிறேன். நின் கண்ணி (வேப்பம்பூ மாலை) வாழ்க! தமிழ்நாடு முழுவதையும் நடுங்கும்படிச் செய்து அதனைக் கொண்டியாகப் பெறும் திறமை உன்னிடம் உள்ளது.

## 7. ஏற்று வலன் உயரிய எரிமருள் அவிர்சடை

*சடைமுடி, மழுப்படை, நீலமணிக்கழுத்து ஆகியவற்றை உடைய சிவன் பற்றிய பாடல்.*

***பாடியவர்: மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்***

ஏற்று வலன் உயரிய எரிமருள் அவிர்சடை,
மாற்றருங் கணிச்சி, மணிமிடற் றோனும்
கடல் வளர் புரிவளை புரையும் மேனி,
அடல் வெந் நாஞ்சில், பனைக்கொடி யோனும்
மண் ணுறு திருமணி புரையும் மேனி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்,
மணி மயில் உயரிய மாறா வென்றிப்,
பிணிமுக ஊர்தி, ஒண்செய் யோனும்-

*(புறநானூறு- 56: 1-8)*

**விளக்கவுரை:**

வெற்றியால் உயர்ந்த வாளையுடைய மாறனே! சினத்தால் கூற்றத்தையும், வலியால் பலராமனையும், புகழால் பகைவரை அழித்த மாயோனையும், எண்ணியது முடித்தலால் முருகவேளையும் நீ ஒப்பவனாவாய்! நினக்கு அரியனவும் உளவோ?

**பி.டி.சீனிவாச அய்யங்கார் விளக்கவுரை:**

ஆனேற்றின் மீது அமர்ந்து உலாவரும், எரிபோல் ஒளிவிடும் சடை முடி, பகைவரால் வெற்றி கோடற்கு அரிய மழுப்படை, நீலமணி போலும் கழுத்து ஆகிய இவற்றை உடையோனும், கடல்வளர் வலம் புரிச்சங்கு நிகர்க்கும் வெண்ணிறத் திருமேனியினையும், கொலை விரும்பும் கலப்பைப் படையினையும், பவளக் கொடியினையும் உடையோனும், மாசு போகக் கழுவப்பட்ட நீலமணி போலும் நிறம்வாய்ந்த மேனியினையும், வானுற ஓங்கிய கருடக் கொடியினையும் உடைய, எக்காலத்தும் வெற்றியே விரும்போனும், நீலமணி நிறம் வாய்ந்த மயிலைக் கொடியாக உயர்த்திய, மயில் அல்லது யானை மீது உலா வரும் எக்காலத்தும் வெற்றியே காணும் செய்யோன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலித்தொகை

*(பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டு)*

சங்ககாலத் தமிழிலக்கியத் தொகுதியான எட்டுத்தொகை நூல்களுள் கலித்தொகை ஆறாவது நூலாகும். இதில் பல புலவர்களால் பாடப்பட்ட 150 பாடல்கள் உள்ளன. துள்ளலோசையால் பாடப்பட்டு பாவகைக்கு பெயர்பெற்ற நூல் கலித்தொகை ஆகும். கலித்தொகை காதலர்களின் அகத்தொகை நூல் எனவும் கூறலாம். இப்பாடல்களின் மூலம் பண்டைக் கால ஒழுக்க வழக்கங்கள், நிகழ்ச்சிகள், மரபுகள், காலத்தின் தன்மை, நல்லவர் தீயவர் பண்புகள், விலங்குகள், பறவைகள், மரங்கள், செடி கொடிகளின் இயல்புகள் ஆகியனவற்றை அறிந்து கொள்ளலாம்.

களிற்றையும் அடக்கும் ஆற்றல் இசைக்கு உண்டு என்ற உண்மையும், நீராடல் பற்றிய செய்தியும், மக்களின் நல் வாழ்விற்கான நெறிகளும் இவற்றில் விளக்கப்பட்டுள்ளன. மடலேறுதல், பொருந்தாக் காதல், ஒருதலைக் காமம் ஆகியன பற்றி செய்திகள் அதிகம் உள்ளன. மக்கள் காமனை வழிபாடு செய்தமை பற்றி அறிய முடிகிறது.

கலித்தொகையில் சேர, சோழ மன்னர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை. பாண்டிய மன்னர், பாண்டிய நாட்டுக் கூடல் மாநகர், வைகையாறு போன்ற பாண்டிய நாட்டுச் செய்திகளே அதிகம் கூறப்பட்டுள்ளன. பாரதக் கதை நிகழ்ச்சியான அரக்கு மாளிகை தீப் பிடித்தல், பீமன் காப்பாற்றல், திரௌபதியின் கூந்தலை துச்சாதனன் பற்றியிழுத்தல், பீமன் வஞ்சினம், துரியன் தொடையை பீமன் முறித்தது ஆகிய புராணச் செய்திகள் இதில் இடம்பெற்றுள்ளன. சிவன், திருமால், முருகன், கண்ணன், பலராமன் முதலிய கடவுளர்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. பிற தொகை நூல்களில் இடம் பெறாத 'காமன் வழிபாடு' பற்றியும் கலித்தொகை கூறுகிறது. முருகனின் படைவீடுகள் பற்றிய குறிப்புகளும் இதில் இடம் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலித்தொகையில் சிவன் பற்றிய பாடல்கள்

## 1. ஆறறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து

*சிவன் ஆடிய மூவகைச் சிவதாண்டவங்களான கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் ஆகியவை பற்றிக் கூறும் பாடல்.*

***பாடியவர் : கபிலர்***

ஆறறி அந்தணர்க்கு, அருமறை பல பகர்ந்து,
தேறு நீர் சடைக் கரந்து, திரிபுரம் தீ மடுத்துக்,
கூறாமல் குறித்ததன் மேற் செல்லும், கடும் கூளி,
மாறாப் போர் மணி மிடற்று எண் கையாய்! கேளினி;

படு பறை பல இயம்பப், பல்லுருவம் பெயர்த்து நீ
கொடுகொட்டி ஆடுங்கால், கோடு உயர் அகல் அல்குல்
கொடிபுரை நுசுப்பினாள், கொண்ட சீர் தருவாளோ?
மண்டுடமர் பல கடந்து, மதுகையான் நீறணிந்து,

பண்டரங்கம் ஆடுங்கால், பணை எழில் அணை மென்தோள்
வண்டரற்றும் கூந்தலாள், வளர் தூக்கு தருவாளோ?
கொலை உழுவைத் தோலசைஇக், கொன்றைத்தார் சுவல் புரளத்
தலை அங்கை கொண்டு நீ காபாலம் ஆடுங்கால்,

முலையணிந்த முறுவலாள் முன் பாணி தருவாளோ?
எனவாங்கு, பாணியும் தூக்கும் சீரும் என்று இவை
மாண் இழை அரிவை காப்ப,
ஆணமில் பொருள் எமக்கு அமர்ந்தனை ஆடி.

*(கலித்தொகை-கடவுள் வாழ்த்து-1: 1-16)*

**விளக்கவுரை:**

அந்தணர் என்போர் அறவோர்கள். ஒழுக்கநெறியை நன்கு அறிந் தவரே அந்தணர். அவர்க்கு அருமையான மறை நூல்கள் பலவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் முன்னர்ப் பகர்ந்தாய். தெளிந்த நீர் உடைய கங்கையின் கொடிய வேகத்தை ஒடுக்குவதற்காக, நின் சடையிலே அதனை ஏந்தி அடக்கிக் கொண்டாய். கொடுஞ்செயல்கள் புரிந்த திரிபுரங்களையும் நெருப்பிட்டு நீறாக்கி நின்றாய். வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாதவனாக, அவற்றைக் கடந்து, அவற்றிற்கும் மேலாகவும் நிற்பாய். முதுகிடாத, கடுமையான கூளிப்போர் ஆற்றும் ஆற்றலும் உடையாய் நீலமணி போலக் கறை விளங்கும் கழுத்தும், எட்டுக் கரங்களும் கொண்டு விளங்குவாய். அத்தகைய ஐயனே யான் கூறுவதையும் கேட்பாயாக:

ஒலிமிக்க பறைகள் பல ஒலிசெய்ய, மாறிமாறிப் பல்வேறு வடிவங்களும் காட்டிக்காட்டி, நீ கொடுமையான "கொட்டி" என்ற கூத்தினை ஆடுவாயே, அப்போது பக்கம் உயர்ந்து, அகன்ற அல்குலினையும், கொடி போன்ற நுண்மையான இடையினையும் உடையவளோ, தாளம் முடிந்து விடுங் காலத்தைக் குறிக்கும் சீரைத்தந்து நின்னருகே நிற்பவள்? மிகு தியாகச் செல்லுகின்ற கொடியபோர்கள் பலவற்றையும் வென்றாய்.அந்த வலிமையால், பகைவரது உடல்கள் வெந்த நீற்றையும் அணிந் தாய்.

நீ, பாண்டரங்கம் என்ற கூத்தை ஆடுங்காலத்திலே, மூங்கிலழகும் அணைபோன்ற மென்தோளும், வண்டுகள் ஒலிக்கும் கூந்தலும் உடையவளோ, தாளத்தின் இடைக்காலத்தை உணர்த்துவதான தூக்கைத் தந்து நிற்பவள்? கொலைக் குணமுடைய வேங்கையைக் கொன்று அதன் தோலை உடுத்திருப்பாய். கொன்றைமலர் மாலை தோள்களிலே கிடந்து புரளக், கையிலே தலையை ஏந்திக், "காபாலம்" என்ற கூத்தினை ஆடுவாய்.

அப்போது முல்லையரும்புகளை அணிந்தது போன்ற முறுவலை உடையவள் தானோ நினக்குத் தாளத்தின் முதலான பாணியினைத் தருபவள்? என்று, அவ்விடத்திலே, நீ அழித்தல் தொழிலை நடத்தும் காலங்களிலே, பாணியும் தூக்கும் சீரும் என்ற தாள காலங்களை, மாட்சி பொருந்திய அணியுடையவளான உமாதேவியானவள் காத்து நிற்க, நீ ஆடுவாயோ? அம்மையின் அந்த அருட்செயலினாற் போலும், நீ நின் வெம்மையை ஒடுக்கி, ஓர் உருக்கொண்டு, அன்பற்ற பொருளான எம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கும், வந்து பொருந்தி நின்றாய்? அதன் காரண த்தைக் கூறுவாயாக, பெருமானே!

**தெளிவுரை:**

உலகை அழிக்கும் நின் உக்கிர நடனத்துக்குச் சக்தி துணை செய்யமாட்டாள் என்று குறிக்கவே, தருவாளோ? என்றனர். அல்லது, அவள் தருவாளோ? அதுதான் நீ எமக்கு அமர்ந்தனை போலும் எனவும் கொள்ளலாம். தாள காலத்தில், முதல் இடை கடை நிலையைக் குறிப்பன பாணி, தூக்கு, சீர் என்பன மூன்றும், கல்லால நீழலில் அந்தணர்க்கு நான்மறை உரைத்ததும், பகீரதனுக்காகச் சடையிலே கங்கையைத் தாங்கியதும், சிரித்து முப்புரம் எரித்ததும், கூளிப்போர் என்ற உக்கிர நடனம் ஆடியதும், தேவர்களைக் காக்க நஞ்சுண்டு கழுத்திலே அடக்கியதும் ஆகிய பழைய வரலாறுகள் இதன் கண் சொல்லப்பட்டன.

கொட்டி ஊழிக்காலக் கூத்தையும், பாண்டரங்கம் ரிதிபுரத்தை எரியச் செய்து அந்த நீற்றைப் பூசி (சுடலைப் பொடி) ஆடிய கூத்தையும், காபாலம் நான்முகன் செருக்கடக்க அவன் தலையைக் கையாற் கிள்ளி எடுத்து ஆடிய கூத்தையும் உணர்த்துவன. அனைத்தும் அழியும் ஊழிக்கூத்து.

முதலது: பிறர்க்குத் தீங்கு விளைத்தாரை ஒடுக்கியது.
இரண்டாவது: ஆணவம் மிக்கதனால், அதனை அழித்தது.
மூன்றாவது: ஆறு அறி என்பதனை, ஆறங்கம் அறிந்த என்பர்.

பிரிவு நிகழ்கின்ற காலமோ வெம்மை மிகுந்த கோடைக் காலம். அவ் வெம்மையோடு, பிரிவின் வெம்மையும் சேர இல்வாழ்வே கருகிவிடும் நிலை ஏற்படுகின்றது. இந்நிலை மாற வேண்டுமானால், அவள் கூட்டுறவு எண்ணம், அவன் உள்ளத்திலே உறைக்க வேண்டும். அவள் நினைவு அவன்பால் எழ வேண்டும். அவள்பால் அவனுக்கு அன்பும் ஆர்வமும் பிறக்க வேண்டும். இந்தச் சிவசக்திக் கலப்பு நிலையையே, வெம்மையும் தண்மையும் இணையும் வாழ்வியல் நிலையையே, சிவனின் கோர தாண்டவமாகவும், அதனால் துடிப்புற்ற சக்தி அவனுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் நினைவு தோன்றவும், அருள் பிறக்கவும் தாளம் உணர்த்தி நிற்ப தாகவும் கவிஞர் காட்டுகின்றார். சிவசக்தி உறவு சகல உயிரினங்களின் ஆண்பெண் உறவுக்கு மூலமாகும் என்ற கருத்தினையே, கலிங்கத்துப் பரணியிற் சயங்கொண்டாரும்,

......... புவன வாழ்க்கைச்
செயல் வண்ணம் நிலைநிறுத்த மலைமகளைப்
புணர்ந்தவனைச் சிந்தை செய்வோம்"

என்று கூறிப் போற்றுகின்றார். மூவகைச் சிவதாண்டவங்கள் இதிற் கூறப்பெறுகின்றன. கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் என்பவை அவை. ஆண்மையும் வெற்றியும் தோன்ற நிகழ்த்தும் இச்சிவ தாண்ட வங்களின்போது, ஒரு பாதியான சக்தி ஒதுங்கி நிற்பாள் என்பதும், அவள் கருணையால் சிவனது சினம் தணியும் என்பதும் தத்துவம்.

## 2. தொடங்கற்கண் தோன்றிய முதியவன்

*திரிபுரம் எரித்தவன், முக்கண்ணன் என சிவனைக் குறிப்பிடும் பாடல்.*

***பாடியவர் : பெருங்கடுங்கோ***

தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக,
அடங்காதார் மிடல் சாய, அமரர் வந்து இரத்தலின்,
மடங்கல் போல் சினைஇ, மாயம் செய் அவுணரைக்
கடந்து அடு முன்பொடு, முக்கண்ணான் மூவெயிலும்,

*(கலித்தொகை-பாலைக்கலி-1: 1-4)*

**விளக்கவுரை:**

நான்முகன் முதலாகத் தேவர் பலரும் சென்று வேண்டச் சினத்துடன் சென்று முப்புரங்களையும் எரிக்கச் சிரித்த சிவனின் முகம் போலக் கதிரவன் தீப்பிழம்பாக்கிச் சுடுகின்றான். அம் முக்கண்ணன் பார்க்கவும், அம் முப்புரமும் கெட்டழிந்தது போல, அக் கதிரவனின் வெம்மையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைகளெல்லாம் வெடித்துச் சிதறிப் பாதையை அடைத்துக் கொண்டு கிடக்கின்றன.

## 3. இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்

*சிவன் ஈரமான சடையினை உடைய அந்தணன் எனவும், இராவணன் சிவன் உமாதேவியுடன் வீற்றிருந்த கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க முயலும் சம்பவமும் கூறப்பட்டுள்ள பாடல்.*

***பாடியவர் : கபிலர்***

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமை யமர்ந் துயர்மலை இருந்தனனாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல

*(கலித்தொகை-38-குறிஞ்சிகலி: 2: 1-5)*

**பொருள்:**

(ஈர்ஞ்சடை = ஈரத்தை உடைய சடையினை உடைய, அந்தணன் = இங்கு சிவன், அரக்கர் கோமான் = இராவணன், தொடி = ஓர் அணிகலன், பொலி = விளங்குகின்ற, உழப்பவன் = வருந்துபவன்)

**விளக்கவுரை:**

இமயமலையிடத்துப் பிறந்த மூங்கிலாகிய வில்லை வளைத்தவனும், ஈரத்தை உடைத்தாகிய சடையினை உடையவனும் ஆகிய இறைவன் இறைவியோடு பொருந்தி, உயர்ந்த கயிலை மலையில் இருந்தனன். அரக்கர்க்கு அரசனாகிய பத்துத் தலையை உடைய இராவணன் மலையை எடுப்பதற்குக் கையைக் கீழே செருகித் தொடிப் பொலிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற அத்தடக்கையினாலே அம்மலையை எடுக்க இயலாது வருந்திய நிலைபோல.

## 4. கொலைவன் சூடிய குழவித் திங்கள் போல்

*ஆயர்குல இளைஞர்கள் ஏறு தழுவுதலை விளக்கும் பாடலில், சிவன் நெற்றியிலே பிறைச் சந்திரனைச் சூடியவர் (பாடலில் இரண்டு இடங்களில்) எனவும், எமனைக் காலால் உதைத்தவர் எனவும் கூறும் பாடல்*

***பாடியவர் : சோழன் நல்லுருத்திரன்***

கொலைவன் சூடிய குழவித் திங்கள் போல்
வளையுபு மலிந்த கோடணி சேயும்,
பொரு முரண் முன்பின் புகல் ஏறு பல பெய்து
அரிமாவும், பரிமாவும், களிறும், கராமும்,
பெரு மலை விடரகத்து, ஒருங்கு உடன் குழீஇ,

எரிதிகழ் கணிச்சியோன் சூடிய பிறைக்கண்
உருவ மாலை போலக்,
குருதிக் கோட்டொடு குடர் வலந்தன:
கோட்டொடு சுற்றிக் குடர் வலந்த ஏற்றின் முன்
ஆடிநின்று அக்குடர் வாங்குவான் பீடுகாண்:

தொழீஇஇ, காற்றுப்போல் வந்த கதழ்விடைக் காரியை
ஊற்றுக் களத்தே அடங்கக்கொண்டு, அட்டு, அதன்
மேற்றோன்றி நின்ற பொதுவன் தகைகண்டை
ஏற்றெருமை நெஞ்சம் வடிம்பின் இடந்திட்டுச்
சீற்றமோடு ஆருயிர் கொண்ட ஞான்று இன்னன் கொல்
கூற்றென உட்கிற்று என் நெஞ்சு;

*(கலித்தொகை-103-முல்லைக்கலி: 3: 15-19, 25-29, 40-45)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கவுரை:**

மற்றொன்று சிவன் அணிந்த பிறைபோல் வளைந்த கொம்பு உடைய தாய் இருந்தது. இவற்றோடு வேறு பலவும் ஒன்றோடு ஒன்று முக்கார மிட்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

இறைவனின் பிறையிலே சூடிய சிவந்த மாலையைப் போலப் பகை யான எருதுகளை விரும்பிச் சென்று போக்குவனவாகிய ஏற்றினங்கள் குருதி தோய்ந்த கொம்புகளில் குடர்கள் சுற்றியிருக்க விளங்கின.

எருமை ஏற்றிற்கு உரியோனாகிய கூற்றுவனின் (எமனின்) நெஞ்சத் தைக் காலால் உதைத்து சீற்றமோடு சிவனார் அந்நாளில் பிளந்தபோது இப்படித் தான் இருந்தாரோ? அதைக்கண்டு என் நெஞ்சமும் திடுக் குற்றதோடி!

## காலனைக் காலால் உதைத்த சிவன்

மிருகண்டு முனிவர் என்பவர் மருத்துவதி என்னும் பெண்ணைத் திருமணம் செய்தார். ஆண்டுகள் பலவாகியும் குழந்தையில்லாத காரணத்தால் மிருகண்டு முனிவர் சிவபெருமானிடம் குழந்தை வேண்டி தவன் செய்தார். முனிவரின் தவத்தை மெச்சிய சிவபெருமான் என்ன வரம் வேண்டும் என்றுக் கேட்டார். முனிவர் குழந்தை வரம் அருள வேண்டுமென்றார்.

சிவன் "முனிவரே தீயகுணம், உடல் நோய், ஐம்பொறி ஊனம், அறிவின்மை இவற்றுடன் நூறாண்டு வாழும் பிள்ளை வேண்டுமா? அல்லது அழகு, அறிவு, நோயின்மை, எம்மருள் கொண்ட பதினாறு வயது வரை ஆயுள் கொண்ட பிள்ளை வேண்டுமா?" என கேட்க முனிவரோ பதினாறு வயது வரை ஆயுள் கொண்ட பிள்ளையே வேண்டுமென்றார். சிறிது நாட்களின் பின் தம்பதியருக்கு அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தனர். பிள்ளைக்கு மார்க்கண்டேயன் எனப் பெயரிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கண்டேயன் வளர வளர சிவபெருமான் அளித்த வரத்தை எண்ணி பெற்றோர் ஆனந்தப்படாமல் வருத்தப்பட்டுக் கொண்டு இருந் தனர். விபரம் அறிந்த மார்க்கண்டேயன் பெற்றோரை சமாதனம் செய்து தாம் பூரண ஆயுளுடன் இருக்க சிவபெருமானை நோக்கி தவ மிருந்து வெற்றியுடன் திரும்புவதாகக்க கூறி சென்றார். சிவனை நினைத்து ஒரு சிவலிங்கத்தை அமைத்து பூஜித்து வந்தார். சிவ பெருமான் அவரது பூஜைக்கு மகிழ்ந்து எம பயம் நீங்க வரமளித்தார்.

இவ்வாறிருக்கும் போது இவரது ஆயுள் முடிவடையும் சமயத்தில் எமதூதன் அழைத்தான். பூஜை பலனால் எமதூதனால் மார்க்கண் டேயன் அருகே நெருங்கக் கூட முடியவில்லை. முடிவாக எமனே வந்து, மார்க்கண்டேயன் சிவமே அடைக்கலம் என சிவலிங்கத்தை பற்றி வேண்டிக் கொண்டிருந்த போதே, பாசக்கயிற்றை வீசினார். பாசக் கயிறு சிவலிங்கத்தின் மீதும் வீழுந்தது. தன் மீதே பாசக்கயிற்றை வீசிய எமனைத் தன் காலால் உதைத்து அழித்தார் சிவன். பின்பு பூமாதேவியின் வேண்டுகோளுக்கு இணங்க எமனை உயிர்ப்பித்தார் சிவன். மார்க்கண்டேயனை நித்திய சிரஞ்சீவியாக்கி என்றும் பதினாறு என்று வரமளித்தார். மார்க்கண்டேயனுக்காக சிவபெருமான் எமனை உதைத்த கோலமே காலந்தக மூர்த்தியாகும்.

## 5. திருமறு மார்பன் போல்

*பலராமன், திருமால், முருகன் ஆகியோர் பற்றியும், முக்கண்ண னான சிவபெருமான் பற்றியும் கூறும் பாடல்.*

***பாடியவர் : சோழன் நல்லுருத்திரன்***

திரு மறு மார்பன் போல் திறல் சான்ற காரியும்,
மிக்கு ஒளிர் தாழ் சடை மேவரும் பிறை நுதல்
முக்கண்ணான் உருவே போல் முரண் மிகு குராலும்,
மா கடல் கலக்குற மா கொன்ற மடங்காப்போர்
வேல்வல்லான் நிறனேபோல் வெருவந்த சேயும், ஆங்குஅப்,

*(கலித்தொகை : 104-முல்லைக்கலி: 4: 10-14)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கவுரை:**

பனைக் கொடியோனாகிய பலராமனைப் போல வெள்ளைவெளேர் என்றிருந்தது ஓர் எருது. போர்க்குணம் மிகவும் உடையதான மற்றொன்று. திருமாலைப் போல கன்னங்கரேல் என்றிருந்தது மற்றொன்று. முக்கண்ணனான சிவபெருமானுடைய மேனியைப் போல செக்கச் செவேல் என்றிருந்தது இன்னொன்று. கடல் கலங்கச் சென்று சூரனை வென்ற வேலேந்திய முருகனின் நிறம் போல இளஞ் சிவப்பு நிறமுடன் விளங்கிற்று ஒன்று.

## 6. மணி மிடற்று அணி போல

*பலராமன், திருமால், முருகன் ஆகியோர் பற்றியும், நீலமணிக் கழுத்துடைய சிவபெருமான் பற்றியும் கூறும் பாடல்.*

**பாடியவர் : சோழன் நல்லுருத்திரன்**

தெள்ளிதன் விளங்கும் சுரிநெற்றிக் காரியும்,
ஒருகுழை யவன் மார்பில் ஒண்தார் போல் ஒளிமிகப்
பொருவறப் பொருந்திய செம்மறு வெள்ளையும்,
பெரும்பெயர் கணிச்சியோன் மணிமிடற்று அணிபோல
இரும்பிணர் எருத்தின் ஏந்து இமில் குராலும்

அணங்குடை வச்சிரத்தோன் ஆயிரம் கண் ஏய்க்கும்
கணங்கொள் பல்பொறிக் கடும்சினப் புகரும்
வேல்வலான் உடைத்தாழ்ந்த விளங்குவெண் துகில்ஏய்ப்ப
வாலிது கிளர்ந்த வெண்கால் சேயும்,

*(கலித்தொகை : 105-முல்லைக்கலி: 5: 10-18)*

**விளக்கவுரை:**

திருமாலின் சங்கைப் போல நெற்றியிலே சங்கு வெள்ளைச் சுட்டியுடன் விளங்கிய கரிய ஏறு ஒன்று. பலராமன் மார்பிலே சிவந்த மாலை விள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ங்குவது போல சிவப்பு மறு விளங்கும் வெள்ளை நிற ஏறு ஒன்று. சிவ பிரானின் நீலமணிக்கழுத்து போல தன் கழுத்தும் கபில நிறம் கொண்ட ஏறு ஒன்று. ஆயிரம் கண் இந்திரன் போல பல புள்ளிகளுடன் விளங் கிய புகர் நிறத்து எருது ஒன்று. முருகன் அணிந்த வெள்ளைத் துகில் போல வெள்ளைக் கால்களையுடைய சிவந்த ஏறு ஒன்று.

## 7. ஆடையான் மூடுய் அகப்படுப்பேன்

*கொன்றை மாலையையும், பிறையையும் சூடியிருக்கும் சிவபெரு மான் பற்றிக் கூறும் பாடல்*

***பாடியவர் : சோழன் நல்லுருத்திரன்***

ஆடையால் மூடுய் அகப்படுப்பேன், சூடிய
காணான் திரி தரும் கொல்லோ மணிமிடற்று
மாண் மலர்க் கொன்றை யவன்
தெள்ளியேம் என்று உரைத்துத், தேராது, ஒருநிலையே,

*(கலித்தொகை : 142-நெய்தல்கலி 25: 26-29)*

**விளக்கவுரை:**

வளரவிடாது தடுப்போம் என இழைத்த கூடலை என் ஆடையாலே மூடி மறைத்தேன். மணிமிடரும் மாட்சிமிக்க கொன்றை மாலையும் சூடி யிருக்கும் சிவபிரான், தான் சூடிய பிறையைக் காணாது தேடித் திரி வானோ? எனக்குக் கூறுங்களேன்.

## 8. அயம் திகழ் நறும் கொன்றை அலங்கல்

*சிவனை கொன்றை மாலை சூடியவன், திரிபுரத்தை எரித்தவன், கங்கையை சடையில் கொண்டவன், காளையை வாகனமாகக் கொண்டவன், சந்திரனை சடையில் வைத்திருப்பவன், திருவாதிரை நட்சத்திரத்தை உடையவன் எனக் கூறும் பாடல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாடியவர் : நல்லந்துவனார்*

அயந்திகழ் நறுங்கொன்றை அலங்கல் அம் தெரியலான்
இயங்கு எயில் எயப்பிறந்த எரிபோல, எவ்வாயும்,
கனைகதிர் தெறுதலின், கடுத்து எழுந்த காம்புத் தீ
மலைபரந்து தலைக்கொண்டு முழங்கிய முழங்குஅழல்

மயங்கு அதர் மறுகலின், மலை தலைக்கொண்டெனா,
விசும்புஉற நிவந்து அழலும், விலங்குஅரு வெஞ்சுரம்
இறந்து தாம் எண்ணிய எய்தல் வேட்கையால்,
அறம் துறந்து ஆயிழாய் ஆக்கத்தில் பிரிந்தவர்
பிறங்கு நீர் சடைக்கரந்தான் அணி அன்ன நின் நிறம்

பசந்து, நீ இனையையாய், நீத்தலும் நீப்பவோ?
கரி காய்ந்த கவலைத்தாய்க், கல் காய்ந்த காட்டகம்
வெரு வந்த ஆறு' என்னார், விழுப்பொருட்கு அகன்றவர்
உருவ ஏற்று ஊர்தியான் ஒள் அணி நக்கன்ன, நின்
உரு இழந்து இனையையாய், உள்ளலும் உள்ளுபவோ?

கொதித்து உராய்க்குன்று இவர்ந்து, கொடிக்கொண்ட
கோடையால், ஒதுக்கு அரிய நெறி என்னார், ஒண் பொருட்கு
அகன்றவர்
புதுத் திங்கள் கண்ணியான் பொன் பூண் ஞான்று அன்ன, நின்
கதுப்பு உலரும் கவினையாய்க் காண்டலும் காண்பவோ?-ஆங்கு

அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த
பெரும்தண் சண்பகம் போல, ஒருங்கு அவர்

பொய்யார் ஆகுதல் தெளிந்தனம்
மைஈர் ஓதி மடமொழி யோயே

*(கலித்தொகை 150-நெய்தல்கலி - 32: 1-24)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கவுரை:**

நீர்நிலையின் அண்மையில் மாலைபோல் விளங்கும் கொன்றை மலர் மாலையையுடைய சிவனின் திரிபுரத்தை எய்தலால் தோன்றின முழங் கும் வெப்பத்தையுடைய தீ வானில் உயர்ந்து விளங்குவது போல், செறிவான கதிர்களையுடைய ஞாயிறு எங்கும் சுடும்.அதனால் காய்ந்த மூங்கில் தம்மிலே இழைதலைக் கைக்கொண்டு வானிலே பொருந்த உயர்ந்து வெப்பத்தைச் செய்யும், விலங்குகள் பலகாலும் திரிதலால் மயங்கிய வழிகளை உடைய மலைகள் பரந்து குறுக்கிட்டு விளங்கும் இத்தகைய இயல்பு கொண்ட அரிய சுரத்தை ஆராய்ந்தெடுத்த அணி கலன் அணிந்தவளே,

தாம் எண்ணிய செயல்களை அடைவதால் உண்டான விருப்பத்தால் அறத்தைக் கைவிட்டுக் கொடிய காட்டைக் கடந்து விளங்கும், பெருகி வரும் கங்கை நீரைச் சடையில் கொண்ட சிவபெருமானின் அழகிய நிறம் போன்ற அழகை அடைய உன் நிறம் பசலை கொண்டு இத் தன்மையாக உன்னைக் கை விடுதலும் செய்வாரோ! அவ்வாறு செய்யார்.

வெந்த யானையை உடைய பல வழிகளை உடையதாய்க் கற்கள் காய் ந்த காட்டை அஞ்சத்தக்க வழி என்று எண்ணாதவராய்க் காளையான ஊர்தியை உடைய சிவனைப் போன்ற சிறந்த பொருளின் பொருட்டுப் பிரிந்து போனவர், ஒளியுடைய உன் வடிவை இழந்து நீ இத்தன்மை யுடைய அப்பொருளை நினைக்கவும் செய்வாரோ? செய்யார்.

ஞாயிறு கிழக்கில் தோன்றிக் கொதித்துப் பரந்து தான் கொண்ட கோடைக் காலத்தில் போவதற்கு அரியது என்று எண்ணாதவராய்ப் புதிய திங்களை சடைக் கண்ணியாக சூடியிருக்கும் சிவபெருமான் பூண்டிருக்கும் அழகிய பூணான பொங்கரவம் போல பொன்னால் செய்த தலைக் கோலங்கள் தாழ்ந்து விளங்கிய நின்மயிர் அவ்வாறி ன்றிக் காய்கின்ற இயல்புடையாய் நீ விளங்க அந்தப் பொருள் ஆசையை மனத்தால் காணவும் செய்வாரோ அவ்வாறு செய்யார். கருமை நெய்ப்பு ஆகியவற்றை உடைய கூந்தலையும் மடப்பமுடைய மொழியையும் உடையவளே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதற்கு அரிய ஆதிரை நாளை உடைய சிவபெருமான் திருமேனி அழகை அடையுமாறு மலர்ந்த பெரிய இந்தச் சண்பகம் பருவம் பொய்க்காதது போல அவர்தம் கூறிய பருவத்தைப் பொய்க்காமல் வருவார் என்பதை அவர் சொல்லால் நானும் நீயும் தெளிந்தோம். அப்பருவம் கழிவதற்கு முன் அவர் வருவார். அவர் மொழியை உண்மை எனத் தெளிவாயாக என்று தோழி தலைவியை ஆற்றுவித்தாள்.

கலித்தொகையின் இறுதிப்பாடலான இப்பாடல் மொத்தமாக 24 வரிகளைக் கொண்டதாகும். இப்பாடல் முழுவதிலும் மொத்தமாக 6 இடங்களில் சிவன் பற்றிக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிபாடல்

## (பொ.ஆ. 1 ஆம் நூற்றாண்டு)

சங்க காலத்தில் எழுதப்பட்ட எட்டுத்தொகை நூல்களில் பரி பாடலும் ஒன்றாகும். இது எட்டுத்தொகை நூல்களுள் அகமும், புறமும் கலந்து அமைந்த ஒரே நூலாகும். மேலும் சங்க கால நூல்களில் உள்ள இரண்டு பக்தி நூல்களில் ஒன்று பரிபாடல் என்பது இதன் சிறப்பம்சமாகும். இந் நூலில் திருமால், முருகன், கொற்றவை ஆகிய தெய்வங்கள் பற்றியும், மதுரைநகர், வைகை ஆறு ஆகியவை பற்றியும் புகழ்ந்து பேசும் எழுபது பாடல்கள் இருந்தன. இப்பாடல்களில் அதிக மானவை அழிந்து போய் விட்ட நிலையில் தப்போது 22 பாடல்களும், சில சிதைந்த பாடல்களுமே எஞ்சியுள்ளன. புறத்திரட்டிலிருந்து வேறு இரு பாடல்களும் கிடைத்துள்ளன.

இந்நூல் பொ.ஆ.மு 161 ல் எழுதப்பட்டதாக அறிஞர்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர். இது பொ.ஆ. 3ஆம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்தது என டாக்டர்.மா.இராசமாணிக்கனார் கூறியுள்ளார்.

பரிபாடலைத் தொகுத்தார், தொகுப்பித்தார் பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை. இதிலுள்ள பாடல்களை இயற்றியோர் பதின்மூவர். இவற்றுக்கு இசை வல்லுநர்களைக் கொண்டு பண் வகுக்கப்பட்டுள் ளன. பாடலாசிரியர் பெயருடன், இசை வகுத்தவர் பெயரும், பண்ணின் பெயரும் ஒவ்வொரு பாடலுக்கும் கீழ் தரப்பட்டுள்ளன. கண் ணகனார் முதல் மருத்துவன் நல்லச்சுதனார் ஈறாகப் பத்து இசைய றிஞர்கள் பண் வகுத்துள்ளனர்.

முருகப் பெருமானுக்கும், திருமாலுக்கும் தொடர்புடைய புராணச் செய்திகளும், வைகை நதியில் நீராடுவோரின் பல்வேறு செயற்பாடு களும் சுவையுடன் இதில் கூறப்பட்டுள்ளன. இசை, கூத்து ஆகிய கலைகள் பற்றிய நுட்பமான செய்திகள் இதில் உண்டு. திருப்பரங் குன்றத்தில் ஓவிய மண்டபம் இருந்த செய்தியையும் இதில் அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற உயிர்களைக் கொல்வோர், வெகுளி உடையோர், அறநெறியைப் பின்பற்றாதார், கூடாத ஒழுக்கம் கொண்டோர், மறுமையை நம்பாதோர் ஆகியோ முருகன் அருள் பெற மாட்டார்கள் என்று ஒரு பாட்டுக் கூறுகின்றது. (5 : 73-77)

பரிபாடலில் திருமாலுக்கு 8 பாடல்களும், முருகனுக்கு(செவ்வேள்) 31 பாடல்களும், காடுகாள் (காட்டில் இருக்கும் காளிக்கு அதாவது கொற்றவைக்கு) 1 பாடலும், வைகைஆற்றுக்கு 26 பாடல்களும் பெரு நகரமாகிய மதுரைக்கு 4 பாடல்களும் என மொத்தம் 70 பாடல்கள் உள்ளன. ஆனால் இவை முழுமையாகக் கிடைக்கவில்லை.

## முருகன், திருமால் ஆகியோருக்காகப் பாடப்பட்ட பரிபாடலில் சிவன் பற்றிய பாடல்கள்

### 1. காஅய் கடவுள் சே எய் செவ்வேள்

*ஊழிக்காலத்தின் முடிவிலே அனைத்தையும் அழித்துத் தானே தனியனாக நிற்கும் கடவுளாகிய சிவபெருமானின் குமாரனே என் சிவன் பற்றிக் கூறும் பாடல்.*

***பாடியவர் : கடுவன் இளவெயினனார்***

காஅய் கடவுள் சே எய்! செவ்வேள்
சால்வ தலைவ எனப் பேஎ விழவினுள்
வேலவன் ஏத்தும் வெறியும் உளவே;
அவை, வாயும் அல்ல; பொய்யும் அல்ல;
நீயே வரம்பிற்றில் உலகம் ஆதலின்

சிறப்போய்! சிறப்பின்றிப் பெயர்குவை;
சிறப்பினுள் உயர்பாகலும்
பிறப்பினுள் இழிபாகலும்
ஏனோர் நின் வலத்தினதே,

*(பரிபாடல்- 5: 13-21)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கவுரை:**

பெருமானே! ஊழிக்காலத்தின் முடிவிலே அனைத்தையும் அழித்துத் தானே தனியனாக நிற்கும் கடவுளாகிய சிவபெருமானின் குமாரனே! செம்மை வண்ணத்தோடு அனைவராலும் விரும்பப்படும் சிறப்பைக் கொண்ட செவ்வேளே! சிறந்த குணங்களின் உருவாக விளங்குவோனே எம் தலைவனே! எனவெல்லாம் நின்னை அழைப்போனாகிய பூசாரி யானவன், நின்னைப் போற்றித் துதித்து அழைத்து இயற்றும் வெறியயர் களத்துள், அச்சத்தை உண்டாகும் அவ்விழவுக் களத்தினுள், நீ அவன் பால் தோன்றி வருதலும் உண்மையே.

## 2. ஆதி அந்தனன் அறிந்துபரி கொளுவ

சிவன் திரிபுரத்தை அழித்தமை, தேவர்கள் கொடுத்த உணவை உண்டமை, உமாதேவியாரை மணம் முடித்தமை மற்றும் நெற்றிக்கண்ணை உடையவன், இந்திரனுக்கு கொடுத்த வரத்திற் கமைய கருவை அழித்தமை ஆகியற்றைக் குறிப்பிடும் பாடல்.

***பாடியவர் : கடுவன் இளவெயினனார்***

ஆதி அந்தனன் அறிந்துபரி கொளுவ,
வேத மாபூண் வையத் தேர் ஊர்ந்து,
நாகம் நாணா மலை வில்லாக,
மூவகை ஆரெயில் ஓரழல் அம்பின் முளிய

மாதிரம் அழல வெய்து, அமரர் வேள்விப்
பாகம் உண்ட பைங்கண் பார்ப்பான்
உமையோடு புணர்ந்த காம வதுவையுள்,
அமையாப் புணர்ச்சி அமைய, நெற்றி
இமையா நாட்டத்து ஒருவரம் கொண்டு

விலங்கென விண்ணோர் வேள்வி முதல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிகதிர் மணிப்பூண் அவற்குத்தான் ஈத்தது
அரிதென மாற்றான் வாய்மையன் ஆதலில்
எரிகனன் றானாக் குடாரி கொண்டவன்உருவு
திரிந்திட்டோன் இவ் வுலகேழும் மருளக்,

*(பரிபாடல் 5 : 22-35)*

**விளக்கவுரை:**

ஆதி அந்தணனாகிய பிரமதேவன் செலுத்தும் முறை யறிந்தோனாய்ச் செலுத்த, வேதங்களாகிய குதிரைகள் பூட்டப் பெற்ற வையகமாகிய தேரிலேறிச் சென்றான் சிவபிரான். மேரு மலையினை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பினை நாணாகவும் கொண்டவில்லினை, அவன் கைக்கொண்டான். பொன், வெள்ளி, இரும்பு என்னும் மூவகைப்பட்ட உலோகங்களால் அமைந்த கடத்தற்கரிய திரிபுரக் கோட்டைகளைக் குறித்து ஓர் அழல் அம்பினை ஏவினான். திக்கெல்லாம் பற்றி எரியச் சென்ற அவ்வம்பினால் அக்கோட்டைகள் மூன்றும் எரிந்து அழிந்தன.

அவன் வெற்றியைப் போற்ற நினைத்தனர் அமரர்கள். அவனைக் குறித்த வேள்வியை அவர்கள் செய்தனர். அதன்கண், அவர்கள் அளி த்த அவிர்ப்பாகத்தை (தேவர் உணவு) உண்ட சிவபிரான் தன் சீற்றம் தணிந்தான். பசுமையான கண்களைக் கொண்டவனானான். உமையம் மையை மணந்து, அவளோடுங் கூடிக்கலந்த இன்பக் கலவியுள், அடங்குதலற்ற புணர்ச்சியுள், பொருந்திக் களிப்பவனும் ஆயினான். ஒளிபரப்பும் மணிகள் பதித்த அணிகளைப் பூண்டோனும், தேவர்கள் செய்த வேள்விக்கு முதல்வனாகத் திகழ்ந்தோனுமாகிய தேவர் கோமா னான இந்திரன், இமைத்தலற்ற நெற்றிக் கண்ணைக் கொண்டோனான அச்சிவபிரானிடம், “உங்கள் கூட்டத்தால் உண்டாகும் கருவைச் சிதை க்க வேண்டும்” என்ற ஒரு வரத்தை வேண்டிப் பெற்றான்.

அவ்விந்திரனுக்குத் தான் தந்தருளிய வரத்தினை மாற்றுதற்கு அரிது எனத், தான் வாய்மையாளன் ஆதலினாலே, சிவபிரான் சிந்தித்தான். நெருப்புக்கனன்று தணியாதே கொழுந்து விட்டு எரியும் தன் மழுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையைக் கொண்டு, அக்கருவின் உருவத்தை மூவேழுலகங்களும் மருட்சி கொள்ளும்படியாகச் சிதைத்து, அழித்து விட்டான்.

## 3. மண்மிசை அவிழ்துழாய் மலர்தரு செல்வத்து

*சிவன் காளை வாகனத்தைக் கொண்டவன், திருவாதிரை நட்சத்திரத்தை உடையவன் மற்றும் சிவன் குடிகொண்டிருக்கும் இமயமலை ஆகியவை பற்றிக் கூறும் பாடல்.*

***பாடியவர் : நல்லந்துவனார்***

மண்மிசை அவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப்
புள்மிசைக் கொடியோனும் புங்கவம் ஊர்வோனும்
மலர்மிசை முதல்வனும் மற்றவனிடைத் தோன்றி
உலகிருள் அகற்றிய பதின்மரும் இருவரும்
மருந்துரை இருவரும் திருந்துநூல் எண்மரும்,

ஆதிரை முதல்வனிற் கிளந்த
நாதர்பன் னொருவரும் நன்திசை காப்போரும்
யாவரும் பிறரும் அமரரும் அவுணரும்
மேவரு முதுமொழி விழுத்தவ முதல்வரும்
பற்றாகின்று நின் காரண மாகப்
பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்.

*(பரிபாடல் 8 : 1-11)*

**விளக்கவுரை:**

நிலத்திடத்தே தோன்றி மலர்கின்றதான திருத்துழாய் மலரினையும், செந்தாமரை மலரானது தந்த செல்வத்துக்கு உரியவளான திருமக ளையும், புட்களிற் சிறந்ததான கருடன் உருவம் எழுதப் பெற்ற கொடி யையும் உடையவன் திருமால். அவனும், இடப ஊர்தியை உடைய வனாகிய சிவபிரானும், தாமரை மலர்மீது இருப்போனாகிய நான்முக னும், அவனிடமிருந்து தோன்றி உலகத்தின் இருளைப் போக்கியவரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதித்யர் பன்னிருவரும், தேவ மருத்துவர்கள் இருவரும், சிறந்த நூற் புலமை கொண்டோராகிய வசுக்கள் எண்மரும்,

ஆதிரை முதல்வனாகிய சிவபிரானது பெயராலேயே சொல்லப் படுகின் றவரான பதினொரு ருத்ரர்களும், நல்ல திசைகளைக் காக்கும் திக் பாலகர்களான எண்மரும், மற்றுமுள்ள தேவர்கள் யாவரும், இவரொ ழிந்த அமரரும், அவுணரும் ஆகிய பிறருமாகிய எல்லாரும், விரும்பத் தக்க வேதங்களைக் கற்ற சிறந்த தவ முதல்வர்களான எழுவரும், நின்னைக்கண்டு போற்றும் பொருட்டாக இத்திருப்பரங்குன்றத்திற்கு வருபவர் ஆகின்றனர். ஆதலினாலே இப்பரங்குன்றமானது எம்பெருமா னாகிய சிவபிரான் குடிகொண்டிருக்கும் இமயக் குன்றமாகிய திருக் கயிலாயத்தையே ஒப்புடையதாக விளங்கும்.

## 4. கடம்பமர் செல்வன் கடிநகர் பேண

*நீலகண்டன் சிவன் எனவும், சிவனுக்கு உமாதேவியார் பெற்றுத் தந்த முருகப் பெருமான் மற்றும் அவரின் கோயில் பற்றியும் கூறும் பாடல் கோயில்*

***பாடியவர் : நல்லந்துவனார்***

கடம்பமர் செல்வன் கடிநகர் பேண
மறுமிடற் றண்ணற்கு மாசிலோள் தந்த
நெறிநீர் அருவி அசும்புறு செல்வம்
மண்பரிய வானம் வறப்பினும் மன்னுகமா
தண்பரங் குன்றம் நினக்கு

*(பரிபாடல் 8 : 126-130)*

**விளக்கவுரை:**

இவ்வாறு தன்னடியவர் விரும்பி வந்து வழிபட்டுப் போற்றக், கறைமிடற் றண்ணலாகிய சிவபெருமானுக்கு மாசற்றோளான உமாதேவியார் பெற் றுத்தந்த செல்வனாகிய முருகப் பெருமானின் கோயில் விளங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதாகும். நெறிப்படச் செல்லும் அருவி நீரும், ஊற்று நீருமாகிய நீர் வளம், தரை வெடிப்புற மழை பெய்தலற்று வறண்டு போயின கால த்தும், தண்ணிய திருப்பரங்குன்றமே, நின்னிடத்து என்றும் நிலைபெற்று நின்று, நினக்குச் சிறப்பைத் தருவதாக.

## 5. விரிசடைப் பொறையூழ்த்து விழுநிகர்

*சிவன் செந்தாமரை போன்ற மேனியுடையவன், கங்கையைத் தலையில் கொண்டவன், நீலகண்டன் எனக் கூறும் பாடல்.*

***பாடியவர் : நல்லந்துவனார்***

எரிமலர்த் தாமரை இறை வீழ்த்த பெருவாரி
விரிசடைப் பொறையூழ்த்து விழுநிகர் மலரேய்ப்பத்
தணிவுறத் தாங்கிய தனிநிலைச் சலதாரி
மணிமிடற் றண்ணற்கு மதியாரற் பிறந்தோய், நீ
மையிருநூற் றிமையுண்கண் மான்மறிதோள் மணந்த ஞான்று.

*(பரிபாடல் 9 : 4-8)*

**விளக்கவுரை:**

எரியொத்த செந்தாமரை மலரைப்போலும் திருமேனியினைக் கொண்ட இறைவனான சிவபெருமான், தன் சடையிடத்தே தாங்கித் தரைக்கண் வீழச் செய்த பெருவெள்ளமான கங்கை நீரானது, அப்பெருமானது விரித்த செஞ்சடைப் பொற்றையிடத்தே தோன்றித் தரைக்கண் விழுகி ன்ற ஒப்பற்ற மலரைப் போலத் தோன்றும். இவ்வாறாகக் கங்கையின் சீற்றம் தணியுமாறு தாங்கிக் காத்தவன், தானே தனிமுதல் என்னுஞ் சிறப்புடைய சலதாரி எனப் பெற்றனன்.நீலமணிபோலும் கறைவிளங்கும் கழுத்தையுடையோனாகிய அத்தலைவனுக்கு, மதிப்புவாய்ந்த கார்த் திகை பெண்களிடத்தே தோன்றிய பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. விரிகதிர் மதியமொடு வியல் விசும்பு புணர்ப்ப

*சிவன் எரி போன்ற சடையை உடையவன், அழகிய களிறு போன்றவன் எனக் கூறும் பாடல்.*

***பாடியவர் : நல்லந்துவனார்***

விரிகதிர் மதியமொடு வியல் விசும்பு புணர்ப்ப,
எரிசடை எழில்வேழம் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்தமூன்று ஒன்பதிற் றிருக்கையுள்
உருகெழு வெள்ளிவந் தேற்றியல் சேர,

*(பரிபாடல் 11 : 1-4)*

**விளக்கவுரை:**

விரிகதிர்களையுடைய மதியத்தோடு அகன்ற வானத்துக்கண்ணே ஒன்று படுத்திச் சேர்ப்பதன் பொருட்டாக, எரி போன்ற சடையினையுடைய வனாகிய அழகிய களிறு போன்ற சிவபெருமான் தலைமை கொள்ள, அவனுக்குக் கீழாக அமர்ந்திருந்து அறங்கேட்ட முனிவர்கள், வீதிக ளாகப் பகுத்தமைத்தவை மூன்றாகும். அம்மூன்று வீதிகளும் ஒவ்வொ ன்றினும் ஒன்பது நட்சத்திரங்களின் இருக்கைகளைப் பொருந்தியவாகப் பணிரெண்டு இராசிகளாக விளங்கும்.

## 7. கனைக்கும் அதிர்குரல் கார்வானம் நீங்கப்

*திருவாதிரை நாளிலே அந்தணர் சிவபெருமானுக்கு விழா எடுத் தமை பற்றிக் கூறும் பாடல்.*

***பாடியவர் : நல்லந்துவனார்***

கனைக்கும் அதிர்குரல் கார்வானம் நீங்கப்
பனிப்படு பைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்கப்
புரிநூல் அந்தணர் பொலங்கலம் ஏற்ப
வெம்பாதாக வியனில வரைப்பென,

*(பரிபாடல் 11 : 74-80)*

**விளக்கவுரை:**

முழக்கத்தோடுங் கூடிய அதிர்கின்ற குரலைக் கொண்ட மேகங்களும் வானத்தை விட்டு நீங்கின. பெய்கின்ற பனியினாலே நடுங்குதலைக் கொண்ட பின்பணிப் பருவமும் வந்தது. அக்காலத்து ஞாயிறு காய்ந்து வருத்துவதில்லை. குளிர்ந்தபின் மழையும் பெய்யும்.அக்காலத்தே களங் கமாகிய மறுவோடு விளங்கும் பெரிய திங்களின், பிறை நிறைவுற்று விளங்கும் பௌர்ணமி நாளாகிய திருவாதிரை நாளில், விரிந்த நூல் களைக் கற்றோரான அந்தணர், சிவபிரானுக்கு விழாச் செய்தலைத் தொடங்கினர். முப்புரி நூலினரான அந்தணர் பூசைப் பொருள்களைப் பொற்கலங்களுள் ஏந்தியவாறு நின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிற்றுப்பத்து

**(பொ.ஆ. 1 ஆம் நூற்றாண்டு)**

பதிற்றுப்பத்து எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். இது சேர மன்னர்கள் பதின்மரைப் பற்றி பத்துப் புலவர்கள் பத்துப்பத்தாகப் பாடிய பாடல்களின் தொகுப்பு நூலாகும். இந்த நூலில் முதற் பத்தும், இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. ஏனைய எட்டுப் பத்துகளே கிடைத்துள்ளன. இந்த எண்பது பாடல்கள் இரண்டு சேரர் மரபைச் சேர்ந்த எட்டுச் சேர மன்னர்களின் வரலாற்றை எடுத்துரைக்கின்றன.

சேர மன்னர்களின் காதற்சிறப்பு, கல்வித்திறன், மனத்திண்மை, புகழ்நோக்கு, ஈகைத்திறன் ஆகிய பண்புகளையும் படை வல்லமை, போர்த்திறன், குடியோம்பல் முறை, பகையரசர் பால் பரிவு, கவிஞரை காக்கும் பண்பு, பெண்களை மதிக்கும் மாண்பு ஆகிய ஆட்சி மற்றும் பல்வகை திறன்களையும் பதிற்றுப்பத்து பாடல்கள் சித்தரிக்கின்றன.

இந்நூலின் காலம் பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டு எனக் கருதப் படுகின்றது. அனைவராலும் இது கடைச்சங்க கால நூல் என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கபிலர், பரணர் ஆகிய கடைச்சங்க புலவர் களால் இந்நூல் பாடப்பட்டுள்ளதால் இந்நூல் கடைச்சங்க கால நூல் என்று கூறப்படுகிறது.

## பதிற்றுப்பத்து பாடல்களில் சிவன்

## 1. எரி எள்ளு அன்ன நிறத்தன்

*சிவனை முழுதும் போற்றிப்பாடும் கடவுள் வாழ்த்துப் பாடல்*

***பாடியவர் : அறியப்படவில்லை***

எரி எள்ளு அன்ன நிறத்தன், விரி இணர்க்
கொன்றையம் பைந்தார் அகலத்தன், பொன்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எயில் எரியூட்டிய வில்லன், பயில் இருள்
காடு அமர்ந்து ஆடிய ஆடலன், நீடிப்
புறம் புதை தாழ்ந்த சடையன், குறங்கு அறைந்து

வெண்மணி ஆர்க்கும் விழவினன், நுண்ணூல்
சிரந்தை இரட்டும் விரலன், இரண்டு உருவாய்
ஈர் அணி பெற்ற எழிற்றகையன், ஏரும்
இளம்பிறை சேர்ந்த நுதலன், களங்கனி
மாறேற்கும் பண்பின் மறுமிடற்றன், தேறிய

சூலம் பிடித்த சுடர்ப்படைக்
காலக் கடவுட்கு உயர்க மாவலனே.

*(பதிற்றுப்பத்து-கடவுள் வாழ்த்து)*

**விளக்கவுரை:**

சிவபிரானின் செம்மேனி வண்ணமும், அளவில்லா ஆற்றலும், அவன் கூத்தியற்றும் அற்புதப் பாங்கும், அவன் சக்தியோடு கலந்திருக்கும் அந்தத் தனித்தன்மையும், அவன் அருளின் செவ்வியும், பிறவும் கூறி வியந்து போற்றுகிறார் புலவர்.

எரியையும் எள்ளுவது போன்ற நிறம் என்றது எரி நெருப்பினைக் காட்டிலும் செம்மையும், வெம்மையும், ஆற்றலும், ஒளியும் கொண்ட தான செம்மேனி வண்ணம் என்பதாம். அத்திருமேனி உடையானின் திருமார்பிடத்தே கொன்றைப் பைந்தார் அழகு செய்தபடி விளங்கும் என்றது, அவனது தன்மையையும், அழகுணர்வையும் நினைந்து மகிழ்ந் ததாம். பொன்றார் எயில் எரியூட்டிய வில்லன் என்றது அடியவர்க்கு அடியவனாகி அவர்க்கு தீங்கிழைப்பாரின் ஆணவத்தை அழித் தொழிக்கும் சினத்தோடு செயல்பட்டு அருளுகின்ற உளப்பாங்கு உடை யவன் அவன் என்று கூறியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிலிருள் காடமர்ந்து ஆடிய ஆடலன் என்பது அனைத்தையும் ஒடுக்கி ஆடுகின்ற ஊளிப்பெருங் கூத்தினைக் குறித்தது. இது அவனே ஆதியும் அந்தமும் ஆன பரம்பொருள் என்பதை உணர்த்துவது. சிரந்தை இரட்டும் விரலன் என்பது அவன் தன் உடுக்கையினின்று ப்ரணவத்தைத் தோற்றுவித்து, அதனின்று சகலத்தையும் தோற்றுவிப்ப வன் என்பதை உணர்த்துவதுவதாகும். இளம்பிறை சேர்ந்த நுதலும், களங்கனி மாறேற்கும் பண்பின் மறுமிடறும் அவனது அளப்பில் பெருங் கருணையையும், அளவில்லாத ஆற்றலையும் நினைந்ததாம். சூலம் பிடித்தவன் என்று கூறி இருப்பது சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய மூன்றையும் அவனே நடத்துபவன், முச்சக்திக்கும் அவனே முதல்வன் என்பனவற்றை உணர்த்துவதாகும்.

காலக் கடவுட்கு என்பது அவன் காலத்தைக் கடந்து நிற்பவன் என வும், அவனே காலமாக இருப்பவன் எனவும், அவனே ஆதி முழு முதல்வன் எனவும் பொருள்படுகிறது. அனைத்துமாகிய அவன் பெரு வெற்றி உலகெங்கும் உயர்ச்சி பெறுக என்பது, உலக மாந்தர் அனை வரும் அனைத்தும் அவன் செயலே என்பதை உணர்ந்து, அவன்பாலே தம்மையும் ஒன்றுபடுத்தி உயரவேண்டும் என விரும்பி உரைப்பதாம்.

சிவபெருமானை உமையொரு பாகனாக வழிபட்டு வாழ்வு பெறும் மரபு பண்டைக்காலத்துத் தமிழ் மரபே என்பதையும் நாம் இதனால் அறிதல் வேண்டும்.

## 2. கவரி முச்சிக் கார்விரி கூந்தல்

*சிவனை கடவுள் எனவும், அவர் குடிகொண்டிருக்கும் மலை இமய மலை எனவும் கூறும் பாடல்*

***பாடியவர் : பரணர்***

கடவுள் நிலைய கல்ஓங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமய மாகத்
தென்னங் குமரியொடு ஆயிடை அரசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரசுடைப் பெரும்சமம் ததைய ஆர்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த

*(பதிற்றுப்பத்து-43 : 6-10)*

**ஔவை கா. துரைசாமிப்பிள்ளை விளக்கவுரை:**

'கடவுள் நிலைய கல்ஓங்கு நெடுவரை வடதிசை எல்லை இமயமாக' என்பது கடவுளர் தங்கும் நிலைகளையுடைய கற்கள் உயர்ந்த நெடிய மலையாகிய இமயமலை வடக்கு எல்லை என்பதாகும்.

இங்கு கடவுள் என்பது சிவனைக் குறிப்பதாகும். ஏனெனில் இமய மலையில் குடிகொண்டிருக்கும் கடவுள் சிவன்.

**விளக்கவுரை:**

தெய்வங்கள் (இமயமலையில் குடிகொண்டிருக்கும் சிவன்) நிலைபெற் றிருக்கும், பெரும் பாறைகள் உயர்ந்து நிற்கும் மலையான வட திசையிலுள்ள இமயம் வடக்கு எல்லையாக, தெற்கில் உள்ள குமரி யோடு, இவற்றுக்கிடையே உள்ள அரசர்களின் முரசுகளை யுடைய பெரிய போர் அழிந்து போக, அதனால் ஆரவாரம் மிகுந்து எழ, புகழ் பெற்ற பல நாடுகளின் பழமையான அழகினை அழித்த ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐங்குறுநூறு

***(பொ.ஆ. 1 ஆம் நூற்றாண்டு)***

எட்டுத்தொகை என வழங்கப்படும் சங்ககால நூல்களில் ஐங்குறு நூறும் ஒன்றாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்து நிலம் சார்ந்த திணை ஒவ்வொன்றிற்கும் நூறு பாடல்கள் வீதம் இந்நூலில் ஐந்நூறு அகத்திணைப் பாடல்கள் உள்ளன. ஆசிரியப் பாவால் ஆன இந்நூலுக்கு கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார்.

ஐங்குறுநூற்றில் அடங்கியுள்ள பாடல்களில் ஒவ்வொரு திணை யைச் சேர்ந்த பாடல்களும் ஐந்து வெவ்வேறு புலவர்களால் இயற்றப்படுள்ளன. இவற்றைத் தொகுக்க உதவும் பாடலும், பிரிவுகளும் பின்வருமாறு:

மருதத் திணைப் பாடல்கள் (100) - ஓரம்போகியார்
நெய்தல் திணைப் பாடல்கள் (100) - அம்மூவனார்
குறிஞ்சித் திணைப் பாடல்கள் (100) - கபிலர்
பாலைத் திணைப் பாடல்கள் (100) - ஓதலாந்தையார்
முல்லைத் திணைப் பாடல்கள் (100) - பேயனார்
ஆகியோர் பாடியுள்ளனர். இதனைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தவர் யானைகட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை எனும் அரசன்.

## ஐங்குறுநூற்றில் சிவன் பற்றிய பாடல்

## 1. நீலமணி வாலிழை பாகத்து

*நீலநிறமான மேனியன், உமை, கங்கையைக் கொண்டவன் என சிவனை வர்ணிக்கும் கடவுள் வாழ்த்துப் பாடல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***பாடியவர் : பாரதம் பாடிய பெருந்தேவனார்***

நீலமணி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே

*(ஐங்குறுநூறு-கடவுள் வாழ்த்து)*

**விளக்கவுரை:**

நீலநிறமான திருமேனியினையும், வாலிப இழையினையுமுடைய உமை கங்கையைத் தன் கூறாகவுடைய ஒப்பற்ற சிவபெருமானுடைய இரண் டாகிய திருவடி நிழற்கீழ் மூவகையுலகும் முறையே தோன்றி நிலவுவ வாயின. ஆதலின், யாமும் அவ்வுலகருள் முதல்வனை வணங்கி அவ னது தாணிழல் வாழ்க்கையைப் பெறுவோமாக என்றவாறு.

# பத்துப்பாட்டு நூல்களில் சிவன் பற்றிய பாடல்கள்

பத்துப்பாட்டு என்பது சங்க இலக்கியங்கள் எனக் குறிப்பிடப்படும் பழந்தமிழ் நூல்களின் தொகுப்புகளுள் ஒன்றாகும். இதில் மொத்தமாக 10 நூல்கள் உள்ளன. அவை திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலை படுகடாம் ஆகிய பெயர்களில் வழங்கப்படுகின்றன. இவை அனைத்தும் இன்று ஒரே தொகுப்பாகக் குறிப்பிடப்படுகின்ற போதிலும், இவை ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை. வெவ்வேறு ஆசிரியர்களால் பல் வேறு கால கட்டங்களில் இயற்றப்பட்டவை. இந்த அரிய தொகுப்புக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகாற்றுப்படை

**(பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டு)**

***பாடியவர் : மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர்***

பத்துப்பாட்டு என வழங்கப்படும் நூல்களுள் முதலில் வைத்து எண்ணப்படுவது திருமுருகாற்றுப்படை. பன்னிரு திருமுறை தொகுப்பில் இது பதினோராவது திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது. மதுரையைச் சேர்ந்த நக்கீரன் என்னும் புலவரால் இந்நூல் இயற்றப்பட்டது. முருகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட இந்நூல் 317 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆக்கப்பட்டுள்ளது. ஆற்றுப் படுத்தல் என்னும் சொல் வழிப்படுத்தல் என்றும் பொருள்படும். "முருகாற்றுப்படை" எனும் போது, வீடு பெறுதற்குப் பக்குவமடைந்த ஒருவனை வீடு பெற்ற ஒருவன் வழிப்படுத்துவது எனப் பொருள்படும் என்பது நச்சினார்க்கினியாரின் கூற்று.

திருமுருகாற்றுப்படை ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் முருகப்பெருமானின் அறுபடைவீடுகள் ஒவ்வொன் றையும் பாராட்டுவனவாக அமைந்துள்ளது. இவற்றுள் முதற்பகுதியில் திருப்பரங்குன்றமும்,இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம் பகுதிகளில் முறையே திருச்செந்தூர் எனப்படும் திருச்சீரலைவாய், பழநி எனும் திருஆவினன்குடி, சுவாமிமலை எனப்படும் திருவேரகம், குன்று தோறாடல் (திருத்தணி) பழமுதிர்சோலை ஆகிய படை வீடுகளும் போற்றிப் புகழப்படுகின்றன.

## திருமுருகாற்றுப்படையில் சிவன் பற்றிய பாடல்கள்

முற்றிலும் முருகனின் புகழ் பாடும் இந்நூலில் ஆங்காங்கே சிவன் பற்றியும் பாடப்பட்டுள்ளது. ஈசனின் மகன் முருகன், முக்கண்ணன், முப்புரங்களை எரித்தவன் என சிவன் இந்நூலில் பாடப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. வெள்ளேறு வலவயின் உயரிய பலர் புகழ்

*சிவனை இடபக்கொடியை வைத்திருப்பவன், உமாதேவியை இடப் பாகத்தில் கொண்டவன், முக்கண்ணன், திரிபுரம் எரித்தவன் எனப் போற்றும் பாடல்*

**பாடியவர் : நக்கீரர்**

... வெள்ளேறு,
வலவயின் உயரிய பலர் புகழ் திணி தோள்
உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண் மிகு செல்வனும்,

*(திருமுருகாற்றுப்படை- திருஆவினன்குடி : 151-154)*

**விளக்கவுரை:**

வெள்ளைக் காளை மாட்டுக் கொடியை வெற்றிச் சின்னமாக உயர்த் திப் பிடித்துக் கொண்டிருப்பவன் சிவபெருமான். பலரும் புகழும் அவ னது வலிமை மிக்க தோள்களில் ஒன்றை அவன் மனைவி விரும்பிப் பெற்று விளையாடுகிறாள். அவன் மூன்று கண்கள் கொண்டவன். விண்ணில் பறக்கும் மூன்று கோட்டைகளை அரசோடு அழித்தவன்.

## 2. நாற்பெருந் தெய்வத்து நன்னகர்

*நாற்பெரும் தெய்வங்களில் சிவனும் ஒருவர் எனவும், இவருக்கு நகரில் கோயில் இருந்தமை பற்றியும் கூறும் பாடல்*

**பாடியவர் : நக்கீரர்**

நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர் புகழ் மூவரும் தலைவ ராக,

*(திருமுருகாற்றுப்படை- திருஆவினன்குடி : 160-162)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கவுரை:**

திருமால், சிவன், இந்திரன், பிரம்மன் என்போர் நான்கு பெருந் தெய்வங்கள். திருவாவினன்குடியில் இவர்களுக்குக் கோயில்கள் இருந்தன. பலராலும் புகழப்படும் மேலே சொன்ன நால்வரும் ஒத்த கருத்துடையராய் உலகினைக் காப்பாற்றி வருகின்றனர். இவர்கள் தலைவர்கள்.

## 3. இருமூன்று எய்திய இயல்பினின்

*சிவன் மற்றும் பெருமாள் ஆகிய இருவரையும் வழிபடும் பல் வேறு தொல்குடியைச் சேர்ந்தவர்கள் பற்றிய பாடல்*

***பாடியவர் : நக்கீரர்***

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல

*(திருமுருகாற்றுப்படை- திருவேரகம் : 177-182)*

**விளக்கவுரை:**

இருபிறப்பாளர் வழிபாடு இங்குச் சிறப்பு மிக்கது. இவர்கள் அறு வகைப்பட்ட சமய நெறிகளிலிருந்து வழுவாதவர்கள். சிவன் மற்றும் பெருமாள் ஆகிய இருவரையும் வழிபடும் பல்வேறு தொல்குடியைச் சேர்ந்தவர்கள். 48 ஆண்டு இளமையை இல்லறத்தில் கழித்த பின்னர் அவர்கள் அறம் சொல்லி முத்தீ வளர்க்கும் கொள்கையில் மூன்று வகைக் குறிக்கோள் உண்டு. இறந்தோருக்கும் இறைவனுக்கும் உணவு சமைப்பதே முத்தீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. ஆல்கெழு கடவுட் புதல்வ

*சிவனினதும், மலை மகளினதும் புதல்வன் முருகன் எனப் போற்றும் பாடல்*

**பாடியவர் : நக்கீரர்**

ஆல்கெழு கடவுட் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பின் பழையோள் குழவி!

*(திருமுருகாற்றுப்படை- பழமுதிர்சோலை : 256-259)*

**விளக்கவுரை:**

ஆறாக அமர்ந்த செல்வனே, ஆங்கு எழுந்தருளியுள்ள கடவுளாகிய சிவபெருமானின் புதல்வனே, மலைமகளின் மைந்தனே, பகைவர்களின் கூற்றுவனே, வெற்றி தரும் கொற்றவையின் சிறுவனே, அணிச் சிறப்பினைக் கொண்ட பழையோளின் குழவியே!

## திருமுருகாற்றுப்படை தனிப் பாடல்கள்

திருமுருகாற்றுப்படை பாடல்களின் இறுதியில் முருகப்பெருமானின் சிறப்பினை உணர்த்தும் பாடல்களாக 10 வெண்பாக்கள் தனிப் பாடல்கள் என்னும் தலைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றைப் பாடியவர் யார் என்று தெரியவில்லை.

## 5. குன்றம் எறிந்தாய்! குரைகடலில் சூர் தடிந்தாய்

*காளை வாகனத்தைக் கொண்ட சிவனின் மகனே என முருகப் பெருமானைப் போற்றும் பாடல்*

**பாடியவர் : தெரியவில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர் தடிந்தாய்
புன் தலைய பூதப் பொரு படையாய் - என்றும்
இளையாய் அழகியாய் ஏறு ஊர்ந்தான் ஏறே
உளையாய் என் உள்ளத்து உறை.

*(திருமுருகாற்றுப்படை- தனிப்பாடல் : 1)*

**விளக்கவுரை:**

வேல் வீசி மலையை (கிரவுஞ்ச மலை) அழித்தவனே, அலைகடலில் (திருச்சீரலைவாய்) சூரபன்மன் என்பவனை வேலால் வீழ்த்தியவனே, பரட்டைத் தலைப் பூதப்படை கொண்டவனே, என்றும் இளமைக் கோலத்துடன் இருப்பவனே, என்றும் அழகின் திருவுருவமாகத் திகழ் பவனே, காளை ஊர்தி சிவபெருமான் மகனாகிய காளையே, என்றும் என் அருகில் இருப்பவனே, என் நினைவிலும் நிலைகொள்வாயாக.

## 6. முருகனே செந்தி முதல்வனே

*ஈசனின் மகன் முருகன் எனக் கூறும் பாடல்*

***பாடியவர் : தெரியவில்லை.***

முருகனே, செந்தி முதல்வனே, மாயோன்
மருகனே, ஈசன் மகனே, - ஒரு கைமுகன்
தம்பியே, நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்

*(திருமுருகாற்றுப்படை- தனிப்பாடல் : 7)*

**விளக்கவுரை:**

முருகனே, செந்தில் முதல்வனே, மாயோனின் மருமகனே, ஈசனின் மகனே, ஒரு கை ஆனைமுகனின் தம்பியே, உன் தண்டை (கழல்) அணிந்த கால்களை நம்பியே எப்பொழுதும் தொழுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பாணாற்றுப்படை

## (பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டு)

இது கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவர், காஞ்சியை ஆண்ட தொண்டைமான் இளந்திரையனைப் புகழ்ந்து பாடிய 500 அடிகள் கொண்ட அகவற் பாட்டாகும். பேரியாழை வாசிக்கும் பாணன் ஒருவன், தன் போல் இன்னொரு பாணனைத் தனக்குப் பரிசளித்த வள்ளலான இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்தும் நிலையில் பாடப்பட்டதாதலால் பெரும்பாணாற்றுப்படை எனும் பெயரை இந்நூல் பெற்றது. 269 அடிகள் கொண்ட சிறுபாணாற்றுப் படையை நோக்க இது பெரியது என்பது பற்றி இப்பெயர் பெற்றதாகவும் கொள்வர்.

இது சொற்சுவையும், பொருட்சுவையும் நிறைந்தது. இளந்திரையன் நாட்டின் ஐந்திணை வளமும், அவ்வத்திணையில் வாழ்ந்த வேடர், எயினர், மறவர், உழவர், பரதவர், ஆயர், அந்தணர் ஆகிய இனத்தவர் வாழ்க்கையும், அவர்களின் விருந்தோம்பற் பண்பும் பிறவும் பற்றி விரிவாகப் பேசுகிறது. மாந்தரின் குடியிருப்பும் செயல்களும் உண்மைத் தன்மையுடன் இதில் பாடப்பட்டுள்ளன.

இந்நூலில் திருமாலின் கோலத்தையும், கடலோரத்தில் அமைந்த விண்ணுயர்ந்த கலங்கரை விளக்கத்தையும்,தொண்டைமானின் கொடைதிறத்தையும், பேரியாழின் வருணனையையும், யானைகள் தவம் செய்யும் முனிவர்கட்கு உதவும் திறத்தையும், இளந்திரையன் ஆட்சிச் சிறப்பால் இடியும் காட்டு விலங்குகளும், கூட வழிச் செல்வார்க்குத் தீங்கு செய்யாத தன்மையும், உமணர்கள் (உப்பு வணிகர்கள்) உப்பு மூட்டைகளை வண்டிகளில் ஏற்றி ஊர் ஊராக சேர்தலும், வம்பலர் என்ற வணிகர் கவசம் பூண்டும், காலிற் செருப்பணிந்தும், கழுதைச் கூட்டத்துடன் செல்லும் இயல்பும், ஆயர் குடிப்பெண் ஆன்படு பொருள்களை (பால் உணவுப்பொருட்களை) விற்றுக் குடும்பத்தைக் காத்தலும் இந்நூலில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பாணாற்றுப்படையில் சிவன் பற்றிய பாடல்

## 1. இமையவர் உறையும் சிமையச் செவ்வரை

*சிவனை இமயமலை உச்சியில் வாழும் இமையவர் எனப் போற்றும் பாடல்*

***பாடியவர் : கடியலூர் உருத்திரங் கண்ணனார்***

இமையவர் உறையும் சிமையச் செவ்வரை
வெண்திரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்
பொன்கொழித்து இழிதரும் போக்கரும் கங்கைப்
பெருநீர் போகும் இரியல் மாக்கள்

*(பெரும்பாணாற்றுப்படை-429-432)*

**விளக்கவுரை:**

இமையவர் என்ற சிவன் வாழும் உச்சியையுடைய சிறந்த இமயமலை யின் கண், வெள்ளி அலைகளையுடைய நீர் பிளந்து பாய்வதால் விளங்கும் ஒளியையுடைய உயர்ந்த உச்சியிலிருந்து, பொன்னைக் கொழித்துக் கொண்டு ஓடி வரும், கடத்தற்கு அரிய கங்கையாற்றில், பரந்து அகன்ற அக்கங்கை நீரைக் கடந்து போகும் தங்கள் நாடு இழ ந்து கெட்ட மக்கள் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபாணாற்றுப்படை

## (பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டு)

சிறுபாணாற்றுப்படை எனும் இந்நூல் நத்தத்தனார் எனும் புலவரால் இயற்றப்பட்டது. இந்நூல் 269 அடிகளால் பாடல்கள் அமைந்துள்ளன. ஒய்மான் நாட்டு மன்னனான நல்லியக்கோடன் என்பவனைத் தலைவனாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நூல், அம்மன்னனிடம் பரிசு பெற்ற சிறுபாணன் ஒருவன் தான் வழியில் கண்ட இன்னொரு பாணனை அவனிடம் வழிப் படுத்துவதாக அமைந்துள்ளது.

சீறியாழ் (சிறிய யாழ்) வாசிக்கும் பாணன் ஒருவனை நல்லியக் கோடனிடம் ஆற்றுப்படுத்தும் நிலையில் பாடப் பட்டமையின் இப் பெயர் பெற்றது. பெரும்பாணாற்றுப்படையை விட அளவால் சிறியது என்பதால் சிறுபாணாற்றுப்படை எனும் பெயர் இந்நூலுக்கு வைக்கப் பட்டது என்பர்.

இதில் சீறியாழின் உருவ அமைப்பு அழகாக உவமைகளுடன் விளக்கப்பட்டுள்ளது. நல்லியக்கோடன் நாட்டு வளமும், மக்கள் வாழ் வுச் சிறப்பும், விருந்தோம்பும், பண்பும் காட்டப்பட்டுள்ளன. இந்நூலில் கடையெழு வள்ளல்களின் வரலாறு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது, மூவேந்தரின் இராச்சியங்களும் வருணிக்கப்பட்டுள்ளன. நல்லியக் கோடன், கடையெழு வள்ளல்கள் எழுவரும் தாங்கிய ஈகையாகிய செவ்விய நுகத்தைத் தான் ஒருவனே தாங்கியதாகப் புலவர் புகழ்ந்து பாடியுள்ளார். பாணனுடைய வறுமை நிலை நெஞ்சை உருக்கும் வகையில் விளக்கப்படுகிறது. ஆமூர், வேலூர், கிடங்கில் என்னும் ஊர்களின் சிறப்பையும், மதுரை மாநகர் தமிழ் சிறப்பையும் இப்பாட்டில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபாணாற்றுப்படையில் சிவன் பற்றிய பாடல்

## *1.* நீலநாகம் நல்கிய கலிங்கம்

*ஆலமரத்தடியில் இருந்த சிவன் கோயில் பற்றிய பாடல்*

***பாடியவர் : இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்***

நீலநாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தான்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நனமொழி ஆயும் மால்வரைக்

*(சிறுபாணாற்றுப்படை- 96-99)*

**விளக்கவுரை:**

ஆவியர்-குடி மக்கள் தலைவன் பேகன். இவன் மகிழ்ந்திருக்கும் போது சந்தனம் பூசிய கோலத்தோடு காட்சி தருபவன். சினந்திருக்கும் போது வில்லும் கையுமாகத் திரிபவன். ஆலமரத்தடியில் குடிகொண்டிருந்த சிவபெருமானின் சிலை ஆடை இல்லாமல் இருப்பதைக் கண்ட இவன் நச்சு (நீலம்) கொண்ட நாகப்பாம்பு ஒன்று இவனுக்குத் தந்த மேலா டையை அச்சிலைக்குப் போர்த்தி மகிழ்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரைக்காஞ்சி

## (பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டு)

பத்துப்பாட்டு நூல்களில் மிகவும் நீண்ட பாட்டான இது 782 அடிகளைக் கொண்டது. இது தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு நிலையாமையை எடுத்துக்கூறி, தனக்கென வரையறுத்த நாட்களை நல்ல முறையில் வாழுமாறு அறிவுறுத்தும் வகையில் மாங்குடி மருதனார் இயற்றிய காஞ்சித்திணைப் பாட்டாகும். மதுரை மன்னனுக்குக் கூறிய காஞ்சியாகையால் இது மதுரைக் காஞ்சி எனப் பெயர் பெற்றது.

இதில் பாண்டிய நாட்டின் ஐந்திணை வளம், அந்நிலங்களில் நடக்கும் வாழ்க்கை முறைகள், பாண்டியன் பகைவர் நாட்டை அழித்தல், பணிந்தார்க்கு நலம் செய்தல், இரு பெருவேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் வென்றமை, சாலியூரையும், முதுவெள்ளிலையும் கைக்கொண்டமை, பரதவர்களை வென்றமை முதலான வெற்றிச் செயல்கள் ஆகியன விரிவாகக் கூறப்படுகின்றன.

வைகையாற்று வளம், மதுரையைச் சூழ்ந்த அகழி, அந்தணர் இருக்கை, சாவகர், சமணர், பௌத்தர்களின் இருக்கைகள், பெரியோர்களின் ஒழுகலாறுகள் ஆகியவற்றை புலவர் இனிதே விளக்கியுள்ளார். மாலை முதல் விடியற் காலம் வரையில் பல்வேறு மாந்தரின் செயல்களை அழகுறக் காட்டும் புலவர், பரத்தையர் தம்மை அழகுறுத்திக் கொண்டு செல்வக்குடி இளைஞர்களை மயக்கிப் பொருள் பறித்தல், உளியும் நூலேணியும் கொண்டு களவாடப்போகும் கள்வர் இயல்பு, அவர்களைப் பற்றுதற்கு மறைந்து செல்லும் காவலர் இயல்பு, அமைச்சர்கள் காவிதிப் பட்டம் பெறுதல், அறங்கூர் அவையத்தின் சிறப்பு, சங்கறுத்து வளையல் செய்தல் முதலிய தொழில் வல்லுநரின் இயல்புகள், பாணர்களின் நிலை, அவர்களின் கலைவன்மை, கட்டிடக்கலை, நெசவுக்கலை முதலியவற்றின் மேம்பாடு என்பவை இப் பாட்டில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க காலத்திலும் மதுரை தூங்கா நகராய் விளங்கியதை மாங்குடி மருதனார் மூலம் அறிய முடிகிறது. பகல் நேரக் கடைகளாகிய நாளங்காடி பற்றியும் இரவு நேரத்தில் திறக்கப்படும் அல்லங்காடி பற்றியும் விளக்குகிறார். கடல் நீர் ஆவியாகி மேகமாவதால் கடல் வற்றி விடுவதில்லை. ஆறுகள் பல கடலில் வந்து கலப்பதால் கடல் பொங்கி வழிவதுமில்லை. அது போல் மக்கள் திரளாக வந்து பொரு ட்களை வாங்குவதால் பொருட்கள் தீர்ந்து விடுவதும் இல்லை. பல இடத்திலிருந்தும் வணிகர்கள் விற்பனைக்குப் பொருட்களைக் கொண்டு வருவதால் பொருட்கள் மிகுந்து விடுவதும் இல்லை என்கிறார்.

ஓர் இரவு முழுதும் மதுரை நகரில் நடக்கும் செயல்கள் யாவற்றையும் மருதனார் கூறுகிறார். குலமகளிர் பண்புகள், விலை மகளிர் வேலைகள், கள்வர் திறம், காவலர் மறம் ஆகியவற்றைக் கூறி நிறைவாக மன்னன் இரவில் துயில் கொள்ளல், காலையில் பள்ளி யெழுச்சி, அவனது கொடை, அறம் ஆகியவற்றை விளக்கி அவனை வாழ்த்திப் பாடலை நிறைவு செய்கிறார்.

## மதுரைக் காஞ்சியில் சிவன் பற்றிய பாடல்கள்

## 1. தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின

*குற்றாலத்தில் இருக்கும் சிவனை தென்னவன் எனவும், தொல் முது கடவுள் எனவும் கூறும் பாடல்*

***பாடியவர் : மாங்குடி மருதனார்***

படை யோர்க்கு முருகயர
அமர் கடக்கும் வியன் றானைத்
தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின
தொல்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தாழ் அருவிப் பொருப்பிற் பொருந,

*(மதுரைக் காஞ்சி : 38-41)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கம் :**

பாண்டியன் நெடுஞ்செழியன் குற்றால மலைப் போரில் வென்று அதனைத் தனதாக்கிக் கொண்டான். அங்கு நடைபெற்ற போர் இப்பகுதியில் பேசப்படுகிறது.

வரைதாழ் அருவி என்பது குற்றாலம். அங்கு இக்காலத்தில் உள்ள இரத்தின சபையில் தென்திசை நோக்கிக் கூத்தாடுபவர் தென்திசைக் கடவுள். தென்திசைக் கடவுளைத் 'தென்னவன்' என்றனர். தென்னவனைத் 'தொன்முதுகடவுள்' எனவும் வழங்கினர். இவர் தான் தட்சணாமூர்த்தி எனும் சிவன்.

குற்றாலம் பொதியமலையின் ஒரு பகுதி. இப்பகுதியை வள்ளல் ஆய் ஆண்டு வந்தான் என்பதைச் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன. பிற்காலத்துப் பரணி நூல்கள் போர்க்களக் காட்சியைப் பாடும்போது பிணத்தைப் பேய்க்கூட்டம் சோறாக்கித் தின்றதாகப் பாடுகின்றன. அவற்றிற்கு முன்னோடி போல இந்தப் பாடல் பகுதி அமைந்துள்ளது.

பிணமாகிய களிறுகளைக் குவித்துப் கொழுப்பை எடுத்துப் பேய்க் கூட்டம் வாயில் அதவியது. பின்னர் தோளில் கை கோர்த்துக்கொண்டு ஒன்றன்மேல் ஒன்று விழுந்து தூண்போல் நின்று போர்க்களத்தில் துணங்கைக் கூத்து ஆடியது. ஆண்களின் தலைகளைக் கல்லாக வைத்து அடுப்புக் கூட்டியது. அரசர்களின் குருதியை உலைநீராக ஊற்றியது. அரசர்களின் சினத்தைத் தீயாக மூட்டியது. வலிமை மிக்க அவர்களின் கைகளை முறித்துத் துடுப்பாக்கிக் கொண்டு சோற்றைத் துளாவியது. பிணக்கறி போட்டுச் சோறு சமைத்தது. சமையல் தொழிலில் வல்ல வாலுவன் விலகிச் சென்றுவிட்டான்.

இது படையினரை ஆட்டுவிக்கும் 'முருகு' ஆட்ட விழா. இப்படிப் போரிட்டு, தென்னவன் பெயர் கொண்ட கடவுளான சிவனின் அருவி பாயும் நாட்டை இந்தச் செழியன் தனதாக்கிக்கொண்டான்.

தென்னவன் எனும் சிறப்புப் பெயர்க்குரிய பழமை முதிர்ந்த கடவுளாகிய சிவபெருமானின் வழித்தோன்றலும், அகத்தியர் வாழ்ந்த பொதிகை மலைத் தலைவனுமாகிய வீரவேந்தே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நீரும் நிலனுந் தீயும் வளியும்

*சிவன் மழுவை வாளாக ஏந்திக் கொண்டிருப்பவர் எனவும், ஐம்பூதங்களைப் படைத்தவர் எனவும், சிவனின் பள்ளி பற்றியும் கூறும் பாடல்*

***பாடியவர் : மாங்குடி மருதனார்***

நீரும் நிலனுந் தீயும் வளியும்
மாக விசும்போடு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனாக
மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப் பூவின் இமையா நாட்டத்து

நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபி னுயர்பலி கொடுமார்
அந்தி விழவிற் றூரியங் கறங்கத்
திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை
ஓம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்

தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்
தாமு மவரும் ஓராங்கு விளங்கக்
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்
சிறந்து புறங்காக்குங் கடவுட் பள்ளியுஞ்

*(மதுரைக்காஞ்சி: 453-467)*

**விளக்கம் :**

பூவும் புகையும் ஏந்திக் கொட்டு முழக்குடன் சென்று பேரிளம் பெண் டிர் மதுரைச் சிவபெருமானை வழிபடுவர். மழுவை வாளாக ஏந்திக் கொண்டிருப்பவன் சிவச்செல்வன் நெடியோன். அவன் நீர், நிலம், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தையும் படைத்தவன். அவனைத் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனாகக் கொண்டவர்கள் இமையா நாட்டத்துப் பலர். (தேவர்) அவர்கள் உயிர் பலி பெறும் நாற்ற உணவினை விரும்புவர். அவர்களுக்குப் பலி கொடுப்பதற்காக ஒருபுறம் மக்கள் அந்திவிழா கொண்டாடிக் கொண்டிருப்பர். அங்கே தூரியப் பறை கறங்கும். தாமரை மொட்டைத் தோளில் தழுவுவது போல மகளிர் தம் குழந்தைகளைத் தழுவிக் கொண்டு அவ்விழாவுக்குச் செல்வர். பேரிளம் பெண்டிர் பூப்போட்டும், புகை காட்டியும் இமையா நாட்டத்துத் தேவர்களை வழிபட்டுப் போற்றுவர். இது கடவுள் சிவனின் பள்ளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினப்பாலை

## (பொ.ஆ. 3 ஆம் நூற்றாண்டு)

பட்டினப்பாலை என்பது சங்ககாலத் தமிழ் நூல் தொகுப்பான பத்துப்பாட்டில் உள்ள ஓர் நூலாகும். பெரும்பாணாற்றுப்படை என்னும் நூலைப் பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவரே இதனையும் இயற்றியுள்ளார். பண்டைய சோழ நாட்டின் சிறப்பு, சோழ நாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு, அதன் செல்வ வளம், கரிகாலனுடைய வீரச்செயல்கள், மக்கள் வாழ்க்கை முறை ஆகியவற்றை எடுத்து இயம்பும் இப்பாடல் 301 அடிகளால் அமைந் துள்ளது.

இப்பாடலில் சோழ மன்னன் கரிகால் பெருவளத்தானின் பெருமை களை எடுத்துக்கூறுகிறார் புலவர். கரிகால் சோழன் திரைக்கடலில் நாவாய்கள் பல செலுத்தி, சுங்க முறையை ஏற்படுத்தி, வெளிநாடு களுடன் வாணிபத் தொடர்பு ஏற்படுத்தி தமிழகத்திற்கு உலகப்புகழை ஏற்படுத்தியவன். அவன் ஆண்ட சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கியது காவிரிப்பூம்பட்டினம். கரிகால் சோழனுடைய காவிரிப்பூம் பட்டினத்தின் பெருஞ்சிறப்பைச் சொல்வதே பட்டினப்பாலை ஆகும்.

பாலை என்பது பாலைத்திணை ஆகும். பிரிவைப் பற்றிக் கூறுவது பாலைத் திணையாகும். கணவன் தன் மனைவியை விட்டுப் பிரிந்து போவது, அல்லது பிரிந்து போக நினைப்பது, அல்லது பிரிந்து போக வேண்டுமே என நினைத்து வருந்துவது இவை பாலைத்திணையில் அடங்கும். கணவன் தான் பொருள் தேடப் பிரிந்து செல்வதைத் தன் மனைவிக்கு அறிவிப்பதும், அதை அவள் தடுப்பதும் பாலைத் திணை யில் அடங்கும். பட்டினப்பாலை என்பது பட்டினம்-பாலை எனும் இரு சொற்க ளைக் கொண்ட தொடராகும். பட்டினத்தின் சிறப்பைக் கூறிப் பிரிவின் துன்பத்தை உணர்த்துவது என்பது இதன் பொருளாகும்.

காவிரியாற்றின் சிறப்பு, சோழநாட்டின் நிலவளம், காவிரிப்பூம் பட்டினத்தின் சுற்றுப் புறங்களின் செழிப்பு, காவிரித்துறையின் காட்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்படவர்களின் வாழ்க்கை, பொழுது போக்கு ஆகியவற்றை இந்நூல் விரிவாகக் கூறுகிறது. காவிரிப் பூம்பட்டினத்திலே அக்காலத்தில் நடை பெற்ற வணிகம், அந்நகரத்திலே குவிந்திருந்த செல்வங்கள், அங்கு நடைபெற்ற ஏற்றுமதி, இறக்குமதி, பண்டங்களைப் பாதுகாக்கும் முறை இவைகளையெல்லாம் இந்நூலிலே காணலாம். இந்நகரத்தின் தலைவ னான கரிகாற்சோழனின் பெருமை, வீரம், கொடை முதலியவற்றையும் இந்நூல் எடுத்துரைக்கிறது.

## பட்டினப்பாலையில் சிவன் பற்றிய பாடல்கள்

### 1. கழிசூழ் படப்பைக் கலியாணர்

*சிவன் கோயிலுக்கு எதிரில் உள்ள ஏரிகள் மற்றும் அதன் அரு கில் இருந்த ஏனைய கோயில்கள் பற்றிய பாடல்*

***பாடியவர் : கடியலூர் உருத்திரங் கண்ணனார்***

கழிசூழ் படப்பைக் கலியாணர்ப்
பொழிற் புறவிற் பூந்தண்டலை
மழைநீங்கிய மாவிசும்பின்
மதிசேர்ந்த மகவெண்மீன்
உருகெழுதிறல் உயர்கோட்டத்து
முருகமர்பூ முரண்கிடக்கை
வரியணிசுடர் வான்பொய்கை
இருகாமத்து இணையேரிப்

*(பட்டினப்பாலை -32-39)*

**விளக்கம்:**

காதலர் குளம் - சிவன் கோயிலுக்கு எதிரில் ஆணும் பெண்ணும் தம் காமம் நிறைவேற மூழ்கி எழும் இரட்டை ஏரி இருக்கும். உப்பங்கழி, உழுநிலம், பொழில், புறவு, பூஞ்சோலை ஆகியவற்றைக் கொண்டது புகார் நகரம். மகர வெண்மீனைக் கொடியில் கொண்டவன் காமவேள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைமேகம் இல்லாத வானத்தில் மகர வெண்மீன் தெரியும். காமவேள் கோட்டம், நிலாக்கோட்டம், குமர கோட்டம் ஆகிய கோயில்கள் மணக்கும் பூக்கள் கொண்ட அந்தச் சோலைப் பகுதியில் இருந்தன. காம வேள் கோட்டத்தில் இரண்டு குளங்கள் இருந்தன. ஒன்று ஆண் குளிக்கும் குளம். மற்றொன்று பெண் குளிக்கும் குளம். இதில் குளித்தால் பிரிந்திருக்கும் கணவன் மனைவியாகிய இருவர் காமமும் இணையுமாம்.

## இடைக் குறிப்பு

அமரர் தருக்கோட்டம் 1 கற்பகமரக் கோயில், வெள்யானைக் கோட்டம் 2 இந்திரன்-யானைக் கோயில், புகர்வெள்ளை நாகர்தம் கோட்டம் 3 நாக-தெய்வங்கள் இருக்கும் கோயில், உச்சிக்கிழான் கோட்டம் 4 சூரியன் கோயில், ஊர்க்கோட்டம் 5 குலதெய்வக் கோயில், வேல் கோட்டம் 6 வேல் கோயில், வச்சிரக் கோட்டம் 7 இந்திரனின் வச்சிரப்படைப் கோயில், புறம்பணையான் வாழ் கோட்டம் 8 ஊரின் புறத்தே ஊரை அணைத்துக் காக்கும் எல்லைத்தெய்வக் கோயில், நிக்கந்தக் கோட்டம் 9 அய்யனார் கோயில் (கந்தன் = துணைவன் காதன்மை கந்தா-திருக்குறள்) (நிக்கந்தன் = பற்று அற்றவன்) அருகன் கோயில், புத்தன் கோயிலுமாம், நிலாக் கோட்டம் 10, ஆகிய கோயில்கள் புகார் நகரத்தில் இருந்தன. மற்றும், கடலொடு காவிரி தலையலைக்கும் முன்றில், மடலவிழ் நெய்தலங்கானல் தடம் உள, சோமகுண்டம் 1 நிலாக்குளம், சூரியகுண்டம் 2, துறை மூழ்கிக் காமவேள் கோட்டம் தொழுதார், கணவரோடு தாம் இன்புறுவர் உலகத்துத் தையலார், (சிலப்பதிகாரம் கனாத்திறம் உரைத்த காதை).

பட்டினபாலையில் 'கோயிலொடு குடிநிறீஇ வாயிலொடு புழையமைத்து' (பட்டினப்பாலை-32-39) எனும் வரிகளுக்கு பொருள் எழுதிய நச்சினார்க்கினியர் "கோயில்களோடு பழைய குடிகளும் பண்டுபோல நிலை நிறுத்தி" எனக் குறிப்பிட்டுள்ளார். இது காவிரிப்பூம்பட்டினத்தில் பல கோயில்கள் இருந்தன என்பதை உறுதி செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கம் மருவிய கால நூல்களில் சிவன் பாடல்கள்

சங்கம் மருவிய காலம் என்பது பொ.ஆ. 100-600 வரையான காலப்பகுதியாகும். பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டில் தமிழ் நாடு அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. சோழ நாட்டையும், பாண்டி நாட்டையும் களப்பிரர் கைப்பற்றி ஆட்சி செய்ததாக கருதப்படுகிறது. நடு நாடும், தொண்டை நாடும் பல்லவர் ஆட்சிக்குட்பட்டன. இவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மொழி, தமிழ்க் கலைகள், தமிழ்ப் பண்பாடு என்பன வளர்ச்சி குன்றியிருந்தன. தமிழ் மொழியில் பெருமளவிலும், சிறப்பான முறையிலும் நூல்கள் தோன்றவில்லை. எனவே தமிழ் இலக்கிய வரலாற்றில் இக்காலப் பகுதியை சங்கம் மருவிய காலம் அல்லது இருண்ட காலம் எனக் குறிப்பிடுவர்.

இக்காலப் பகுதியில் தான் இரட்டைக் காப்பியங்கள் எனப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் முப்பால் எனும் திருக்குறள் உட்பட பதினெண் கீழ்க்கணக்கு எனக் குறிப்பிடப்படும் 18 நூல்கள் எழுதப்பட்டன. அவையாவன: ஆசாரக் கோவை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, ஏலாதி, சிறுபஞ்சமூலம், திரிகடுகம், முப்பால் (திருக்குறள்), நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு, முதுமொழிக்காஞ்சி, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, கார் நாற்பது, கைந்நிலை, திணைமாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது, களவழி நாற்பது ஆகியவையாகும். இவற்றைத் தவிர முத்தொள்ளாயிரம், தகடூர் யாத்திரை, ஆசிரிய மாலை போன்ற நூல்களும் இக்காலப் பகுதியில் எழுதப்பட்ட நூல்களாகும்.

இவற்றுள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைச் சங்க கால நூல்கள் என்றும் சிலர் குறிப்பிடுவர். இந்நூல்கள் பொருளாலும், நடையாலும் சங்க இலக்கியங்களினின்றும் வேறுபட்டுள்ளன. இந்த இருண்ட காலப் பகுதியிலேயே காரைக்கால் அம்மையாரும், திருமூலரும் வாழ்ந்தனர். காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி மாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டு என்ப வற்றை இயற்றினார். இவை பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டு ள்ளன. இதைப்போல இதே காலத்தைச் சேர்ந்த திருமூலர் எழுதிய திருமந்திரமும் பத்தாம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

சங்ககாலத்தில் எழுந்த 18 நூல்களை மொத்தமாக 473 புலவர் கள் எழுதியிருந்தனர். ஆனால் சங்கம் மருவிய காலத்தில் எழுந்த 18 நூல்களில் நாலடியாரைத் தவிர ஏனைய 17 நூல்களையும் 17 புலவர் கள் மட்டுமே எழுதியிருந்தனர். நாலடியார் மட்டும் சமண முனிவர்கள் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பாக அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பால் (திருக்குறள்)

***பாடியவர் : திருவள்ளுவர்***

***(பொ.ஆ. 1 ஆம் நூற்றாண்டு)***

தமிழில் உள்ள அறநூல்களுள் காலத்தால் முந்தியதும், தலை சிறந்ததும் முப்பால் எனும் திருக்குறளாகும். இது ஈரடி வெண்பா, குறள் வெண்பா எனவும் அழைக்கப்படும். அவ்வெண்பாவால் ஆன நூலும் ஆகு பெயராகக் குறள் என்று பெயர் பெற்றது. அதன் சிறப்பு நோக்கித் திரு என்னும் அடைமொழியைச் சேர்த்துத் திருக்குறள் என்று வழங்கி வருகின்றோம். இந்நூலை திருவள்ளுவ நாயனார் எழுதியுள்ளார்.

திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் மூன்று பெரும் பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பெரும்பிரிவிலும் பல உட்பிரிவுகள் உள்ளன. இவை இயல்கள் எனப்படும். இயல்களின் உட்பிரிவுகளாக அதிகாரங்கள் அமைகின்றன. ஒவ்வோர் அதிகாரத் திலும் பத்துப் பத்துக் குறட்பாக்கள் இடம் பெறுகின்றன. இதில் 133 அதிகாரங்களும் 1330 குறட்பாக்களும் உள்ளன.

திருக்குறள் எழுதப்பட்ட காலம் பொ.ஆ.மு. 1 ஆம் முதல் நூற்றாண்டிலிருந்து பொ.ஆ.1 ஆம் நூற்றாண்டுக்கு உட்பட்ட காலம் என அறிஞர்கள் கூறுகின்றனர். திருக்குறளில் வெளிப்படும் சில பண் பாட்டு நிலைகள், மொழிக்கூறுகள் ஆகியவற்றைக் கொண்டு அது சங்க இலக்கியங்களை அடுத்துத் தோன்றியது என்று பொதுவாகக் கூறப்படுகிறது.

திருக்குறளுக்குப் பத்துப்பேர் இடைக்காலத்தில் உரையெழுதி உள் ளனர். இவ்வுரையாசிரியர் தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பருதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகியோராவார். மணக்குடவர், காளிங்கர், பரிப்பெருமாள், பரிதியார், பரிமேலழகர் ஆகியோரின் உரைகளே இப்பொழுது கிடைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளில் சிவன் பற்றிய பாடல்கள்

திருக்குறளில் முதலாவதாகப் பாடப்பட்ட கடவுள் வாழ்த்தில் கடவுள் பற்றிய பத்து குறள்கள் உள்ளன. இப்பாடல்கள் சமண கடவுளைக் குறிப்பதாக சிலரும், பௌத்த கடவுளைக் குறிப்பதாக சிலரும் கூறியுள்ளனர். ஆனால் இதை உறுதிப்படுத்த அவர்கள் முன்வைத்த சான்றுகள் ஏற்கக் கூடியதாக இல்லை. ஆனால் இப்பாடல்கள் அனைத்தும் சிவனைக் குறிபிட்டே பாடப்பட்டுள்ளதாக பரிப்பெருமாள், பரிதியார், பரிமேலழகர் ஆகிய பழைய உரையாசிரியர்கள் கூறியுள்ளனர்.

இக்கடவுள் வாழ்த்தில் குறிப்பாக இரண்டு விடயங்களை திருவள்ளுவர் கூறியுள்ளார். முதலாவது ஓர் கடவுளின் பெயரை பல அடைமொழிகளில் பத்து குறள்களிலும் விளக்கியுள்ளார். இரண்டாவது அந்தக் கடவுளின் திருப்பாதங்களை வணங்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

கடவுளின் பெயரை ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண் குணத்தான் எனக் குறிப்பிட்டுள்ளார். கடவுளின் திருப்பாதங்களை நற்றாள், மாணடி, இலானடி, தாள், இறைவன் அடி எனக் குறிப்பிட்டுள்ளார். இப்பாடல்கள் பத்தும் கடவுள் வாழ்த்தில் குறள் 1 முதல் 10 வரை உள்ளன.

## 1. அகர முதல எழுத்தெல்லாம்

*சிவனை ஆதிபகவன் எனக் குறிப்பிடும் குறள்*

***அதிகாரம்: கடவுள் வாழ்த்து -குறள் எண்:1***

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது குறளுக்கு பழைய ஆசிரியர்கள் எழுதிய உரைகள்:

**மணக்குடவர்:** எழுத்துக்களெல்லாம் அகரமாகிய வெழுத்தைத் தமக்கு முதலாக வுடையன; அவ்வண்ணமே உலகம் ஆதியாகிய பகவனைத் தனக்கு முதலாக வுடைத்து.

**பரிப்பெருமாள்:** எழுத்துக்களெல்லாம் அகரமாகிய வெழுத்தைத் தமக்கு முதலாக வுடையன; அவ்வண்ணமே உலகம் ஆதியாகிய பகவனைத் தனக்கு முதலாக வுடைத்து.

**பரிப்பெருமாள் குறிப்புரை:** என்பது என்ன சொன்னவாறோ எனின், சொல்லும் பொருளும் என்னும் இரண்டனுள்ளும் சொல்லிற்குக் காரணமாகிய எழுத்தும் சொல்லும் பொருளும் அகரத்தைத் தனக்கு முதலாக உடையவாறு போல; தோன்றுகின்ற எல்லாப் பொருட்கும் காரணமாகிய உலகமும் நீர், தீ, வளி, ஆகாயமாகி ஒன்றோடொன் றொவ்வாத பெற்றியதாயிருப்பினும் **ஆதி பரமேஸ்வரனைத் தமக்கு முதலாக உடையதாகலால் அவனை வழிபடவேண்டும்** என்றவாராயிற்று. அன்றியும் உலகம் என்பதனை உயர்ந்தோர் ஆக்கி எல்லாப் பொருளினும் உயர்வு உடைத்தாகிய உயிர்கள் **ஆதி பரமேஸ்வரனைத் தமக்கு முதலாக உடைய என்றும் ஆம்.** அஃதேல், அவன் முதலாயின வழி யாங்ஙனம் முதலாயினனாகக் கூறினாரென்று பிறிதொன்று தோற்றுதற்கு அடியாய் நிற்பதும் முதலாம். பசு எவையிற்றினும் சிறப்புடைத்தாய் முன்னால் எண்ணப்படுவதும் முதல் ஆண்டு உவமையாகக் கூறிய அகரம் இருபகுதியும் உடைத்தாயினும் ஏனைய எழுத்துக்களுக்கு அடியாய் நிற்றல் எல்லாராலும் அறியப்பட்டமையான் தலைமை பற்றிக் கூறினார் என்று கொள்ளப்படும்.

**பரிதி:** உயிரெழுத்துப் பன்னிரண்டுக்கும் அகரம் முதலெழுத்தாதல் முறைமைபோல; ஆதியான பகவன் முதலாம் உலகத்துக்கு என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காலிங்கர்:** அகரமாகிய எழுத்தின்கண் விரிந்தன ஏனையெழுத்துக் களும், அவற்றானாகிய சொற்களும், மற்றைச் சொற்றொடர்புடைய ஏனைத்துக் கலைகளும் மற்றும் யாவையுமாகிய அது மற்றியா தொரு படி அப்படியே; மூலகாரணனாகிய இறைவன் கண்ணே நுண்பூதமும், மற்று அவற்றின்வழி விரிந்த வான், வளி, தீ, நீர், நிலம் என்கிற ஐம் பெரும் பூதமும், அவற்றின் வழி விரிந்த நடப்பன நிற்பனவாகிய இரு வகைப் பல்லுயிர்களும், மற்றும் இவ்வுயிர்கள் வாழ்கின்ற உலகங்க ளனைத்தும் என்றவாறு.

**பரிமேலழகர்:** எழுத்துக்கள் எல்லாம் அகரம் ஆகிய முதலை உடை யன. அதுபோல; உலகம் ஆதிபகவன் ஆகிய முதலை உடைத்து.

**பரிமேலழகர் குறிப்புரை:** இது தலைமை பற்றி வந்த எடுத்துக்காட்டு உவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தான் அன்றி நாதமாத்திரை ஆகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கை உணர்வான் அன்றி இயற்கை உணர்வான் முற்றும் உணர்தலானும் கொள்க. தமிழ் எழுத்திற்கே அன்றி வட எழுத்திற்கும் முதலாதல் நோக்கி, 'எழுத்து' எல்லாம் என்றார். ஆதிபகவன் என்னும் இரு பெயரொட்டுப் பண்புத்தொகை வடநூல் முடிபு. 'உலகு' என்றது ஈண்டு உயிர்கள் மேல் நின்றது. காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூற வேண்டுதலின், 'ஆதிபகவன் முதற்றே' என உலகின் மேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும், உலகிற்கு முதல் ஆதி பகவன் என்பது கருத்தாகக் கொள்க. ஏகாரம் - தேற்றத்தின்கண் வந்தது. இப்பாட்டான் முதற்கடவுளது உண்மை கூறப்பட்டது.

மணக்குடவரும், பரிமேலழகரும் எழுத்துக்கள் அகரத்தை முதலாக உடையன போல என்றும், பரிப்பெருமாள் சொல்லிற்குக் காரணமாகிய எழுத்தும் சொல்லும் பொருளும் அகரத்தை முதலாக உடையன போல என்றும், பரிதி உயிரெழுத்துப் பன்னிரண்டுக்கும் அகரம் முதலெழுத்து ஆதல் போல என்றும், காலிங்கர் எழுத்து, சொல், சொல் தொடர் புடைய கலைகள் எல்லாம் அகர எழுத்தின் விரிந்தன போல என்றும் இப்பகுதிக்கு உரை தருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய ஆசிரியர்கள் அனைவரும் உலகம் இறைவனை முதலாக உடையது என்ற கருத்திலேயே உரை பகர்கின்றனர். ஆதிபகவன் என்ற சொற்றொடரை விளக்குவதில் அவர்கள் சிறிது வேறுபடுகின் றனர். ஆதிபகவன் என்றதற்கு ஆதியாகிய பகவன் என்று மணக் குடவரும் பரிதியும், **ஆதி பரமேஸ்வரன் என்று பரிப்பெருமாளும்**, மூல காரணனாகிய இறைவன் என்று காலிங்கரும் ஆதிபகவன் என்று பரிமேலழகரும் கூறினர்.

## 2. கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்

*சிவனை வாலறிவன் எனக் கூறும் குறள்*

***அதிகாரம்: கடவுள் வாழ்த்து -குறள் எண்: 2***

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

## இரண்டாவது குறளுக்கு பழைய ஆசிரியர்கள் எழுதிய உரைகள்:

**மணக்குடவர்:** மேற்கூறிய வெழுத்தினானாகிய சொற்களெல்லாங் கற்ற தனானாகிய பயன் வேறியாது? விளங்கின அறிவினை உடையவன் திருவடியைத் தொழாராயின்.

**மணக்குடவர் குறிப்புரை:** சொல்லினானே பொருளறியப்படுமாதலான் அதனைக் கற்கவே மெய்யுணர்ந்து வீடுபெறலாகும். மீண்டும் வணக்கம் கூறியது எற்றுக்கென்றாற்கு, இஃது அதனாற் பயனிது வென்பதூஉம், வேறுவேறு பயனில்லையென்பதூஉம் கூறிற்று. `கற்பக் கழிமட மஃகும் (நான்மணிக்கடிகை 28) என்றாருமுளர்.

**பரிப்பெருமாள்:** மேற்கூறிய வெழுத்தினானாகிய சொற்களெல்லாங் கற்றதனானாகிய பயன் வேறியாது? விளங்கின வறிவினை யுடையவன் திருவடியைத் தொழாராயின்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிப்பெருமாள் குறிப்புரை:** சொல்லினானே பொருளறியப்படுமாதலான் அதனைக் கற்கவே மெய்யுணர்ந்து வீடுபெறலாகும். மீண்டும் வணக்கம் கூறியது எற்றுக்கென்றாற், கற்றதனாலாய பயனிது வென்பதும், வேறு கூறிற்று. `கற்பக் கழிமட மஃகும் (நான்மணிக்கடிகை 28) என்றாரு முளர்.

**பரிதி:** சாத்திரம் கற்றும் அதனால் ஆகிய பயன் என்ன? சாத்திரம்- கடவுள் வழிபாட்டை வற்புறுத்தும் நூல். **மேலறிவாளனான சிவன் ஸ்ரீபாதத்தை வணங்காராகில் என்ற வாறு.**

**காலிங்கர்:** பலவகைப்பட்ட கலைகளையும் கற்றதனால் உள்ள பயன் யாது கொல்லோ? மாசற்ற அறிஞனாகிய இறைவனது தூய அடியினை வணங் காராயின் என்றவாறு.

**காலிங்கர் குறிப்புரை:** வாலிமை என்பது வெண்மை; பெருமை என்று மாம்.

**பரிமேலழகர்:** எல்லா நூல்களையும் கற்றவர்க்கு அக்கல்வி அறிவான் ஆய பயன் யாது? மெய்யுணர்வினை உடையானது நல்ல தாள்களைத் தொழாராயின்?

**பரிமேலழகர் குறிப்புரை:** எவன் என்னும் வினாப்பெயர் என் என்று ஆய், ஈண்டு இன்மை குறித்து நின்றது. 'கொல்' என்பது அசைநிலை. பிறவிப் பிணிக்கு மருந்து ஆகலின் 'நற்றாள்' என்றார். ஆகம அறி விற்குப் பயன் அவன் தாளைத் தொழுது பிறவியறுத்தல் என்பது இத னான் கூறப்பட்டது. ஆகமம்-நூல்கள். ஆகமங்கள் சிறப்பு வகையான கடவுள் வழிபாட்டையே உணர்த்துவன.

'நற்றாள் தொழாஅர் எனின்; என்றதற்கு திருவடியை வணங்காவிட் டால் என்ற பொருளிலேயே பழம் ஆசிரியர்கள் அனைவரும் இப் பகுதிக்கு உரை கூறினர். வாலறிவன் என்ற சொல்லுக்கு மணக் குடவர்/பரிப்பெருமாள் விளங்கின அறிவினை உடையவன் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமேலழகர் மெய்யுணர்வினை உடையான் என்றும் பொருள் கூறினர். **பரிதி சமயக் கடவுளான சிவன் என்று இச்சொல்லுக்கு உரை தந்தார்.** காலிங்கர் மாசற்ற அறிஞனாகிய இறைவன் என்று பொருள் உரைத்தார். 'கல்வி பெற்றதனால் என்ன பயன்?' எனப் பழைய ஆசி ரியர்கள் இப்பகுதிக்குப் பொருள் கண்டனர். மற்றவர்கள் பொதுவாக நூல்கள் கற்றதனால் என்று கூற, பரிதி 'சாத்திரம் கற்றதனால்' என்று சாத்திர நூல்கள் பற்றியதாக உரைக்கிறார். பரிமேலழகர் சிறப்புரையில் ஆகம அறிவு என்று குறிப்பிட்டதால் ஆகம நூலைக் கற்றதை அவர் குறிக்கிறார் எனலாம்.

## 3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

*சிவனை மலர்மிசை ஏகினான் எனக் குறிப்பிடும் குறள்*
***அதிகாரம்:கடவுள் வாழ்த்து குறள் எண்:3***

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

## மூன்றாவது குறளுக்கு பழைய ஆசிரியர்கள் எழுதிய உரைகள்:

**மணக்குடவர்:** மலரின்மேல் நடந்தானது மாட்சிமைப்பட்ட திருவடியைச் சேர்ந்தவர்; நிலத்தின்மேல் நெடுங்காலம் வாழ்வார்.

**மணக்குடவர் குறிப்புரை:** நிலம் என்று பொதுப்படக் கூறியவதனான் இவ்வுலகின் கண்ணும் மேலுலகின் கண்ணுமென்று கொள்ளப்படும். தொழுதாற் பயனென்னையென்றாற்கு, போகநுகர்தலும் வீடுபெறலுமெ ன்று கூறுவார் முற்படப் போகநுகர்வாரென்று கூறினர்.

**பரிப்பெருமாள்:** மலரின்மேல் நடந்தானது மாட்சிமைப்பட்ட திருவடி யைச் சேர்ந்தவரன்றே; நிலத்தின்மேல் நெடுங்காலம் வாழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிப்பெருமாள் குறிப்புரை:** நிலம் என்று பொதுப்படக் கூறுவதனான் இவ்வுலகின் கண்ணும் மேலுலகின் கண்ணும் என்று கொள்ளப்படும். தொழுதாற் பயனென்னை என்றார்க்குப் போக நுகர்தலும், வீடு பெறலு மென்று கூறுவார் முற்படப் போக நுகர்வாரென்று கூறினார்.

**பரிதி:** பக்த சனங்கள் இட்ட புஷ்பத்தின் மேல் எழுந்தருளி இருக்கும் **சிவன் ஸ்ரீபாதத்தை மனசிலே பற்றவைத்தார்; 'பூமியின்கண் சகல பாக்கியமும் அனுபவிப்பார்'**

**காலிங்கர்:** மலர்மிசை ஏகினான் என்பது எல்லாருடைய நெஞ்சத் தாம ரையினுஞ் சென்று பரந்துள்ளான். மாணடி என்பது மாட்சியுள்ள அடி. நிலமிசை நீடுவாழ்வார் என்பது நித்தராயுள்ளார். இந்நிலத்தின் கண் இவ்வாறு வணங்கி வழிபட்டு எவ்வுயிர்க்கும் உயிராய் நின்ற இறைவ னது குற்றம் தீர்ந்த அடியினைச் சேர்ந்தார் யாவர். மற்று அவரே முத்தர் ஆவார் என்றவாறு. நித்தர்-தம்முடைய யோகவன்மையால் பல ஆண்டு வாழ்பவர்; முத்தர்-வினைக்கட்டிலிருந்து விடுபட்டவர்.

**பரிமேலழகர்:** மலரின் கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடி களைச் சேர்ந்தார். எல்லா உலகிற்கும் மேலாய வீட்டு உலகின் கண் அழிவின்றி வாழ்வார்.

**பரிமேலழகர் குறிப்புரை:** அன்பான் நினைவாரது உள்ளக் கமலத் தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின் 'ஏகினான்' என இறந்த காலத்தால் கூறினார்; என்னை? "வாராக் காலத்தும் நிகழும் காலத்தும் ஓராங்கு வரூம் வினைச் சொற் கிளவி இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல் விரைந்த பொருள் என்மனார் புலவர்" (தொல், சொல், வினை, 44) என்பது ஓத்தாகலின். இதனைப் 'பூமேல் நடந்தான்' என்பதோர் பெயர் பற்றிப் பிறிதோர் கடவுட்கு ஏற்றுவாரும் உளர். சேர்தல் - இடைவிடாது நினைத்தல்.

'இறைவன் திருவடி சேர்ந்தார்' என்றபடி பழம் ஆசிரியர்கள் இப்பகுதி க்கு உரை நல்கினர். 'மலர்மிசை ஏகினான்' என்ற தொடரை விளக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதில் இவர்கள் வேறுபடுகின்றனர்; மணக்குடவரது உரை நடை சமண சமயக் கடவுளைக் குறிப்பதாக அமைகிறது என்பர்; **பரிதியார் சிவன் என்று வைதிக சமயக் கடவுளைக் குறிக்கிறார்.** காலிங்கர் 'எல்லாருடைய நெஞ்சத் தாமரையில் சென்று பரந்துள்ளவன்' என்று கூற பரிமேலழகர் 'அன்பான் நினைவாரது 'நெஞ்சத்தாமரையில் விரைந்து சேர்ந்தார்'' என்கின்றார்.

பழம் ஆசிரியர்களுள், மணக்குடவர் இவ்வுலகம், மேலுலகம் இரண்டின் கண்ணும் நீடுவாழ்வார் என்று சொல்ல, பரிதியும் காலிங்கரும் இந் நிலத்தின் கண் வாழ்வர் என்பர். பரிமேலழகர் வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார் என்கிறார்.

## 4. வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு

*சிவனின் பாதத்தை இலான் அடி எனக் கூறும் குறள்*

***அதிகாரம்: கடவுள் வாழ்த்து குறள் எண்: 4***

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

## நான்காவது குறளுக்கு பழைய ஆசிரியர்கள் எழுதிய உரைகள்:

**மணக்குடவர்** : இன்பமும் வெகுளியு மில்லாதானது திருவடியைச் சேர்ந்தவர். எவ்விடத்து மிடும்பை யில்லாதவர்.

**மணக்குடவர் குறிப்புரை** : பொருளுங் காமமுமாகாவென்றற்கு "வேண்டுதல் வேண்டாமையிலான்" எனப்பெயரிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிப்பெருமாள்** : காமமும் வெகுளியு மில்லாதானது திருவடியைச் சேர்ந்தவர்; காமமும் வெகுளியு மில்லாதானது திருவடியைச் சேர்ந்தவர் எவ்விடத்து மிடும்பை யில்லாதவர்.

**பரிப்பெருமாள் குறிப்புரை** : இது கையாறு கெடும் என்றது. அறம் வேண்டும் என்றதற்கு அறவாழி அந்தணன் என்று பெயரிட்டார். பொருளும் காமமும் ஆகாவென்றற்கு 'வேண்டுதல் வேண்டாமை யிலான்' என்று பெயரிட்டார்.

**பரிதி** : விருப்பு வெறுப்பு இல்லாதான் பாதம் சேர்ந்தார்க்கு; துன்பம் இல்லை என்றவாறு.

**காலிங்கர்** : உலகத்து யாதானும் ஒருபொருளை விரும்புதலும் விரும்பா மையும் இல்லாத இறைவன் அடியை அன்பொடு சேர்ந்தார்க்கு; எவ்விடத்தானும் துயரம் இல்லை என்றவாறு.

**பரிமேலழகர்** : ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலும் இல்லா தவன் அடியைச் சேர்ந்தார்க்கு. எக்காலத்தும் பிறவித் துன்பங்கள் உளவாகா.

**பரிமேலழகர் குறிப்புரை:** பிறவித் துன்பங்களாவன : தன்னைப் பற்றி வருவனவும், பிற உயிர்களைப் பற்றி வருவனவும், தெய்வத்தைப் பற்றி வருவனவும் என மூவகையான் வரும் துன்பங்கள். அடி சேர்ந்தார்க்கும் அவ்விரண்டும் (வேண்டுதலும் வேண்டாமையும்) இன்மையின், அவை காரணமாக வரும் மூவகைத் துன்பங்களும் இலவாயின.

பழம் ஆசிரியர்களுள் மணக்குடவரும் பரிப்பெருமாளும் வேண்டுதல், வேண்டாமை என்றதற்கு இன்பமும் வெகுளியும் என்று பொருள் கொள்கின்றனர்; பரிதி விருப்பு- வெறுப்பு என்கிறார்; காலிங்கர் விரும் புதல்-விரும்பாமை என்று உரை கண்டார்; பரிமேலழகர் இவரைத் தழுவி விழைதலும் வெறுத்தலும் என்றார். 'இவை இல்லாதவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடியைச் சேர்ந்தார்க்கு' என்று தொல்லாசிரியர்கள் இப்பகுதியை விளக்குவர்.

பழைய ஆசிரியர்களில், 'யாண்டும்' என்பதற்கு மணக்குடவர், பரிப் பெருமாள், காலிங்கர் ஆகியோர் எவ்விடத்தும் என இடப் பொருளில் உரை கண்டனர். இச்சொல்லுக்கு பரிமேலழகர் எப்பொழுதும் என்று காலப்பொருள் கொள்வார். இடும்பை என்பதற்கு அனைவரும் துன்பம் என்றே பொருள் கூறினர். பரிமேலழகர் அது பிறவித் துன்பங்கள் குறித் தது என்றார். எவ்விடத்தும்/எக்காலத்தும் துன்பங்கள் இல்லை என்பது இப்பகுதிக்குப் பழம் ஆசிரியர்கள் கூறும் பொருளாகும்.

## 5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்

*சிவனை இறைவன் எனக் குறிப்பிடும் குறள்*

***அதிகாரம்: கடவுள் வாழ்த்து குறள் எண்: 5***

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

### ஐந்தாவது குறளுக்கு பழைய ஆசிரியர்கள் எழுதிய உரைகள்:

**மணக்குடவர்:** மயக்கத்தைச் சேர்ந்த நல்வினை தீவினையென்னும் இர ண்டு வினையுஞ் சேரா; மயக்கத்தைச் சேர்ந்த-மயக்கத்தால் விளைந்த, தலைவனது ஆகிய மெய்ப்பொருள் சேர்ந்த புகழ்ச்சிச் சொற்களைப் பொருந்தினார் மாட்டு. [மெய்ப்பொருள் சேர்ந்த-நிலையான பொருள் பொதிந்த]

**பரிப்பெருமாள்:** மயக்கத்தைச் சேர்ந்த நல்வினை தீவினையென்னு மிர ண்டு வினையுஞ் சேரா; தலைவனது ஆகிய மெய்ப்பொருள் சேர்ந்த புகழ்ச்சிச் சொற்களைப் பொருந்தினார் மாட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிப்பெருமாள் குறிப்புரை :** தலைவனதாகிய மந்திரங்கள் எனினும் அமையும். புரிதல்-இடைவிடாமல் ஓதுதல்.இனிவினை கெடும் என்றது.

**பரிதி :** மும்மல வித்து ஆகிய பாவமானது இல்லை; மும்மலம்: ஆண வம், கன்மம், மாயை, **சிவகீர்த்தி பாராட்டுவாரிடத்து.**

**காலிங்கர் :** அறியாமையாகின்ற இருள் காரணமாக வந்து இயைகின்ற நல்வினை, தீவினை என்னும் இரண்டு வினையும் சேரா; அவ்விறை வனால் பெற்ற உபதேசப் பொருளோடு பொருந்திப் புகழ்தங்கி நின்ற வரிடத்து.

**பரிமேலழகர் :** மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினை, தீவினை என் னும் இரண்டு வினையும் உளவாகா; இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பினாரிடத்து.

**பரிமேலழகர் குறிப்புரை :** இன்ன தன்மைத்து என ஒருவராலும் கூறப் படாமையின் அவிச்சையை 'இருள்' என்றும், நல்வினையும் பிறத்தற்கு ஏதுவாகலான் 'இருவினையும் சேரா. [அவிச்சை-அறியாமை]

**பரிமேலழகர் குறிப்புரை :** இறைமைக் குணங்கள் இலராயினாரை உடையர் எனக்கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின், அவை முற்றவும் உடைய இறைவன் புகழே பொருள் சேர் புகழ் எனப்பட்டது. புரிதல்-எப்பொழுதும் சொல்லுதல்.

பழைய ஆசிரியர்கள் மயக்கம், அறியாமை சேர்ந்த நல்வினை,தீவினை என்ற இருவினையும் சேரா என்று இத்தொடரை விளக்கினர்.

மணக்குடவர், பரிப்பெருமாள் ஆகியோரும் பரிமேலழகரும் 'கடவுளது மெய்ப்பொருள் சேர்ந்த புகழ்ச்சிச் சொற்கள் சொல்வாரிடத்து' என்ற பொருளில் உரை செய்தனர். **பரிதி 'சிவன் புகழ் போற்றுவாரிடத்து' என்றார்.** காலிங்கர் 'இறைவனது அருள் பெற்ற உபதேசப் பொரு ளோடு பொருந்தி புகழ்தங்கி நின்றவரிடத்து' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. பொறிவாயில் ஐந்தவித்தான்

*சிவனை ஐந்தவித்தான் எனக் குறிப்பிடும் குறள்*

***அதிகாரம்: கடவுள் வாழ்த்து குறள் எண்: 6***

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

### ஆறாவது குறளுக்கு பழைய ஆசிரியர்கள் எழுதிய உரைகள்:

**மணக்குடவர்:** மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம்பொறி களின் வழியாக வரும் ஊறு. சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் ஐந்தின் கண்ணுஞ் செல்லும் மனநெகிழ்ச்சியை அடக்கினானது பொய் யற்ற வொழுக்க நெறியிலே நின்றாரன்றே; நெடிது வாழ்வார்.

**மணக்குடவர் குறிப்புரை:** இது சாவில்லையென்றது.

**பரிதி:** சத்த பரிச ரூப ரச சுத்தம் என்கிற பொறியை வழியாக உடைய வற்றிற்கு மனசைப் போக்காமல் காக்க வல்லார்; இகபரம் இரண்டிலும் நெறிநின்று அநேக காலம் வாழ்வர் என்றவாறு. [இகபரம்-இம்மை, மறுமை]

**காலிங்கர்:** சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்கின்ற ஐம்பொறி களை நுகர்வதற்கு வழிக் கருவியாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற ஐம்பொறிகளையும் அகத்தடக்கியவன் இறைவனது உப தேசமுறைமையாகின்ற நல்லொழுக்கத்தின் கண் வழிப்பட்டு நின்றவர்; முத்தராவர். [முத்தர்- வினைக்கட்டிலிருந்து விடுபட்டவர்]

**பரிமேலழகர்:** மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளை வழியாக உடைய ஐந்து அவாவினையும் அறுத்தானது மெய்யான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்க நெறியின்கண் நின்றார்; பிறப்புஇன்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வார்.

**பரிமேலழகர் குறிப்புரை:** இவை நான்கு பாட்டானும் இறைவனை நினைத்தலும், வாழ்த்தலும், அவன் நெறி நிற்றலும் செய்தார் வீடு பெறுவர் என்பது கூறப்பட்டது.

**பரிமேலழகர் குறிப்புரை:** புலன்கள் ஐந்து ஆகலான், அவற்றின்கண் செல்கின்ற அவாவும் ஐந்து ஆயிற்று. ஒழுக்க நெறி ஐந்தவித்தானால் சொல்லப்பட்டமையின், ஆண்டை ஆறனுருபு செய்யுட் கிழமைக்கண் வந்தது. 'கபிலரது பாட்டு' என்பது போல.

'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்றதற்கு மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளை வழியாக உடைய ஐந்து அவாவினையும் அறுத்தான் என்றபடியே அனைத்து பழம் ஆசிரியர்கள் இப்பகுதிக்கு உரை நல்கினர். ஆனால் அவன் யார் என்பதைச் சொல்வதில் இவர்கள் வேறுபடுகின்றனர். மணக்குடவரும், பரிமேலழகரும் ஐந்தவித்தான் என்ற சொல்லுக்குக் கடவுள் எனப் பொருள் படும்படியாக உரை காண்கின்றனர். பரிதி 'புலன்களைக் 'காக்கவல்லார்' என்ற பொருள் படும்படி உரை செய்திருப்பதாலும் காலிங்கர் 'ஐம்பொறிகளையும் அகத் தடக்கியவன், (கடவுள் கூறிய நல்லொழுக்க நெறியில் நின்றவர்)' என்று மொழிந்ததாலும் இவர்கள் இருவரும் ஐந்தவித்தான் என்பது மனிதர்களைக் குறிப்பதாகிறது. 'மெய்யான ஒழுக்க நெறியின்கண் நின்றார்' என்றதற்கு இறைவனது ஒழுக்க நெறியிலே நின்றார் என்று மணக்குடவரும் பரிமேலழகரும் கூறுகின்றனர். காலிங்கர் 'இறைவனது உபதேசமுறைமையாகின்ற நல்லொழுக்கத்தின் கண் வழிப்பட்டு நின்றவர்' என்கிறார்.

நெடிது வாழ்வார் என்ற பொருளில் மணக்குடவரும் பரிதியாரும் உரை கூறினர். 'இகபரம் இரண்டிலும்' என்றதால் பரிதியார் உரை இம்மை மறுமை இரண்டிலும் அநேக காலம் வாழ்வார் என்றவாறு அமைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளது. காலிங்கர் 'முத்தராவர்' என்கிறார். பரிமேலழகர் 'பிறப்பு இன்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வார்' என்றுரைத்தார்.

## 7. தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு

*சிவனை தனக்குவமை இல்லாதான் எனக் குறிப்பிடும் குறள்*

***அதிகாரம்: கடவுள் வாழ்த்து குறள் எண்: 7***

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

### எழாவது குறளுக்கு பழைய ஆசிரியர்கள் எழுதிய உரைகள்:

**மணக்குடவர்:** தனக்கு நிகர் இல்லாதானது திருவடியைச் சேர்ந்தவர்க்கு அல்லது; மனத்துண்டாம் கவலையை மாற்றுதல் அரிது.

**மணக்குடவர் குறிப்புரை :** வீடு பெறுதலாவது 'அவலக் கவலைக் கை யாற்றின்' நீங்கிப் புண்ணிய பாவம் என்னும் இரண்டினையும் சாராமல் சாதலும் பிறத்தலும் இல்லாததொரு தன்மையை எய்துதல். அது பெறும் என்பார். முற்படக் கவலை கெடும் என்றார்; அதனால் எல் லாத் துன்பமும் வருமாதலின். [அவலம்-வருத்தம் தோன்றி நிற்றல்; கவலை-யாது செய்வல் என்றல்]

**பரிதி:** தனக்கு ஒருவரும் நிகர் இல்லாதவன் ஸ்ரீபாதத்தைச் சேராதவர்; மனத்துயரம் மாற்றுவார் அல்லர். அவர் மனத்துயரம் மாற்ற மாட்டார்.

**காலிங்கர்:** எவ்வுயிக்கும் உயிர்பொருள் ஆகின்றவனாகிய முதற் பொரு ளாம் தன்மைக்கு இணையில்லாதவன் தனது அடியினை உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகச் சேர்ந்தவர்க்கு அல்லது; மற்றி யாவர்க்கும் தமது நெஞ்சத்துக் கவலை நீக்குதற்கு அரிது.

**பரிமேலழகர்:** ஒருவாற்றானும் தனக்கு நிகர் இல்லாதவனது தாளைச் சேர்ந்தார்க்கு அல்லது; மனத்தின் கண் நிகழும் துன்பங்களை நீக்குதல் உண்டாகாது.

**பரிமேலழகர் குறிப்புரை:** "உறற்பால தீண்டா விடுதலரிது" (நாலடி.109) என்றாற் போல, ஈண்டு 'அருமை' இன்மைமேல் நின்றது. தாள் சேரா தார் பிறவிக்கு ஏது ஆகிய காம வெகுளி மயக்கங்களை மாற்ற மாட் டாமையின், பிறந்து இறந்து அவற்றான் வரும் துன்பங்களுள் அழுந் துவர் என்பதாம்.

'தனக்கு நிகர் இல்லாதானது திருவடியைச் சேர்ந்தவர்க்கு அல்லது' என்ற பொருளில் பழம் ஆசிரியர்கள் இப்பகுதிக்கு உரை நல்கினர். 'தமது நெஞ்சத்துக் கவலை நீக்குதற்கு இல்லை' என்றபடி இப்பகுதி க்கான பழைய ஆசிரியர் உரைகள் அமைந்தன.

## 8. அறவாழி அந்தணன்

*சிவனை அறவாழி அந்தணன் எனக் குறிப்பிடும் குறள்*

***அதிகாரம்: கடவுள் வாழ்த்து குறள் எண்: 8***

அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

## எட்டாவது குறளுக்கு பழைய ஆசிரியர்கள் எழுதிய உரைகள்:

**மணக்குடவர்:** அறமாகிய கடலையுடைய அந்தணனது திருவடியைச் சேர்ந்தவர்க்கல்லது; பிறவாழியை நீந்தலாகாது; அது பெறுதலரிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணக்குடவர் குறிப்புரை:** இது காமமும் பொருளும் பற்றி வரும் அவலங்கெடுமென்றது. [அவலம்-வருத்தம் தோன்றி நிற்றல்]

**பரிப்பெருமாள்:** அறமாகிய கடலையுடைய அந்தணனது திருவடியைச் சேர்ந்தவர்க்கல்லது; ஒழிந்த பொருளும் காமமுமாகிய கடலை நீந்தியேறுதலரிது.

**பரிப்பெருமாள் குறிப்புரை:** அறத்தைச் சொல்லிப் பிற எனலே அற முதலான மூன்றினும் ஒழிந்த இரண்டினும் என்பது பெறுதும். இது காமமும் பொருளும் பற்றிவரும் அவலங் கெடுமென்றது

**பரிதி:** தன்மம் என்னும் **சமுத்திரமாக உள்ள பரமேசுரன் பாதந்துணை இல்லாதவர்;** பாவக்கடலை நீந்தமாட்டார்.

**காலிங்கர்:** அறமாகிய பெருவெள்ளமான அனைத்துயிர்கட்கும் தண்ணளியை உடையனாகிய இறைவனது தாளினை வணங்கி வழிபட்டார்க்கல்லது; மற்று(றி) யாவர்க்கும் பிறவி பௌவத்தைக் கடத்தல் அரிது. [பௌவம்-கடல்]

**பரிமேலழகர்:** அறக்கடல் ஆகிய அந்தணனது தாள் ஆகிய புணையைச் சேர்ந்தார்க்கல்லது; பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது.

**பரிமேலழகர் குறிப்புரை:** பல்வேறு வகைப்பட்ட அறங்கள் எல்லாவற்றையும் தனக்கு வடிவமாக உடையான் ஆகலின்,அறஆழி அந்தணன் என்றார். 'அறஆழி' என்பதனைத் தரும சக்கரம் ஆக்கி, 'அதனை உடைய அந்தணன்' என்று உரைப்பாரும் உளர். அறம், பொருள், இன்பம் என உடன் எண்ணப்பட்ட மூன்றனுள் அறத்தை முன்னர்ப் பிரித்தமையான், ஏனைப் பொருளும், இன்பமும் பிற எனப்பட்டன. அப்புணையைச் சேராதார் கரைகாணாது அவற்றுள்ளே அழுந்துவர் ஆகலின், 'நீந்தல் அரிது' என்றார். இஃது ஏகதேச உருவகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய ஆசிரியர்கள் அனைவரும் அறவாழி என்ற சொல்லுக்கு அறக்கடல் என்றும் அந்தணன் என்றதற்கு இறைவன் என்றும் பொருள் கண்டனர். பரிமேலழகரது விரிவுரையில் "'அறஆழி' என்ப தனைத் தரும சக்கரம் ஆக்கி, 'அதனை உடைய அந்தணன்' என்று உரைப்பாரும் உளர்" என்று குறித்துள்ளதை நோக்கும்போது அறவாழி என்பதற்கு தரும சக்கரம் என்று அவருக்கு முன்னர் பொருள் கண்டு ள்ளப்பட்டது தெரிகிறது.

மணக்குடவர் உரையைப் பின்பற்றிப் பரிப்பெருமாளும் பரிமேலழகரும் பிற கடல் என்பதற்கு அறம் தவிர்த்த பொருளும் இன்பமுமாகிய கடல் கள் என்று பொருளுரைத்தனர். காலிங்கர் பிற கடல் என்றதற்குப் பிற விக்கடல் என்று கொண்டார். பரிதி பாவக்கடல் என்றார். பொருளி ன்பக் கடல், பாவக்கடல், பிறவிக்கடல் என்ற மூவகைக் கடல்களைத் தொல்லாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

## 9. கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்

*சிவனை எண்குணத்தான் எனக் கூறும் குறள்*

***அதிகாரம்: கடவுள் வாழ்த்து குறள் எண்: 9***

கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

### ஒன்பதாவது குறளுக்கு பழைய ஆசிரியர்கள் எழுதிய உரைகள்:

**மணக்குடவர்:** அறிவில்லாத பொறிகளையுடைய பாவைகள் போல, ஒரு குணமுமுடையனவல்ல. எட்டுக் குணத்தினையுடையவன் திருவடி யினை வணங்காத தலையினையுடைய உடம்புகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணக்குடவர் குறிப்புரை:** உயிருண்டாகில் வணங்குமென் றிழித்து உடம்புகள் என்றார்.

**பரிப்பெருமாள்:** அறிவில்லாத பொறிகளையுடைய பாவைகள் போல, எட்டுக் குணத்தினையுடையவன் திருவடியினை வணங்காத தலையி னையுடைய உடம்புகள்.

**பரிப்பெருமாள் குறிப்புரை:** குணமில்லை என்றது பயனில்லை என்ற வாறு. இது வணங்காதார்க்கு உளதாகும் குற்றம் கூறிற்று. இவை எல்லாம் தலைமை பற்றிக் கூறியவாறு கண்டுகொள்க. இவ்வதிகா ரத்திற் கூறிய கடவுட் பெயர் எல்லாம் ஒரு சமயத்தார் கூறும் பெய ரன்றி, வேறு வேறாகப் பல சமயத்தார் கூறும் பெயராகத் தோன்றா நின்றது. அதற்குக் காரணம் என்னை எனின் இஃது எமக்குப் புலனா யிற்றன்று. அச்சமயத்தார் எல்லாரும் தன்னெறிக்கண் செல்லும் உள்ள த்தார் ஆகலின் யாதானும் ஒரு சமயத்தார் கூறிய கடவுளை வணங் கின் நன்றி பயக்கும் என்பது போதுங் கருத்து.

**பரிதி:** கோளாகிய நவக்கிரகங்களும், பலனாகிய கண், வாய், மூக்கு, செவி, மெய் என்னும் ஐம்புலன்களும் உண்டாகிலும் பயனில்லை. இவர் குறிப்பிடும் நவக்கிரகங்கள்: ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது. **எட்டுக் குணங்களை உடைய சிவன் சிவந்த தாளை வணங்காத தலை.** எட்டுக்குணங்களாவன: அனந்தஞானம், அனந்த வீரியம், அனந்த குணம், அனந்த தெரி சனம், நாமமின்மை, கோத்திரமின்மை, அவாவின்மை, அழியாயியல்பு என்பன.

**காலிங்கர்:** கோட்பரமில்லாத பொறியினைப் போலக் குணமில்லனவாம். கோட்பரம் - கொள்கை நோக்கு, எண்ணப்பட்ட குணங்களை உடைய இறைவனது தாளினை வணங்கப்பெறாத தலைகள் என்றவாறு.

**பரிமேலழகர்:** தத்தமக்கு ஏற்ற புலன்களைக் கொள்கை இல்லாத பொறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் போலப் பயன்படுதலுடைய அல்ல; எண் வகைப்பட்ட குணங்களை உடையானது தாள்களை வணங்காத தலைகள்.

**பரிமேலழகர் குறிப்புரை:** எண் குணங்களாவன: தன்வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவு இல் ஆற்றல் உடைமை, வரம்பு இல் இன்பம் உடைமை என இவை. **இவ்வாறு சைவ ஆகமத்துக் கூறப்பட்டது.** 'அணிமா'வை முதலாக உடையன எனவும், 'கடை இலா அறிவை' முதலாக உடையன எனவும் உரைப்பாரும் உளர். காணாத கண் முதலியன போல வணங்காத தலைகள் பயன் இல எனத்தலைமேல் வைத்துக் கூறினார். கூறினாரேனும், இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயன் இல என்பதும் கொள்க. இவை மூன்று பாட்டானும் அவனை நினைத்தலும், வாழ்த்தலும், வணங்கலும் செய்யா வழிப்படும் குற்றம் கூறப்பட்டது.

மணக்குடவர் "பொறிகளை உடைய பொம்மை போல' குணமில்லை' என இப்பகுதிக்குப் பொருள் கொள்கிறார். பரிதி "கோள்கள் அவற்றின் பலனாகிய ஐம்புலன்கள் இருப்பினும் எனப் பொருள் கூறி சித்திரத்தில் எழுதிய மரப்பாவைக்கு நிகராய் பயனில்லை" என்று விளக்கம் தருகிறார். காலிங்கர் 'புலன் உணர்வு அற்ற ஐம்பொறிகள்' எனக் குறிக்கிறார். பரிமேலழகரது 'கொள்கை இல்லாத பொறிகள் போலப் பயன் படுதலுடைய அல்லாத" என்ற உரை காலிங்கர் உரையை ஒத்தது.

மணக்குடவர், பரிதியார், பரிமேலழகர் ஆகிய மூவரும் 'எட்டுக் குணங்களைக் கொண்டவன் திருவடியை வணங்காத தலை' என்று பொருள் கூற இப்பகுதிக்குக் காலிங்கர் மாறுபட்ட உரையாக எண்ணப் பட்ட குணங்களை உடைய இறைவன் தாளை வணங்காத தலை' என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர்

*சிவனை இறைவன் எனக் குறிப்பிடும் குறள்*

***அதிகாரம்:கடவுள் வாழ்த்து குறள் எண்:10***

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

### பத்தாவது குறளுக்கு பழைய ஆசிரியர்கள் எழுதிய உரைகள்:

**மணக்குடவர்:** பிறவியாகிய பெரிய கடலை நீந்தியேறுவர். இறைவனது அடியைச் சேராதவர் அதனுள் அழுந்துவார்.

**பரிதி:** பிறவியாகிய சமுத்திரத்தை நீந்துவர் **சிவனடி சேர்ந்தார். சிவனடி சேராதவர் பிறவியாகிய சமுத்திரத்தை நீந்தமாட்டார்** என்றவாறு.

**காலிங்கர்:** பிறவியாகிய பெரிய பெளவத்தினைக் கடந்து முத்தராவர் இறைவனடியைச் சேர்ந்தார்.[பெளவம்-கடல்] மற்று இங்ஙனம் சேராதார் எஞ்ஞான்றும் பிறவிப் பெளவத்தைக் கடத்தல் இலர் என்றவாறு.

**பரிமேலழகர்:** (இறைவன் அடி என்னும் புணையைச் சேர்ந்தார்) பிறவி ஆகிய பெரிய கடலை நீந்துவர். அதனை (இறைவன் அடியை)ச் சேராதார் நீந்தமாட்டாராய் அதனுள் அழுந்துவர்.

**பரிமேலழகர் குறிப்புரை:** காரண காரியத் தொடர்ச்சியாய் கரை இன்றி வருதலின், 'பிறவிப் பெருங்கடல்' என்றார். சேர்ந்தார் என்பது சொல் லெச்சம். உலகியல்பை நினையாது இறைவன் அடியையே நினைப் பார்க்குப் பிறவி அறுதலும், அவ்வாறன்றி மாறி நினைப்பார்க்குப் அஃது அறாமையும் ஆகிய இரண்டும் இதனான் நியமிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய ஆசிரியர்கள் அனைவரும் 'பிறவிப் பெருங்கடல்' என்பதற்கு பிறவி ஆகிய பெருங்கடல் என்று பொருள் கூறினர். **பரிதி சமயச் சார்பாக சிவனடி சேர்ந்தார் பிறவிச் சமுத்திரத்தை நீந்துவர் என்கிறார்.** காலிங்கர் 'பிறவியாகிய பெரிய பௌவத்தினைக் கடந்து முத்தராவர்' என்று வீடு பேறு பெறுதல் கருத்தை முன்வைக்கிறார். பரிமேலழகர் தனது விரிவுரையில் 'காரண காரியத் தொடர்ச்சியாய் கரை இன்றி வருதலின், 'பிறவிப் பெருங்கடல்' என்றார். மேலும் அவர் 'உலகி யல்பை நினையாது இறைவன் அடியையே நினைப்பார்க்குப் பிறவி அறுதலும், அவ்வாறன்றி மாறி நினைப்பார்க்குப் அஃது அறாமையும் ஆகிய இரண்டும் இதனான் நியமிக்கப்பட்டன' என்றும் கூறினார். அதாவது முற்பிறப்பின் வினையால் அடுத்த பிறப்பும் அப்பிறப்பின் பயனால் மறு பிறப்புமாகத் தொடர்ந்து முடிவில்லாமல் வரும் கரை காணாப் பிறவிக் கடல் என்று உரைத்தார். பழைய ஆசிரியர்கள் அனைவரும் 'இறைவனது அடியைச் சேராதவர் பிறவிக் கடலுள் அழுந்துவார்' என்ற பொருளில் உரை செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைக் காப்பியங்கள்

தமிழில் எழுதப்பட்ட ஐம்பெரும் காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி என்பவை யாகும். இந்த நூலின் பெயர்கள் அணிகலன்களின் பெயரால் அமை ந்துள்ளன.

**சிலப்பதிகாரம்-**சிலம்பு என்பது மகளிர் அணியும் காலணி. இது கண்ணகியின் சிலம்பால் உருவான வரலாறு.
**மணிமேகலை-**ஆடை நழுவாமலிருக்க மகளிர் இடுப்பில் அணியும் அணி. அது அதனை அணிந்த பெண்ணை உணர்த்தும். இது மணி மேகலை எனும் பெயர் கொண்ட பெண்ணின் வரலாறு.
**குண்டலகேசி-**குண்டலம் என்பது மகளிர் அணியும் காதுவளையம். குண்டலமும் கூந்தல் அழகும் கொண்டவள் குண்டலகேசி. இது குண்டலகேசி என்பவளின் வரலாறு கூறும் நூல்.
**வளையாபதி-**வளையல் அணிந்த பெண் வளையாபதி. இது வளையா பதியின் வரலாறு கூறும் நூல்.
**சீவகசிந்தாமணி**-சிந்தாமணி என்பது அரசன் மணி முடியில் உள்ள கிரீடத்தில் பதிக்கப்படும் மணிக்கல் ஆகும். இது சீவகனை மணிமுடியாக்கி எழுதப்பட்ட வரலாறு.

இவற்றில் முதன்மையானதும், காலத்தால் முற்பட்டதும் மேலும் காலத்தாலும், கதைத் தொடர்பாலும், பல வகையிலும் ஒன்றுபட்டது மான சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையையும் இரட்டைக் காப்பிய ங்கள் என வழங்குவர். இந்நூல்கள் இரண்டும் சங்கம் மருவிய கால த்தில் தோன்றியவையாகும். ஏனையவை சோழர் காலத்தில் எழுதப் பட்டவை. சிலப்பதிகாரமானது இல்லறத்தையும், மணிமேகலை துறவற த்தையும் வலியுறுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரம்

**பாடியவர் : இளங்கோவடிகள்**

**(பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டு)**

தமிழில் வழங்கும் ஐம்பெருங் காப்பியங்களில் சிலப்பதிகாரம் முதலாவதாக வைக்கப்பட்டுள்ளது. இந்நூலை பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டில் இளங்கோவடிகள் எழுதினார். இக்காப்பியத்தின் தலைவியான கண்ணகியின் காலில் அணியப் பெற்ற சிலம்பே கதையின் கருவிற்கு அடிப்படையாக அமைந்திருந்தமையால் அவ்வணியின் பெயராலேயே காப்பியம் அழைக்கப்பட்டது. இந்நூல் 3 காண்டங்களையும், 30 காதைகளையும் கொண்டதாகும்.

பூம்புகாரில் பெரும் புகழ்மிக்க வணிகர் குடியில் தோன்றிய கோவலனும், கண்ணகியும் இக்கதையில் தலைவனும் தலைவியுமாக அமைகின்றனர். அரசனால் தலைக்கோல் பட்டம் பெற்ற மாதவி இரண்டாம் தலைவி என்றும் நிலை பெற்றுள்ளாள். இவர்களைத் தவிர, பாண்டிய மன்னன், சேரமன்னன், கவுந்தியடிகள், ஆயர்குலமகள் மாதரி, அவள் மகள் ஐயை, கண்ணகியின் தோழி தேவந்தி, மாடலமறையோன், அரண்மனைப் பொற்கொல்லன் ஆகியோர் இதில் பாத்திரங்களாக அமைகின்றனர்.

சிலப்பதிகாரத்தை எழுதியவர் இளங்கோவடிகள். இவர் சேரமான் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் இளைய மகன் என்றும், இவருக்கு மூத்தவனே புகழ் மிக்க கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவன் என்றும் கூறுவர். செங்குட்டுவன் பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவன். எனவே இளங்கோவடிகள் அக்காலத்தவரே என்பர். “வரந்தரு காதை” யில் பத்தினி விழாவிற்கு வந்தவர்களுள் கடல்சூழ் இலங்கைக் கயவாகுவும் ஒருவனாக இடம் பெறுகிறான். இவன் காலம் பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டு. எனவே நூலின் காலமும் இதுவே எனக் கணிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரத்தில் சிவன் பற்றிய பாடல்கள்

சிவபெருமானைப் பற்றிய குறிப்புகள் பல சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளமை நோக்கத்தக்கது. சிலப்பதிகாரத்தில் சைவம், வைணவம் சமணம், பௌத்தம், ஆகிய சமயச் சிந்தனைகள் காணப்படுகின்றன. சிவன், முருகன், திருமால், கொற்றவை ஆகிய தெய்வங்கள் பற்றிய பாடல்களும், சூரியன், சந்திரன் ஆகியோருக்கு கோயில்கள் இருந் தமை பற்றியும் சிலப்பதிகாரம் கூறுகிறது. இருப்பினும் பண்டைய கால த்தில் முக்கிய நகரங்களான மதுரையிலும், பூம்புகாரிலும் சிவபெருமா னுக்குப் பெருங்கோவில்கள் இருந்தமை சிலப்பதிகார பாடல்கள் மூலம் தெரிகிறது. இக்காலகட்டத்தில் தென்னிந்தியாவில் சிவவழிபாடு பெரிதும் பரவியிருந்தமையும் தெரிகிறது.

மேலும் சிலப்பதிகாரத்தில் சிவன் செஞ்சடை வானவன், பிறவா யாக்கைப் பெரியோன், நிலவுக்கதிர் முடித்த நீலிருஞ்சென்னி, உலகு பொதி உருவத்து உயர்ந்தோன் என்றெல்லாம் குறிக்கப்பட்டு, அவன் ஆடுகின்ற கொடுகொட்டி, பாண்டரங்கம் கூத்து வகைகளும், மதியி னைப் சூடியமை நஞ்சுண்ட கண்டம் கருத்தமை, சூலாயுதம் ஏந்தி யமை போன்ற தோற்றப் பொலிவுகளும், சிவபெருமானைப் பற்றிய குறிப்புகளாகச் சிலம்பில் காணப்படுகின்றன. சேரன் செங்குட்டுவன் மிகச் சிறந்த சைவபக்தனாக விளங்கியமையும், சைவ சமயத்தின் வினைக் கோட்பாடுகளும் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளமையும் நோக்கத்தக்கது.

## 1. கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில்

***மதுரை மாநகரில் வெள்ளியம்பலம் எனும் சிவனின் கோயில் இருந்தமை பற்றிக் கூறும் பாடல்.***

அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க்
கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளியம் பலத்து, நள்ளிருட் கிடந்தேன்

*(சிலப்பதிகாரம்-பதிகம்: 39-41)*

**விளக்கம் :**

**அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்-** நடுக்கமில்லாத சிறப்பினையுடைய மதுரையாகிய மூதூரிடத்துள்ள, **கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில் வெள்ளியம் பலத்து-** மன்றமாகிய பொதியில்களில் கொன்றை மாலை அணிந்த சடைமுடியையுடைய இறைவனுறையும் வெள்ளியம்பலத்துள், **நள் இருள் கிடந்தேன்-** செறிந்த இருளையுடைய அரையிரவில் துயின்றேனாக,

## 2. குழவித் திங்கள் இமையவர் ஏத்த

**தேவர்களும் போற்றுமாறு சிவபெருமானின் சடை முடிமேல் பிறைநிலவு அழகாக இருப்பதாகவும், சிவன் பெரியோன் என்று குறிக்கப்படுவதாகவும் கூறும் பாடல்**

குழவித் திங்கள் இமையவர் ஏத்த
அழகொடு முடித்த அருமைத்து ஆயினும்
உரிதின் நின்னோடு உடன்பிறப்பு உண்மையின்
பெரியோன் தருக திருநுதல் ஆக என,

*(புகார்க் காண்டம்-மனையறம் படுத்த காதை-2: 39-41)*

**விளக்கம் :**

**குழவித் திங்கள் இமையவர் ஏத்த அழகொடு முடித்த அருமைத்து ஆயினும்-**பிறை மதியானது தேவர்களும் போற்றுமாறு சிவபெருமானின் சடை முடிமேல் அழகோடு சேர்த்து முடித்த அருமையுடையதாயினும், **உரிதின் நின்னோடு உடன் பிறப்பு உண்மையின் பெரியோன் தருக திருநுதல் ஆகென -** அது நின்னோடு உடன் பிறப்பாகலின் நினக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரித் தாதலால் அப்பெரியோன் அதனை நினக்குத் திருநுதலாகத் தரக் கடவன்- இப்பாடலில் சிவபெருமான் திங்களை நுதலாகக் கொடுத் ததாகப் பாராட்டுகின்றான். இக்காதையில் பெரியோன் என்று சிவ பெருமான் குறிக்கப்படுவது நோக்கத்தக்கது.

## 3. பிறவா யாக்கைப் பெரியோன்

***பெரியோன் கோயில் என சிவன் கோயிலைக் குறிப்பிடும் பாடல்.***

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்
மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ
நான்மறை மரபின் தீமுறை ஒருபால்,

நால்வகைத் தேவரும், மூவறு கணங்களும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறுவேறு கடவுளர் சாறுசிறந்து ஒருபால்

*(புகார்க் காண்டம்-இந்திரவிழவூர் எடுத்த காதை-5: 169-178)*

**விளக்கம்:**

**பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்**- தாய்வயிற்றுப் பிறவாத திரு மேனியையுடைய மாதேவனாகிய சிவபெருமான் கோயிலும், **அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்**- ஆறுமுகத்தையும் செய்ய நிறத் தையுமுடைய முருகவேளின் அழகு விளங்குகின்ற கோயிலும்,

**வால்வளை மேனி வாலியோன் கோயிலும்**- வெள்ளிய சங்கு போலும் நிறத்தையுடைய பலதேவன் கோயிலும்- **நீல மேனி நெடியோன் கோயிலும்**- நீலமணி போலும் நிறத்தையுடைய நெடிய மால் கோயிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்-** முத்துமாலை யணிந்த வெண் கொற்றக் குடையையுடைய இந்திரன் கோயிலும் ஆகிய இவற்றில், **மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ-** மிக்க முதுமையை யுடைய இறைவனது வாய்மையிற்றப்பாத, **நான்மறை மரபின் தீமுறை ஒருபால்-** நாலாகிய வேதங்கள் சொல்லிய நெறியே ஒரு பக்கம் ஓமங்கள் நடக்க;

**நால்வகைத் தேவரும்-** நால்வகைப்பட்ட தேவரும், **மூவறு கணங்களும்-** பதினெண் வகைப்பட்ட கணங்களும் என, **பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து-**வேற்றுமை தெரிந்து வகுக்கப்பட்ட இனமாகிய தோற்றத்தை யுடைய, **வேறுவேறு கடவுளர் சாறு சிறந்து ஒருபால்-** வெவ்வேறு கடவுளரது விழா ஒரு பக்கம் சிறக்க,

## 4. திரிபுர மெரியத் தேவர் வேண்ட

***சிவன் திரிபுர தகனத்தின் போது, திரிபுராந்தகர் வடிவங் கொண்டு முப்புரங்களை எரித்து, அச்சாம்பலை உடலில் பூசி கொடுகட்டி மற்றும் நான் முகன் காண பாண்டரங்கம் ஆகிய கூத்துக்களை ஆடியது பற்றிக் குறிப்பிடும் பாடல்.***

திரிபுரம் எரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப
உமையவ ளொருதிற னாக வோங்கிய
இமையவன் ஆடிய கொடுகொட்டி ஆடலும்
தேர்முன் நின்ற திசைமுகன் காணப்
பாரதி யாடிய வியன் பாண் டரங்கமும்

*(புகார்க் காண்டம்-கடல் ஆடு காதை-6 : 40-45)*

**விளக்கம்:**

**திரிபுரம் எரியத் தேவர் வேண்ட-** தேவர் திரிபுரத்தை எரியச் செய்ய வேண்டுதலால், **எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப-** வடவைத் தீயைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையிலேயுடைய பெரிய அம்பு ஏவல் கேட்ட வளவிலே, **உமையவள் ஒருதிறன் ஆக-** உமையவள் ஒரு பக்கமாக, **ஓங்கிய இமையவன்-** தேவர் யாவரினும் உயர்ந்த இறைவன், **ஆடிய கொடு கொட்டி ஆடலும்-** வெற்றிக் களிப்பாற் கைகொட்டி நின்று ஆடிய கொடுகொட்டி யென்னும் ஆடலும், **தேர்முன் நின்ற திசைமுகன் காண-** தேரின் முன்னிடத்து நின்ற நான்முகன் காணும்படி, **பாரதி ஆடிய வியன் பாண்டரங்கமும் -** பாரதி வடிவாய இறைவன் வெண்ணீற்றை யணிந்து ஆடிய பெரிய பாண்டரங்கக் கூத்தும்;

தேவர்கள் தமக்கு இன்னல் செய்கின்ற அசுரருடைய முப்புரமும் எரியும்படி வேண்டினர். சிவபெருமான் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, வடவைத் தீயை நுனியிலுடைய பெரிய அம்பில் வைத்து ஏவி அசுரரை அழித்து முடித்தமையாலே அசுரர் வெந்து விழுந்தனர். இதனைக் கண்டு பைரவி ஆடியதனால் பாரதியரங்கம் என்னும் பெயர் பெற்ற சுடுகாட்டின் கண், தனது ஒரு கூற்றிலே நின்று உமையன்னை பாணி தூக்குச் சீர் என்னும் தாளங்களைச் செலுத்த, தேவர்கள் யாரினும் உயர்ந்த தேவனாகிய சிவன், வெற்றிக் களிப்பிலே ஆடியருளிய கொடுகொட்டி என்னும் ஆடல் ஆகும். திரிபுரம் தீமடுத்தெரியக் கண்டு இரங்காது கைகொட்டி நின்று ஆடிய கொடுமையுடைத்தாகலின் கொடுங்கொட்டி என்பது பெயராயிற்று.

## 5. பிறைமுடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய

***சிவன் முடியில் பிறையைச் சூடியவன் எனவும், சிவனைப் பெரியவன் எனவும் குறிப்பிடும் பாடல்.***

நெடும்பேர் அத்தம் நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்கால்
பிறைமுடிக்கண்ணிப் பெரியோன் ஏந்திய
அறைவாய்ச் சூலத்து அருநெறி கவர்க்கும்

*(மதுரைக் காண்டம்-காடுகாண் காதை-11 : 72)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கம்:**

**நெடும்பேர் அத்தம் நீந்திச் சென்று-** இந்த மிக நீண்ட சுர நெறியைக் கடந்து சென்று, **கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்கால்-** கொடும்பாளூரின் கண் நெடுங்குளக் கரைக்கு உள்ளாகப் புக்கால், **பிறைமுடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய-** முடியிடத்துப் பிறையாகிய கண்ணியைச் சூடிய பெரியோனாகிய சிவன் ஏந்திய, அறைவாய்ச் சூலத்து அருநெறி கவர்க்கும் - முக்கூறாக அறுக்கப்பெற்ற சூலம்போல மூன்று வழிகள் பிரியும்,

## 6. இளம்பிறை சூடிய இறையவன் வடிவின் ஓர்

***சிவன் தலையில் திங்களைச் சூடியவர் எனக் குறிப்பிடும் பாடல்.***

..... கிளர் ஒளிச் சென்னியின்
இளம்பிறை சூடிய இறையவன் வடிவின் ஓர்
விளங்கொளிப் பூத வியன்பெருங் கடவுளும்

*(மதுரைக் காண்டம்-அழற்படு காதை-22 : 86-88)*

**விளக்கம்:**

**கிளர் ஒளிச் சென்னியின், இளம்பிறை சூடிய இறைவன் வடிவின் ஓர், விளங்கு ஒளிப் பூத வியன் பெருங் கடவுளும்-** விளங்கும் ஒளியினை யுடைய தலை மீது குழவித் திங்களை அணிந்த சிவனின் வடிவு போலும் ஒளி மிளிரும் மிகப் பெரிய வணிகப் பூதமாகிய கடவுளும்,

## 7. ஆலமர் செல்வன் பெயர் கொண்டு வளர்ந்தோன்

***சிவனை ஆல் அமர் செல்வன் எனக் கூறும் பாடல்.***

சீர்த்தகு சிறப்பின் வார்த்திகன் புதல்வன்
ஆலமர் செல்வன் பெயர்கொண்டு வளர்ந்தோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்நாறு செவ்வாய்ப் படியோர் முன்னர்த்

*(மதுரைக் காண்டம்-கட்டுரைக் காதை-23: 90-92)*

**விளக்கம்:**

**சீர்த்தகு சிறப்பின் வார்த்திகன் புதல்வன்-** பெருமையமைந்த சிறப்பினையுடைய வார்த்திகன் என்பான் புதல்வனாகிய, **ஆல் அமர் செல்வன் பெயர் கொண்டு வளர்ந்தோன்-** தக்கணாமூர்த்தி (சிவன்) என்னும் பெயர் பெற்று வளர்ந்தவன், **பால்நாறு செவ்வாய்ப் படியோர் முன்னர்-** பால் தோன்றும் சிவந்த வாயினையுடைய தன்னையொத்த இளையோர் முன்பு,

## 8. ஆல் அமர் செல்வன் புதல்வன் வரும்

***சிவனை ஆல் அமர் செல்வன் எனக்கூறும் இன்னுமோர் பாடல்.***

வேலனார் வந்து வெறியாடும் வெங் களத்து,
நீலப் பறவைமேல் நேர்-இழை-தன்னோடும்
ஆல் அமர் செல்வன் புதல்வன் வரும்: வந்தால்,
மால் வரை வெற்பன் மண அணி வேண்டுதுமே.

*(வஞ்சிக்காண்டம், குன்றக்குரவை-24: 9: 15 )*

**விளக்கம்:**

வேலன் வந்து வெம்மையான களத்திலே வெறி ஆடல் ஆடுவார். அவ்வேளையில் சிறந்த கலங்களை அணிந்த நம் வள்ளியோடும், ஆலமர் செல்வன் சிவபெருமானின் மகன் முருகனும் வருவார் என்பர். அவன் வந்தால் பெருமலைக்கு உரிய வெற்பனுடன் எமக்கு திருமணம் நடத்தி வைக்க வேண்டும் என்று நாம் அவனை வேண்டிக் கொள் வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. கயிலை நன் மலையிறை மகனை

***கயிலை என்னும் அழகிய மலையில் எழுந்தருளியிருக்கும் இறைவனான சிவன் எனக் குறிப்பிடும் பாடல்.***

கயிலை நன் மலையிறை மகனை! நின் மதிநுதல்
மயிலியல் மடவரல் மலையர் தம் மகளார்,
செயலைய மலர்புரை திருவடி தொழுதேம்
அயல்மணம் ஒழியருள், அவர் மணம் எனவே,

*(வஞ்சிக்காண்டம், குன்றக்குரவை-24: 9: 16 )*

**விளக்கம் :**

கயிலாயம் என்னும் அழகிய மலையின் கண் எழுந்தருளியிருக்கின்ற இறைவனான சிவன் மகனாகிய முருகப் பெருமானே உனக்குரிய மயிலின் சாயலும்,மடப்பமும் பொருந்திய எம் மலையவர் மகளான வள்ளியம்மையின், அசோகந்தளிர் போன்ற திருவடிகளைத் தொழுதோம்.

## 10. நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி

***சிவன் ஒளிபொருந்திய திங்களைச் சூடியவன், நீண்ட பெரிய சடை முடியினை உடையவன், உலகினை அகப்படுத்தும் வடிவத்தினை உடையவன் எனவும், மன்னன் வஞ்சி நகரில் இருந்த சிவன் கோயிலுக்கு சென்றமை பற்றியும் குறிப்பிடும் பாடல்.***

நிலவுக் கதிர் முடித்த நீள் இருஞ் சென்னி,
உலகு பொதி உருவத்து, உயர்ந்தோன் சேவடி

மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து,
இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி, வலம் கொண்டு,
மறையோர் ஏந்திய ஆவுதி நறும்புகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நறைகெழு மாலையின் நல் அகம் வருத்தக்,
கடக்களி யானைப் பிடர்த்தலை ஏறினன்,

*(வஞ்சிக் காண்டம்-கால்கோள்காதை-26 : 54-60)*

**விளக்கம் :**

**நிலவுக் கதிர்முடித்த நீள் இருஞ் சென்னி உலகு பொதி உருவத்து உயர்ந்தோன் சேவடி-** ஒளி பொருந்திய திங்களைச் சூடிய நீண்ட பெரிய சடை முடியினையும் உலகினையகப் படுத்தும் வடிவத்தினையு முடைய சிவபெருமான் திருவடிகளை, **மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து-** வெற்றி பொருந்திய வஞ்சி மாலையுடன் அணிந்து, **இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொண்டு-** எவர்க்கும் வணங்காத தலையால் வணங்கி வலம்வந்து, **மறையோர் ஏந்திய ஆவுதி நறும்புகை நறைகெழு மாலையின் நல்லகம் வருத்தக்-** அந்தணர் ஏந்திவந்த ஆகுதியின் நறிய புகை தேன் மிகுந்த மலர் மாலையின் நல்லவிடத்தை வருத்த, **கடக்களி யானைப் பிடர்த்தலை ஏறினன்-** மதக்களிப்பினையுடைய யானையின் பிடரின்கண் ஏறினன்;

சேரன் செங்குட்டுவன் வடநாட்டுப் படையெடுப்பை மேற்கொண்டு புறப்படுகிறான். எல்லாப் பணிகளையும் முடித்தபிறகு வஞ்சி மாநகரில் எழுந்தருளியுள்ள சிவன் கோயிலுக்குச் சென்று யாருக்கும் வணங்காத தன் முடியைத் தாழ்த்தி வணங்கிவிட்டு யானைமேல் ஏறுகிறான்.

மாமன்னர் சேரன் செங்குட்டுவர் சிவனருளால் பிறந்தவர் என்றும், சிறந்த சிவபக்தரான செங்குட்டுவர் கனக விஜயரை வெல்ல வடநாடு மீது படையெடுத்துச் செல்வதற்கு முன் சிவனை வணங்கி அவர்தம் திருவடியைத் தன் சிரசில் வைத்தார் என்றும் இளங்கோவடிகள் இப்பாடல் மூலம் கூறுகிறார்.

## 11. தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்

***சிவபெருமானுடைய திருவடிகளின் அடையாளமான வில்வத்தைத் தன் உச்சந் தலையில் தரித்திருப்பதால், திருமால் பிரசாத***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***த்தை வாங்கித் தன் தோளில் தரித்துக் கொண்டான் மன்னன் எனக் கூறும் பாடல்.***

குடக்கோக் குட்டுவன் கொற்றங்கொள் கென
ஆடக மாடத் தறிதுயில் அமர்ந்தோன்
சேடம் கொண்டு சிலர்நின்று ஏத்தத்
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்

ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்
தாங்கின னாகித் தகைமையின் செல்வுழி

*(வஞ்சிக் காண்டம்-கால்கோள்காதை- 26 : 61-67)*

**விளக்கம் :**

**குடக்கோக் குட்டுவன் கொற்றம் கொள்க என-** குடதிசைக் கோவாகிய செங்குட்டுவன் வென்றி பெறுக என்று, **ஆடகமாடத்து அறிதுயில் அமர்ந்தோன் சேடம் கொண்டு சிலர் நின்று ஏத்த-** திருவனந்தபுரத்தில் யோகநித்திரையி லமர்ந்த நெடுமாலின் சேடத்தைக் கொணர்ந்து நின்று சிலர் துதிக்க, **தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள் வண்ணச் சேவடி மணி முடி வைத்தலின்-** கங்கையைப் பொதிந்துள்ள சிவந்த சடையினையுடைய சிவபெருமானது அழகிய திருவடிகளைத் தன் மணி முடியின் மீது னவத்திருந்தமையான், **ஆங்கது வாங்கி அணி மணிப் புயத்துத் தாங்கினனாகித் தகைமையில் செல்வுழி-** திருமாலின் திருச்சேடத்தை வாங்கி அழகிய மணித்தோளின் மீது தாங்கினவனாய்ப் பெருந்தகுதியுடன் செல்லுமிடத்து;

அந்த நிலையில் ஆடகமாடத்து அறிதுயில் அமர்ந்த திருமாலை வழிபடவேண்டும் என்று அவன் நினைக்கவில்லை. யானைமேல் ஏறிவிட்ட பிறகு திருமால் கோயில் பிரசாதத்தைச் சிலர் ஏந்தி வருகின்றனர். அதைப் பெற்றுக் கொண்ட அவன் சிவபெருமானுடைய திருவடிகளின் அடையாளமான வில்வத்தைத் தன் உச்சந்தலையில் தரித்திருப்பதால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமால் பிரசாதத்தை வாங்கித் தன் தோளில் தரித்துக் கொண்டான் என இப்பாடல் கூறுகிறது.

## 12. செஞ்சடை வானவன் அருளினில் விளங்க

***சிவந்த சடையினை உடைய சிவபெருமான் திருவருளினாலே வஞ்சிப்பதி விளங்குமாறு உதித்த சேரன் எனக் கூறும் பாடல்***

செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ! கேளாய்;
மலயத்து ஏகுதும்; வான் பேர் இமய

நிலயத்து ஏகுதல் நின் கருத்துஆகலின்,
அருமறை யந்தணர் ஆங்குளர் வாழ்வோர்
பெருநில மன்ன பேணல்நின் கடனென்று
ஆங்கவர் வாழ்த்திப் போந்ததற் பின்னர்,

*(வஞ்சிக் காண்டம்-கால்கோள்காதை-26 : 98-104)*

**விளக்கம்:**

**செஞ்சடை வானவன் அருளினில் விளங்க வஞ்சித் தோன்றிய வானவ கேளாய் -**சிவந்த சடையினையுடைய சிவபெருமான் திருவருளினாலே வஞ்சிப்பதி விளங்குமாறு உதித்த சேரனே கேட்பாயாக, **மலயத்து ஏகுதும்** - யாங்கள் பொதியின் மலைக்குச் செல்கின்றோம், **வான்பேர் இமய- நிலயத்து ஏகுதல் நின் கருத்து ஆகலின்** - நீ மிகப் பெரிதாகிய இமயத்தின்பாற் செல்ல எண்ணினை ஆதலால், **அருமறை அந்தணர் ஆங்குளர் வாழ்வோர்** - அங்கே அரிய மறைகளை யுணர்ந்த அந்தணர் வாழ்வாருளர், **பெருநில மன்ன பேணல் நின்கடன் என்று** - பெரிய நிலவுலகினையாளும் அரசே அன்னோரை நலியாது காத்தல் நினது கடமையாகும் என்று கூறி, **ஆங்கவர் வாழ்த்திப் போந்ததற் பின்னர் -** அம் முனிவர்கள் வாழ்த்திச் சென்ற பின்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. உமையவள் ஒரு திறன் ஆக

***சிவன் உமாதேவியைத் தன் இடப்பக்கத்தில் வைத்திருப்பவன் எனவும், ஓங்கிய இமயமலையில் இருப்பவன் எனவும் கூறும் பாடல்.***

உமையவள் ஒரு திறன் ஆக, ஓங்கிய
இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்
பாத்தரு நால் வகை மறையோர் பறையூர்க்
கூத்தச் சாக்கையன் ஆடலின் மகிழ்ந்து,

*(வஞ்சிக் காண்டம்-நடுகற்காதை-28 : 74-77)*

**விளக்கம்:**

உமாதேவி தன் இடப்பக்கத்தினனாக ஓங்கிய இமையவனாகிய சிவன் ஆடிய கொடுகொட்டி எனும் ஆட்டத்தினை பகுத்துணர்வதற்குரிய நால்வேறு வகையான மறையவர்கள் வாழும் ஊரிலிருந்து வந்த, கூத்தச் சாக்கையர் செக்கூட்டுவன் முன் ஆடினர்.

## 14. உமை ஒரு பாகத்து ஒருவனை வணங்கி

***இமயமலையில் உள்ள குயிலாலுவம் என்னும் இடத்தில், உமா தேவியை தன் உடம்பின் ஒரு பகுதியாக வைத்துக் கொண்டு நடனம் ஆடும் சிவபெருமானை வணங்குதல் பற்றிக் கூறும் பாடல்.***

இமையச் சிமயத்து, இருங் குயிலாலுவத்து,
உமை ஒரு பாகத்து ஒருவனை வணங்கி,
அமர்க்களம் அரசனது ஆக, துறந்து,
தவப் பெரும் கோலம் கொண்டோர்-தம்மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(வஞ்சிக் காண்டம்-நடுகற்காதை-28 : 102-105)*

**விளக்கம்:**

இமயமலையில் குயிலாலுவம் என்னும் அரங்கில் உமையவளைத் தன் உடம்பின் ஒரு பகுதியாக வைத்துக்கொண்டு நடனம் ஆடும் சிவ பெருமானை வணங்கி வென்ற போர்க்களத்தில் வென்றபோது, தவக்கோலம் பூண்டு தப்பிப் பிழைத்தவர்களின் மீது வேந்தன் சினம் கொள்வது புதுமையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிமேகலை

## பாடியவர் : சீத்தலைச் சாத்தனார் (பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டு)

தமிழில் உள்ள ஐம்பெருங்காப்பியங்களுள் மணிமேகலை இரண்டாவதாக இடம் பெறுகிறது. சிலப்பதிகாரத் தலைவன் கோவலனுக்கு மாதவியிடத்துப் பிறந்தவளான மணிமேகலையைக் காவியத் தலைவியாகக் கொண்டமையால், அவள் பெயராலேயே இந்நூலும் மணிமேகலை என அறியப்படுகிறது. மணிமேகலை துறவு என்பது ஆசிரியர் இட்ட பெயர் என்று கூறுவர். இது சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகக் கருதப்படுகிறது. சிலப்பதிகாரத்தின் பாத்திரங்கள் பல இதிலும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. ஒரே குடும்பத்தின் கதையென்பதால், சிலப்பதிகார சாரத்தையும், இதனையும் இணைத்து இரட்டைக் காப்பியங்கள் எனக் கூறுவர். எனவே மணிமேகலையின் காலமும் பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டு எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நூலை எழுதியவர் வளம்கெழு கூலவாணிகன் சாத்தன், மதுரைக் கூல வாணிகன் சாத்தன், சீத்தலைச் சாத்தன் என்று பலவாறு அழைக்கப்படும் சீத்தலை சாத்தனார் ஆவார். அகநானூறு, நற்றிணை, புறநானூறு ஆகிய நூல்களில் சில செய்யுள்களை இயற்றியவரும் கூல வாணிகன் சாத்தன் எனப்படுகிறார். ஆயினும் இவர் மணிமேகலை ஆசிரியரிலிருந்து வேறானவர் என்பர். இவர் இளங்கோவடிகளின் நண்பர் என்றும், அவர் படைத்த சிலம்பை முதலில் கேட்டவர் இவரே என்றும் கூறுவர். அவ்வாறே, இவருடைய இக்காவியத்தை இளங்கோவடிகள் கேட்டார் என்பர்.

மணிமேகலை மொத்தமாக முப்பது காதைகளைக் கொண்டது. இது சிலப்பதிகாரம் போல் பல செய்யுள் வகைகளைக் கொண்டதன்று. இது முழுவதும் அகவற்பாவாலான காவியமாகும். இதற்கும் சிலப்பதிகாரத்திற்கு உள்ளவாறே ஒரு பதிகம் அமைந்துள்ளது. இது கதை நிகழ்வுகளைத் தொகுத்துக் கூறுகிறது. மணிமேகலை துறவு என்ற பெயர் இதில் தான் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலை புத்த சமயக் கருத்துக்களை வலியுறுத்துவதற்கும், விரித்துரைப்பதற்கும் எழுந்த நூலாகும். இருப்பினும் புத்த சமயக் கருத் துக்களை மட்டுமல்லாது அந்தக் காலத்தில் வழக்கிலிருந்த ஏனைய சமயங்கள் பற்றியும் மணிமேகலையில் கூறப்பட்டுள்ளது.

மணிமேகலையில் இருபதேழாவது காதையாக அமைந்துள்ள "சமயக் கணக்கர் தம் திறங்கேட்ட காதை" யில் இவ்வாறு பல்வேறு சமயங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் எடுத்துரைக்கப் பட்ட அளவை வாதி, சைவ வாதி, பிரம வாதி, வைணவ வாதி, வேத வாதி, ஆசிவக வாதி, நிகண்ட வாதி, சாங்கிய வாதி, வைசேடிக வாதி, பூத வாதி ஆகியோரின் கருத்துக்கள் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனாரின் காலத்திலிருந்த சமயக் கருத்துக்களை ஓரளவு அறிந்து கொள்ளக் கூடியனவாக உள்ளன.

'முப்பொருளின் ஈரியல்பும் முறை திறம்பா வகை' கூறுவதே சைவ சித்தாந்தம் என்பர் பெரியோர். மணிமேகலையில் முப்பொருள் களுள் ஒன்றான இறைவனைப் பற்றி மட்டுமே கூறப்பட்டுள்ளது.

## மணிமேகலையில் சிவன்

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு காவியங்களிலும் பத்துப்பாட்டுள் ஒன்றான மதுரைக் காஞ்சியிலும் தெய்வங்கள் வரிசை யில் சிவபெருமான் முதலிடம் பெற்றுள்ளார்.

மணிமேகலையில் சிவபெருமான், முருகன், திருமால், குமரி, கொற்றவை, இந்திரன் முதலிய தொன்மையான தெய்வ வழிபாடுகளும், மணிமேகலா தெய்வம், சதுக்கப் பூதம், சம்பாபதி, சிந்தாதேவி, தீவ திலகை, கந்திற்பாவை முதலிய பிற தெய்வ வழிபாடுகளும் இடம் பெற்றுள்ளன. தமிழகத்தில் காணப்பட்ட பண்டைய தெய்வ வழி பாடுகளில் சிவ வழிபாடு முதன்மையும், சிறப்பும் வாய்ந்தது என்பதை மணிமேகலை வலியுறுத்துகின்றது. தெய்வ வழிபாடுகளைக் கூறுகின்ற பகுதியில் முதலில் கூறப்பெறுவது சிவ வழிபாடே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்

**பூம்புகார் நகரின் முதன்மை தெய்வம் நெற்றிக் கண்ணால் பார்க்கும் தலைவனான சிவன் என்பதைக் குறிக்கும் பாடல்.**

நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக

*(விழாவறை காதை- 1 : 54-55)*

**விளக்கம்:**

நெற்றிக்கண்ணால் பார்த்தலையுடைய தலைவனான சிவபெருமான் முதலாக, இன்னகருக்குள்ளே வாழும் சதுக்கத் தெய்வமான சதுக்க பூதம் ஈறாக,

## 2. ஆலமர் செல்வன் மகன்

**சிவனை ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருக்கும் செல்வன் எனக் கூறும் பாடல்**

ஆலமர் செல்வன் மகன் விழாக் கால்கோள்
காண்மினோ வெனக் கண்டு நிற்குனரும்,

*(மலர்வனம் புக்க காதை- 3 : 144-145)*

ஆலமர் செல்வனாகிய சிவபெருமானின் மகனான குமரப்பெருமான் கால்நடை கொள்ளுகிற இவ்விழாவினைக் காண்மின்களோ,

முருகனைப் பற்றி மணிமேகலை குறிப்பிடும் பொழுது, “ஆலமர் செல்வன் மகன்” என்று குறிப்பிடுகின்றமை நோக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. இறைவன் ஈசன் என நின்ற சைவ வாதி

***சிவன் ஒருவனே உலகுக்கு இறைவன் எனவும், சிவபெருமானே அட்டமூர்த்தியாக விளங்குகிறார் எனவும், சிவனையே முதலாக கொண்டது உலகம் எனவும், எல்லா உயிர்களுக்கும் சிவனே சார்பாக உள்ளவர் எனவும் கூறும் பாடல்.***

........... இறைவன் ஈசன் என
நின்ற சைவவாதி நேர்படுதலும்
பரசும்நின் தெய்வம் எப்படித்து என்ன
இருசுடரோடு இயமானன் ஐம்பூதம் என்று
எட்டு வகையும் உயிரும் யாக்கையுமாய்க்
கட்டிநிற் போனும் கலையுருவி னோனும்
படைத்துவிளை யாடும் பண்பி னோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னில்வேறு தானொன் றிலோனும்
அன்னோன் இறைவன் ஆகும் என்று உரைத்தனன்,

*(சமயக் கணக்கர் தம் திறங்கெட்ட காதை- 27: 86-95)*

**விளக்கம்:**

"உலகுக்கு இறைவனானவன் ஈசன் ஒருவனே" என உறுதியாகத் தன்னுள்ளத்தே கொண்டிருப்போனான சைவவாதி தனக்கு எதிர்ப் தலும், "நீ போற்றும் நின்னுடைய தெய்வம் எப்படிப்பட்டதோ" என்று மணிமேகலை அவனிடத்திலே கேட்டனள். கேட்டாலும் அவன் அவளு க்குச் சொல்வானானான்:

"இரு சுடர்களாகிய ஞாயிறும், திங்களும், இயமானனும் மண், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பூதங்களும் ஆகிய எட்டு வகைகளினும் உயிரும் உடம்புமாகப் பிணிப்புண்டு நிற்கின்றவனும், பல்வேறு கலை ஞானங்களே தன் உருவாக அமைந்தோனும், யாவற்றையும் படைத்துத் திருவிளையாடல்கள் புரியும் பண்பினை உடையவனும், அங்ஙனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தனவற்றை அழித்து, அவற்றின் பிறவித் துயரினைத் தீர்த்தருளு கின்ற சிறப்பினை உடையவனும், தன்னிலும் வேறாகத் தனக்கு ஒப்ப தும் மிக்கதுமாகிய தெய்வமாக வேறெதுவும் இல்லாதோனும் ஆகிய தன்மைகளை உடையோனே, எம் இறைவனாகிய சிவன் ஆவான் என்றனன் அவன்,

இறைவன் எட்டு வடிவங்களை உடையவன். சூரியனும் நிலவும் ஐந்து பூதங்களும் உயிரும் சிவனுடைய வடிவங்கள். பலவகை அறிவு அவ னுடைய உடலாக அமைந்துள்ளது. உலகத்தைப் படைப்பதும், அழிப் பதும் அவனுக்கு விளையாட்டு. பிறப்பு இறப்புகளினால் உயிர்கள் அடையும் இளைப்பை அவன் மாற்றுகின்றான். அவனினும் உயர்ந்த வர் யாரும் இல்லை. அவன் பெயர் ஈசன் என்பதாகும்.

மணிமேகலையின் இப்பகுதி, சைவசமயம் விரிவாகப் பரவியிருந் ததையும் அதன் கொள்கைகள் வரையறுக்கப்பட்டிருந்ததையும் குறிப் பிடுகிறது. மணிமேகலையில் காணப்படும் சைவவாதி தன் சமயக் கொள்கைகளைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறான். அவன் கூற்றின் மூலமாகச் சிவ வழிபாட்டுத் தத்துவங்கள் வெளிப்படுகின்றன. மணி மேகலை சைவவாதியைக் குறிப்பிடுகின்ற பொழுது, "இறைவன், ஈசன் என நின்ற சைவவாதி" எனக் குறிப்பிடுகின்றது.

அச்சைவவாதியின் கூற்றில் வரும் சிவச் செய்திகள் பின்வருமாறு : சிவபெருமான் அட்டமூர்த்தியாக விளங்குகிறான். சிவனையே முதலாக கொண்டது உலகம். எல்லா உயிர்களுக்கும் இறைவன் சார்பாக உள்ள வன். இவ்வாறு சிவபெருமானைப் பற்றிய செய்திகள் இடம் பெறுவ தோடு பித்தன் ஒருவன் கொண்ட வேடம் சிவ வேடமாகக் காட்சி யளிக்கிறது என்று மணிமேகலை குறிப்பிட்டு மேனி முழுவதும் திருநீறு பூசினால் அது சிவ வேடமாகும் என்று கூறுகிறது. மணிமேகலை பொ.ஆ. 150 ல் தமிழகத்தின் பெரும் சமயமாக சைவத்தை முதலில் உரைக்கிறது. இந்த பேரண்டம் ஐம்பூதங்களின் ஆக்கம். அதுவே ஈசன் (சிவன்) என்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தொள்ளாயிரம்

**பாடியவர் : பெயர் அறியப்படவில்லை**

**(பொ.ஆ. 5 ஆம் நூற்றாண்டு)**

முத்தொள்ளாயிரம் சேர, சோழ, பாண்டியர்களின் புகழ் பாடும் நூலாக இருந்தாலும், எந்தக் குறிப்பிட்ட மன்னனையும் இந்நூல் பாட வில்லை. மூன்று குடியினருக்கும் உரிய கோதை, கிள்ளி, மாறன் முதலான பொதுவான பெயர்களே இதில் இடம் பெற்றுள்ளன. இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. புறத்திரட்டு என்னும் தொகுதியில் இருந்து எடுக்கப்பட்ட 108 பாடல்களே இன்று முத்தொள்ளாயிரம் என்ற பெயரில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இந்நூல் அகமும் புறமும் பற்றிய பாடல்களைக் கொண்டதாகும். மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களைப் பற்றிய தொள்ளா யிரம் பாடல்கள் வீதம் மூன்று தொள்ளாயிரம் பாடல்கள் இயற்றப் பட்டன. அதனால் இது முத்தொள்ளாயிரம் எனப் பெயர் பெற்றது. இவற்றில் தற்சமயம் கிடைக்கப்பெற்றவை 109 பாடல்கள் மட்டுமே. அவை கடவுள் வாழ்த்து- 1, சேரனை குறிக்கும் பாடல்கள்- 22, சோழனைக் குறிக்கும் பாடல்கள்- 29, பாண்டியனைக் குறிக்கும் பாடல்கள்- 57 ஆகும்.

இந்நூலின் பெயர் இருவகைகளில் விளக்கப்படுகிறது. மூன்று வேந்தர்களையும் பற்றிய 900 பாடல்கள் கொண்டது என்பது ஒரு கருத்து. மூவேந்தருள் ஒவ்வொருவரையும் தனித்தனியே தொள்ளாயிரம் பாடல்களில் புகழும் நூல் என்பது இன்னொரு கருத்து. இவ்விரண் டாவது கருத்தின் படி இந்நூலுக்குரிய செய்யுள்கள் 2700 ஆக இருக்க வேண்டும். இவற்றுள் முதற் கருத்தே ஏற்புடையது என இலக்கண ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர், பதினெண்கீழ்க்கணக்கு நூலாசிரியர்களோடு முத்தொள்ளாயிரத்தின் ஆசிரியரையும் சேர்த்துப் பிற சான்றோர் எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டார். எனவே இவர் சங்கப் புலவர் அல்லர் என்பது வெளிப் படையாகும். ஆராய்ச்சி அறிஞர் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் இந்நூலின் உள்ள சில அகச் சான்றுகளை எடுத்துக்காட்டி, இந்நூலா சிரியரை பொ.ஆ. 5ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலத்தவர் எனக் கூறுகின்றனர்.

## முத்தொள்ளாயிரத்தில் சிவன்

இந்நூலின் கடவுள் வாழ்த்து சிவபெருமான் பற்றியது. சிவபெரு மான் விண் மீன்களையும், திங்களையும், சூரியனையும் படைத்தவன் என்றும், ஆனால் உலகம் அவனை ஆதிரையான் என்பது வியப் பானது என்றும் கூறுகின்றார் ஆசிரியர். மேலும், தாம் பாண்டியனைப் புகழ்ந்து பாடும் பாட்டு, மயிலை ஊர்தியாகக் கொண்ட முருகப் பெரு மானைக் கடம்ப மலர் தூவிப் பாடிப் புகழ்தலை ஒத்தது என்கிறார். இதனால் இவர் சைவ சமயச் சார்புடையவர் என்பது விளங்கும்.

## 1. முன்னம் படைத்த முதல்வனைப் பின்னரும்

***விண்மீன் தொகுதிகள், மதியம், கதிரவன் இவற்றையெல்லாம் முதன்முதலில் படைத்த முதல்வன் சிவனே எனக் கூறும் பாடல்.***

மன்னிய நாண்மீன் மதிகனலி என்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்-பின்னரும்
ஆதிரையான் ஆதிரையான் என்றென்(று) அயருமால்
ஊர்திரைநீர் வேலி உலகு

*(கடவுள் வாழ்த்து-99)*

**விளக்கம்:**

என்றும் நிலை பெற்றிருக்கும் நாளுக்குத் தமிழர் பெயர் சூட்டியுள்ள விண்மீன் தொகுதிகள், மதியம், கனலும் கதிரவன் என்று இவற்றை யெல்லாம் முதன்முதலில் படைத்த முதல்வனைப் (சிவனை) பின்னரும் ஆதிரையான் (திருவாதிரை நாளுக்கு உரிய சிவன்), ஆதிரையான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ திரையான் ஆகி, வளரும் கடலின் அலைத்திரையில் பள்ளி கொண்டிருக்கும் திருமால்) என்று கடலை வேலியாக உடைய உலகில் வாழும் மக்கள் கொண்டாடுகின்றனர்.

ஐங்குறுநூறும், முத்தொள்ளாயிரமும் சிவபெருமானையே கடவுள் வாழ் த்துப் பொருண்மையாகக் கொண்டுள்ளன. இரு நூல்களும் "மூல முதல்வன் சிவபெருமான்" எனும் கருத்தினை முன்னம் படைத்த முதல்வன் என முத்தொள்ளாயிரமும், மூவகையுலகு முகிழ்த்தன என ஐங்குறுநூறும் வலியுறுத்தியிருப்பதனைக் காணலாம்.

அதாவது வகை, தொகைப்படுத்தப் பெற்ற பின்னர் கடவுள் வாழ்த்து ஒரு சேர இயற்றப் பெற்றுள்ளது. சங்க இலக்கியங்க ளுக்குக் கடவுள் வாழ்த்து இயற்றப் பெற்றது போல் முத்தொள்ளாயிரத் திற்கும் கடவுள் வாழ்த்து பிற்காலத்தில் இயற்றப்பட்டதா அல்லது படைப்பின் பொழுதே இயற்றப்பட்டதா என்பதை அறிய முடியவில்லை.

## 2. செங்கண் நெடியான் மேல்

***சிவனை காளைமாட்டு ஊர்திக்கடவுள் என வர்ணிக்கும் பாடல்.***

செங்கண் நெடியான்மேல் தேர்விசையன் ஏற்றியபூப்
பைங்கண்வெள் ஏற்றான்பால் கண்டற்றால்- எங்கும்
முடிமன்னர் சூடியபூ மொய்ம்மலர்த்தார் மாறன்
அடிமிசையே காணப் படும்.

*(77 வது பாடல்)*

**விளக்கம்:**

அருச்சுணன் திருமாலுக்குச் சாத்திய பூ அத்தனையும் காளை மாட்டு ஊர்திக் கடவுளிடம் (சிவன் திருவடிகளில்) கிடப்பதைக் கண்டனர். அப்படித்தான் மன்னர் முடியில் சூடிய பூக்கள் எல்லாம் மாறன் காலடியில் கிடந்தன. மாறனைத் தொழும்போது உதிர்ந்த பூக்கள் அவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகடூர் யாத்திரை

**பாடியவர் : அரிசில் கிழார், பொன்முடியார்**

**(பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டு)**

தகடூர் யாத்திரை என்பது சேரமன்னன் ஒருவனுக்கும், தகடூரை ஆண்ட அதியமான் மரபைச் சேர்ந்த குறுநில மன்னன் ஒருவனுக்கும் நிகழ்ந்த போர் பற்றிக் கூறும் ஒரு சங்கம் மருவிய கால நூல் ஆகும். இது புறப்பொருள் சார்ந்தது. இது ஒன்றுக்கு மேற்பட்ட புலவர்களின் பாடல்களைக் கொண்ட தொகுப்பு நூலாக இருக்கலாம் எனக் கருதப் படுகின்றது. அரிசில் கிழார், பொன்முடியார் ஆகிய சங்கப் புலவர்கள் சேர மன்னனைச் சார்ந்து நின்றவர்கள். அரிசில் கிழார் சங்க காலத் துப் புலவர்களில் ஒருவர்.

புறநானூற்றில் ஏழு பாடல்களும், குறுந்தொகையில் ஒரு பாட லும், பதிற்றுப்பத்தில் 10 பாடல்களும் அரிசில் கிழார் பாடியவை ஆகும். அதியமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினி, மனைவி கண் ணகியைத் துறந்து வாழ்ந்த வையாவிக் கோப்பெரும் பேகன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை ஆகிய அரசர்கள் இப்புலவரால் பாடப்பட்டுள்ளனர்.

பொன்முடியார் சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் பெண்புலவர். மறக்குடியில் பிறந்தவராக குறிப்புகள் கிடைகின்றன.இவர் சேரநாட்டின் ஒரு பகுதியான குட்டநாட்டின் வடக்குபக்கத்தில் பொன்முடி நல்லூர் என்னும் ஊரில் பிறந்தவர் ஆவார். இவரின் பெருமையை பாராட்டி அரசர் எவரேனும் பொன்முடி பரிசளித்து இருக்கலாம் என்கிறார் உ.வே.சாமினாதய்யர். இவரது பெயரால் மூன்று புறநானூறு பாடல்கள் உள்ளன.

இதன்படி தகடூர் யாத்திரை பாடிய புலவர்கள் பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிகிறது. எனவே தகடூர் யாத் திரை நூல் எழுந்த காலமும் பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டு எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரன் படையெடுத்துச் சென்ற போது அவனுடன் சென்று நேரடியாக நிகழ்வுகளைக் கண்டு கூறுவது போலவே பாடல்கள் அமைந்திருப்பதாகவே தெரிகிறது. இந்நூல் தற்காலத்தில் முழுமையாகக் கிடைக்கப்பெறவில்லை. பல்வேறு மூலங்களில் இருந்தும் இதுவரை 48 பாடல்கள் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது. பல நூல்களிலிருந்தும் எடுத்துத் தொகுத்த பாடல்களைக் கொண்ட நூலாகிய "புறத்திரட்டு" என்னும் தொகுப்பில் இருந்து தகடூர் யாத்திரைப் பாடல்கள் சில கிடைத்தன. இது தவிர "நீதித் திரட்டு என்னும் இன்னொரு நூலிலிருந்தும் சில பாடல்களைப் பெற முடிந்தது. சேரமான், அதியமான் போர் குறித்த வாய் வழிக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு பிற் காலத்தில் தகடூர் யாத்திரை எழுதப்பட்டிருக்கலாம் என்றும் சிலர் கூறுவர்.

## தகடூர் யாத்திரையில் சிவன் பற்றிய பாடல்.

### 1. மழுவான் மிளையோய் மதிலான்

***மழுவை ஏந்துகின்றவனான சிவன் பற்றிக் கூறும் பாடல்.***

மழுவான் மிளையோய் மதிலான் அகழ்ந்தூர்ந்(து)
எழுவாள் ஆன் ஏற்று உண்ட(து) எல்லாம்-
இழும்என மட்(டு)அவிழ் கண்ணி மறவேந்தன்
சீற்றத்தீ விட்டெரிய விட்ட மிகை

*(வெண்பா-54)*

இப்பாடல் பற்றிய விளக்க உரை கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய மாலை

***பாடியவர் : பெயர் தெரியவில்லை***

***(பொ.ஆ. 4 ஆம் நூற்றாண்டு)***

காலத்தால் மறைந்து போன பல பழம் தமிழ் நூல்களில் ஒன்றே ஆசிரிய மாலையாகும். இதன் பாடல்கள் சில மட்டுமே கிடைத்துள் ளன. இது நீதித்திரட்டு எனும் தொகை நூலில் காணப்பட்டது. அத் திரட்டில் அறம், பொருள் எனும் பல்வேறு அதிகாரத் தலைப்புகளின் கீழ், பல நூல்களிலிருந்தும் தொகுத்த 1474 பாடல்கள் உள்ளன. அப்பாடல்களிடையே காணப்படும் ஆசிரிய மாலைப் பாக்கள் திரட் டாக வகுக்கப்பட்டு, அதனுடன் உரை ஆசிரியர் சிலர் காட்டும் மேற் கோள் பாடல்களையும் சேர்த்து ஓர் குறுநூலாக உருவாக்கம் பெற்று ள்ளது. இந்நூல் பொ.ஆ. 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

இது நச்சினார்க்கினியரின் உரைகளின் மூலம் அறியப்படும் நூல் களில் ஒன்றாகும். பெருந்தொகை எனும் ஓர் தொகுப்பிலும் 'மறைந்து போன தமிழ் நூல்கள்' எனும் பெயரில் மயிலை சீனி வேங்கடசாமியார் எழுதிய பாடல்களும் இதில் உள்ளவையே. இந்நூலின் பெயர் மூலம் இது ஓர் வகைப் பா யாப்பினால் எழுதப்பட்டமை தெரிகிறது. மாலை எனும் பாவினப் பெயர் பல்வகைப் பொருள் பொதிந்து வரும் பாக்க ளால் ஆவதால் இது அகம், புறம் என இருவகைத் திணையின் பாக்களால் எழுதப்பெற்ற ஓர் நூல் போலத் தெரிகிறது. இந்நூலின் ஆசிரியர் யார் எனத் தெரியவில்லை.

நூலின் கடவுள் வாழ்த்தில் சிலப்பதிகாரம் போன்று ஆளியின் மீதமர்ந்த சிவனும், பெண்பாலாக தோற்றும் வடிவுடைத் தெய்வம் துர்க் கையும் போற்றப் பட்டுள்ளது. இந்நூலில் அரசகுலம் மற்றும் அரசு சார்ந்தோருக்கே சிறப்பாக பாடப்பட்டுள்ளது. மேலும் இந்நூலில் இரா மாயணத் தொடர்புடைய சில காட்சிகள் பாடப்பட்டுள்ளதாலும், பாடல் களின் தொன்மையான யாப்பு நடையாலும் இது ஓர் பழம் புலவரால் பாடப்பட்டுள்ளது எனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய மாலையில் சிவன் பற்றிய பாடல்கள்

## 1. மூஇலை நெடுவேல் ஆதி வானவன்

***சிவனை ஆதிவானவன், நெற்றிக்கண்ணை உடையவன், பிறையை சூடியவன் எனக் கூறும் பாடல்***

மூஇலை நெடுவேல் ஆதி வானவன்
இடமருங்(கு) ஒளிக்கும் இமயக் கள்வி
தனிக்கண் விளங்கும் நுதல்பிறை மேல்ஓர்
மிகைப்பிறை கதுப்பின் சூடி வளைக்கையின்
வாள்பிடித்(து) ஆளி ஏறித் தானவர்
மானக் கடும்பொர் கடந்த குமரி
மூவா மெல்லடித் திருநிழல்
வாழி காக்கஇம் மலர்தலை உலகே-1

*(அறம் 1-கடவுள் வாழ்த்து-உமையவள்-7)*

இப்பாடல் பற்றிய விளக்க உரை கிடைக்கவில்லை.

## 2. நஞ்சுகறை படுத்த பூண்மிடற்று இறைவன்

***சிவனை நஞ்சுண்ட கழுத்தை உடையவன் எனக் குறிப்பிடும் பாடல்***

மாமுது தாதை ஏவலின் ஊர்துறந்து
கான்உறை வாழ்க்கை கலந்த இராமன்
மாஅ இரலை வேட்டம் போகித்
தலைமகள் பிரிந்த தனிமையன் தனாது
சுற்றமும் சேணிடை யதுவே முற்றிய
நஞ்சுகறை படுத்த பூண்மிடற்(று) இறைவன்
உலகுபொதி உருவமொடு கோதையைத் தலைநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்கோட்டுக் குன்றம் எடுத்த மீளி
வன்தோள் தடக்கை ஊன்ற அன்றோர்
சொல்முறை மறந்தனம் வாழி-12
வில்லும் உண்(டு)அவற்(கு) அந்நாள் ஆங்கே

*(பொருள் 73-எயில் கோடல்-11)*

இப்பாடல் பற்றிய விளக்க உரையும் கிடைக்கவில்லை.

# பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

சங்க காலத்தை அடுத்து வந்த பொ.ஆ.100 முதல் 600 வரையான காலப்பகுதி சங்கம் மருவிய காலம் எனப்படுகிறது. பொ.ஆ. 3 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாடு அன்னியர் ஆட்சிக்குட்பட்டது. சோழ நாட்டையும், பாண்டி நாட்டையும் களப்பிரர் கைப்பற்றி ஆட்சி செய்ததாகக் கூறப்படுகிறது. நடுநாடும், தொண்டை நாடும் பல்லவர் ஆட்சிக் குட்பட்டன. களப்பிரர் பாளி மொழியையும், பல்லவர் பிராகிருத மொழியையும் ஆதரித்தனர். இவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மொழி, தமிழ்க் கலைகள், தமிழ்ப் பண்பாடு என்பன வளர்ச்சி குன்றின. தமிழ் மொழியில் பெருமளவிலும், சிறப்பான முறையிலும் நூல்கள் தோன்றவில்லை. எனவே, தமிழ் இலக்கிய வரலாற்றிலே இக்காலப் பகுதியினை சங்கம் மருவிய காலம் அல்லது இருண்ட காலம் எனக் குறிப்பிடுவர்.

இவ் இருண்ட இக்காலப் பகுதியிலும் சில தமிழ் நூல்கள் தோன்றின. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியன இக்காலகட்டத்தில் எழுந்த நூல்களே. இவற்றுள் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களைச் சங்ககால நூல்கள் என்றும் சிலர் குறிப்பிடுவர். இந்நூல்கள் பொருளாலும், நடையாலும் சங்க இலக்கியங்களினின்றும் வேறுபட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இருண்ட காலப் பகுதியிலேயே காரைக்கால் அம்மையாரும், திருமூலரும் வாழ்ந்தனர். காரைகால் அம்மையார் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டு என்பவற்றையும், திருமூலர் திருமந்திரத்தையும் இயற்றினார். இவை 11ஆம், 10ஆம் திருமுறைகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

காலப்பகுதியில் அறவழி கூறும் நூல்கள் மிகுதியாக வெளிவந் தன. எனவே இக்காலம் நீதி நூற் காலம் எனப்பட்டது. இந்நூல்களுள் போதிக்கப்படும் நீதி, பெரும்பாலும் சமயச் சார்பற்றவையாகக் காணப் பட்டாலும் சமயம் சார்ந்த சில குறிப்புகளும் இந்நூல்களில் இடம் பெற்றுள்ளன.

நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறு பஞ்ச மூலம், ஏலாதி, முதுமொழிக்காஞ்சி, முப்பால் (திருக்குறள்), ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, கார் நாற்பது, களவழி நாற்பது ஆகிய 18 நூல்களும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகின்றன.

இவற்றில் ஐந்து நூல்களில் சிவன் பற்றிய பாடல்கள் உள்ளன. இனியவை நாற்பது, இன்னா நாற்பது, ஆசாரக்கோவை, ஐந்திணை எழுபது, கைந்நிலை ஆகிய நூல்களிலேயே சிவன் பற்றிக் கூறப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னா நாற்பது

**பாடியவர் : கபிலர். (சங்க காலத்துக் கபிலர் அல்ல)**
**(பொ.ஆ. 4 ஆம் நூற்றாண்டு)**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இன்னா நாற்பது எனும் இந் நூலும் ஒன்றாகும். இது கடவுள் வாழ்த்து உள்பட 41 வெண்பாக்க ளைக் கொண்ட அற நூலாகும். இதிலுள்ள ஒவ்வொரு பாட்டும் இன் னது இன்னது துன்பம் தருவது என்று கூறுவதால் இன்னா நாற்பது என்று பெயர் பெற்றது. இந்நூல் தொல்காப்பியர் கூறும் அம்மை என்னும் வனப்பைச் சார்ந்தது. இதன் ஆசிரியர் கபிலர். இவர் சங்க காலத்துக் கபிலர் அல்லர்.

இந்நூலில் கூறியது கூறல் எனும் முறை காணப்படுகின்றது. கருத்தின் பெருமை கருதி, அக்கருத்து மக்கள் உள்ளத்தில் நன்கு பதிய வேண்டும் என்ற நோக்கத்தில் மீண்டும் மீண்டும் கூறியிருக்கக் கூடும் என்பர். உலகத்தில் கூடாதவை என்னென்ன என்பது பற்றிக் கூறி நீதி உரைப்பது இந்நூல். இது பொ.ஆ. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்த நூலாகும். இந்நூல் இன்னிசை வெண்பாக்களால் ஆனது. இதில் நூற்று அறுபத்து நான்கு கூடாச் செயல்கள் கூறப்பட்டுள்ளன.

அறிவிற் சிறந்தவர்கள் வீற்றிருக்கின்ற சபையிலே அறிவில்லாத ஒருவன் புகுவது துன்பத்தைத் தரும்; இருட்டிய பின்னர் வழியிற் செல்வது பெரிதும் துன்பம் விளைவிக்கும்; விளையக் கூடிய துன்பங்க ளைத் தாங்கக் கூடிய ஆற்றல் இல்லாதவர்களுக்குத் தவம் துன்பம் தரும்; தன்னைப் பெற்ற அன்னையைப் பேணிக் காப்பாற்றாமல் விடுவ தும் துன்பமாகும்; என்று மனித வாழ்வில் துன்பத்துக்குரிய நான்கு விட யங்களைக் கூறி நீதி புகட்டும் கீழ்க்காணும் பாடல் இந்நூலில் வருகிறது.

ஆன்றவித்த சான்றோருட் பேதை புகலின்னா
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா வாங்கின்னா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈன்றாளை யோம்பா விடல்.

இந்நூலை இயற்றியவர் கபில தேவர் தமது கடவுள் வாழ்த்தில் சிவபெருமான், பலராமன், திருமால், முருகன் ஆகியோரைக் குறிப் பிட்டுப் பாடியுள்ளார். இதனால் இவர் சமயப் பொது நோக்கு உடை யவர் என எண்ண இடமுண்டு. இந்நூல் அறநூல் பதினொன்றில் நாற் பது என முடியும் இரண்டு நூல்களில் ஒன்றாக விளங்குகிறது. நான்கு அடிகளைக் கொண்ட இந்நூலில் 160 கருத்துக்கள் சொல்லப்பட்டு ள்ளன.

## 1. முக்கண் பகவன் அடிதொழா தார்க்கின்னா

***முக்கண்களுடைய சிவன், பிரம்மா, திருமால், முருகன் ஆகிய மூவரையும் வாழ்த்திப் பாடும் கடவுள் வாழ்த்துப் பாடல்.***

முக்கண் பகவன் அடிதொழா தார்க்கின்னா
பொன்பன ஊர்தியை உள்ளா தொழுகின்னா
சக்கரத்தானை மறப்பின்னா ஆங்கின்னா
சத்தியான் தாள் தொழாதார்க்கு

*(இன்னா நாற்பது-கடவுள் வாழ்த்து)*

**விளக்கம்:**

முக்கண்களுடைய சிவபெருமானின் திருவடிகளை வணங்காதவர்களு க்குத் துன்பமுண்டாம். அழகிய பனைக் கொடியையுடையவனாகிய பல ராமனை நினையாமல் இருத்தல் துன்பமாம். திகிரிப்படையை உடைய வனாகிய மாயோனை மறத்தல் துன்பமாம். அவ்வாறே சக்தியான் வேற் படையை உடையவனாகிய முருகக் கடவுளின் திருவடிகளைத் தொழா தார்க்குத் துன்பம் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியவை நாற்பது

**பாடியவர் : மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார்**

**(பொ.ஆ. 5 ஆம் நூற்றாண்டு)**

இனியவைநாற்பது எனும் இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகும். இது வாழ்விற்கு நன்மை தரும் இனிய அறக்கருத்துக்களைக் கூறும் நாற்பது வெண்பாக்களைக் கொண்ட நூலாகும்.இன்னா நாற்பதும், இனியவை நாற்பதும் நாற்பது, நாற்பது பாடல்களைக் கொண்டவை எனும் ஒற்றுமையுடன் இனியவை, இன்னாதவை என்பவற்றை ஒன்று கூட்டிச் சொல்லும் தன்மையுடைய நூல்களாகும். உலகில் நல்ல அல்லது இனிமையான விடயங்களை எடுத்துக் கூறுவதன் மூலம் மக்களுக்கு நீதி புகட்டுவதே இந்நூலின் நோக்கம். ஒவ்வொரு பாடலும் மூன்று நல்ல விடயங்களை எடுத்துக் கூறுகின்றது.

இந்நூலின் நான்கு பாடல்கள் மட்டும் நான்கு இனிய பொருள்களைக் கூறுகின்றன. ஏனையவற்றில் மும்மூன்று கருத்துகளே கூறப்பட்டுள்ளன. இந்நூலின் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார். பூதன் என்பது இவர் தந்தையார் பெயர் ஆகும். இது பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த நூலாகும்.

சுற்றியிருப்பவர்களுக்குக் கல்வி கற்பித்தல் மிகவும் நல்லது; கற்றறிந்த பெரியோர்களைத் துணை கொண்டு வாழ்தலும் மிக நன்று; சிறிய அளவிலாயினும் தேவைப்படுபவர்களுக்குக் கேட்காமலேயே கொடுப்பது எப்பொழுதுமே நல்லது என்னும் பொருள்படும் இந்நூற் பாடலொன்று பின்வருமாறு,

சுற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே
எள்துணை யானும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போல் இந்நூலில் 124 இனிய சொற்கள் கூறப்படுகின்றன. இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள நான்கு நாற்பது பாடல் களைக் கொண்ட நூல்களில் இரண்டாவதாகும்.

இந்நூலின் கடவுள் வாழ்த்தில் சிவபெருமானும், திருமாலும்,பிரம்ம தேவனும் வாழ்த்திப் பாடப்படுகின்றனர். ஆதலால் இவரின் சமயம் வைதீகமாகும். இவர் சர்வ சமய நோக்குடையவராயிருந்திருக்க வேண் டும் எனக் கருதப்படுகிறது.

## 1. கண்மூன்றுடையான் தாள் சேர்தல் கடிதினிதே

***சிவனையும், திருமாலையும், பிரம்மனையும் பாடும் கடவுள் வாழ்த்துப் பாடல்.***

கண்மூன்றுடையான் தாள் சேர்தல் கடிதினிதே
தொல்மாண் துழாய்மாலை யானைத் தொழலினிதே
முந்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமர்ந் தேத்தல் இனிது

*(இனியவை நாற்பது-கடவுள் வாழ்த்து)*

**விளக்கம்:**

மூன்று கண்களையுடைய சிவபெருமானது திருவடிகளை அடைதல் இனிது. பழமையான திருத்துழாய் மாலையை அணிந்த திருமாலை வணங்குதல் இனிது. நான்கு முகங்களை உடைய பிரமதேவன் முன் அமர்ந்து அவனை வாழ்த்துதல் இனிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசாரக் கோவை

## *பாடியவர் : கயத்தூர்ப் பெருவாயில் முள்ளியார்*

## *(பொ.ஆ. 6 ஆம் நூற்றாண்டு)*

ஆசாரக் கோவை எனும் இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகும். ஆசாரம் என்னும் வடசொல் ஒழுக்கம் என்று பொருள் படுகிறது. நல்லொழுக்கக் கோட்பாடுகளைத் தொகுத்துக் கோவையாகத் தருவதனால் இந்நூல் இப்பெயரைப் பெற்றது. சிறப்புப் பாயிரம் நீங்கலாக இதில் நூறு வெண்பாக்கள் உள்ளன. இதிலுள்ள ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு விடயம் தொடர்பான ஒழுக்கத்தை எடுத்து இயம்புகின்றது. வெண்பா வகையில் குறள்,சிந்தியல், நேரிசை, இன்னிசை, பஃறொடை ஆகிய பல வகையும் இதில் உள்ளன. இது வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.

இதன் ஆசிரியர் கயத்தூர்ப் பெருவாயில் முள்ளியார். பெரு வாயில் என்பது இவரது ஊர் எனத் தெரிகிறது. கயத்தூர் என்ற பெரிய ஊர் இதன் அருகில் இருந்தது போலும். இவர் வடமொழி வல்ல கல்வியாளர் என்பது நூலின் மூலம் விளங்குகிறது.

இந்நூல் அகந்தூய்மையளிக்கும் உயர்ந்த அறங்களை வற்புறுத்து வதோடு, அன்றாட வாழ்க்கையில கடைப்பிடிக்க வேண்டிய நல்ல ஒழுக்கங்களையும் வற்புறுத்தியுள்ளது. காலையில் எழுதல், காலைக் கடன் கழித்தல், நீராடல், உணவு உட்கொள்ளல், உறங்குதல் ஆகிய நடைமுறைகளின் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை இது போல் வேறு எந்த நூலும் சொல்லவில்லை.

ஆசாரக் கோவையின் சிறப்புப் பாயிரமாக சிவனைப் போற்றும் கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்று அமைந்துள்ளது. இதன் மூலம் இந்நூலாசிரியர் சைவ சமயத்தைப் பேணுபவர் எனத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரக் கோவையின் சிறப்புப் பாயிரமாக சிவனைப் போற்றும் கடவுள் வாழ்த்து ஒன்று அமைந்துள்ளது.

ஆர்எயில் மூன்றும் அழித்தான அடி ஏத்தி
ஆரிடத்துத் தான்அறிந்த மாத்திரையான் ஆசாரம்
யாரும் அறிய அறன் ஆய மற்றவற்றை
ஆசாரக் கோவை எனத்தொகுத்தான் — தீராத்
திருவாயில் ஆய திறல்வண் கயத்தூர்ப்
பெருவாயின் முள்ளிஎன் பான்

என்ற இப்பாடலில் ஆர் எயில் மூன்றும் என்பது திரிபுரம் பற்றியதாகும். திரிபுரத்தை எரித்தவன் அடி ஏத்துவதாக ஆசாரக்கோவையின் சிறப்புப் பாயிரம் அமைகின்றது.

## 1. ஆர்எயில் மூன்றும் அழித்தான அடி ஏத்தி

***திரிபுரம் எரித்த சிவன் பற்றிக் கூறும் சிறப்புப் பாயிரப் பாடல்.***

ஆர்எயில் மூன்றும் அழித்தான அடி ஏத்தி
ஆரிடத்துத் தான்அறிந்த மாத்திரையான் ஆசாரம்
யாரும் அறிய அறன் ஆய மற்றவற்றை
ஆசாரக் கோவை எனத்தொகுத்தான் தீராத்
திருவாயில் ஆய திறல்வண் கயத்தூர்ப்
பெருவாயின் முள்ளிஎன் பான்

*(ஆசாரக்கோவை-சிறப்புப் பாயிரம்)*

**விளக்கம்:**

முப்புறங்களையும் அழித்த சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, ஆரியரிடம் தான் அறிந்த ஆசாரங்களை யாவரும் அறிய ஆசாரக் கோவை என்ற இந்நூலை திருவாயில் எனப் போற்றப்படும் கயத்தூர் அருகில் பெருவாயின் என்ற ஊரில் வாழும் முள்ளியார் தொகுத்துக் கொடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்திணை எழுபது

***பாடியவர் : மூவாதியார்***

***(பொ.ஆ. 5 ஆம் நூற்றாண்டு)***

ஐந்திணை எழுபது எனும் இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகும். ஐந்திணைகளான முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்பவற்றுள் ஒவ்வொன்றுக்கும் 14 செய்யுள்கள் வீதம் எழுபது செய்யுள்களைக் கொண்டிருப்பதனால் இப்பெயர் பெற்றது. இப்பொழுது இந்நூலில் 66 வெண்பாக்கள் மட்டுமே உள்ளன. எஞ்சிய நான்கும் அழிந்து போயின. (25, 26, 69, 70).

இன்னிசை வெண்பாக்களாலும், நேரிசை வெண்பாக்களாலும் ஆனது இது. இதில் கடவுள் வாழ்த்துப்பாவொன்று உண்டு. அது விநாயகர் வணக்கமாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டில்தான் பிள்ளையார் வணக்கம் தமிழ்நாட்டில் வழக்கிற்கு வந்தது. எனவே பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டுக்கு உரிய இந்நூலில் உள்ள இவ்வாழ்த்துப் பிற்காலத்தில் இணைக்கப்பட்டது என்பர். இதற்குப் பழைய உரை இல்லாமை இதற்குச் சான்றாகும்.

இதனை இயற்றியவர் மூவாதியார். இவர் பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவரைச் சமணர் என்பர் சிலர். ஆனால், நூலில் இதற்குச் சான்று இல்லை. இவருடைய பெயருக்கு உரிய காரணம் புலப்படவில்லை. ஒருவேளை அயன், மால், சிவன் என்னும் மூன்று கடவுளர்க்கும் மூலமான பரம்பொருள் என்று இப்பெயருக்கு விளக்கம் கூறலாம்.

ஐந்திணை எழுபதில் பெண்களுக்கு இடக்கண் துடித்தல், நல்ல இடத்தில் பல்லி ஒலி செய்தல், நல்ல கனாக்கள் காணல் என்பன நல்லவை நிகழ்வதனை உணர்த்தும் அறிகுறிகள் என்று இந்நூலின் 41 ஆம் செய்யுள் கூறுகின்றது. இது சமுதாய நம்பிக்கைகளின் வெளிப்பாதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற அடைவில் திணைகள் அமைந்துள்ளன. பாலை நிலம் முல்லையும் குறிஞ்சியும் தம் இயல்புகெட்டுத் தோன்றுவது ஆதலானும், நான்கு திணைகளுக்கும் பொதுவாய் 'நடுவண் ஐந்திணை' என்று சிறப்பிக்கப் பெறுவதனாலும் பாலைத்தி ணை இதில் நடுவில் அமைக்கப்பட்டு உள் ளது என்பர். அகப்பொருள் சார்ந்த ஏனைய தமிழ் இலக்கிய நூல்க ளைப் போலவே, இதுவும் காதல் வயப்பட்ட உள்ளங்களின் அக உணர்வுகளை அக்கால சமூக வாழ்க்கை முறைகளினதும், பண்பாட்டி னதும் பின்னணியிலும், அத்தகைய வேறுபட்ட உணர்வுகளுக்குப் பொரு த்தமான நிலத்திணைகளின் பின்னணியிலும் எடுத்துக்கூறுகின்றது.

## 1. முண்டத்தான் அண்டத்தான் மூலத்தான் ஆலஞ்சேர் சண்டத்தான்

***சிவனை நெற்றிக்கண் உடையவன், அனைத்திற்கும் மூலமாக விளங்குபவன், கண்டத்தில் நஞ்சு உள்ளவன், என வர்ணிக்கும் பாடல்.***

எண்ணும் பொருளினிதே எல்லாம் முடித்தெமக்கு
நண்ணும் கலையனைத்தும் நல்குமால்- கண்ணுதலின்
முண்டத்தான் அண்டத்தான் மூலத்தான் ஆலஞ்சேர்
சண்டத்தான் ஈன்ற களிறு

*(ஐந்திணை எழுபது-கடவுள் வாழ்த்து)*

**விளக்கம்:**

ஈசனைக் கண்ணுதல் தெய்வமாக அதாவது நெற்றியில் கண் பொருந்தியவனாக, மூலமாக விளங்குகின்றவனாக, கண்டத்தில் விடம் உடையவனாகச் சிவனைக் காட்டி அத்தெய்வத்தின் மகனான விநாயகப் பெருமான வேண்டிய கலைகள் அனைத்தும் தருவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைந்நிலை (இன்னிலை)

***பாடியவர் : புல்லங்காடனார்***

***(பொ.ஆ. 6 ஆம் நூற்றாண்டு)***

கைந்நிலை எனும் இன்னிலை பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனப்படும் சங்கம் மருவிய காலத் தமிழ் நூல் தொகுதியில் அடங்கிய ஒரு நூலாகும். இத் தொகுப்பில் காணப்படும் ஆறு அகப் பொருள் நூல்களுள் இதுவும் ஒன்று. இது அறுபது பாடல்களால் ஆனது. ஐந்து தமிழர் நிலத்திணைப் பிரிவுகளைப் பின்னணியாகக் கொண்டு பாடல் கள் வெண்பா பாவகையில் உள்ளன. இதன் காரணமாக இதற்கு ஐந்திணை அறுபது என்ற பெயரும் உண்டு.

இந்நூலை இயற்றியவர் புல்லங்காடனார் என்னும் ஒரு புலவர். கை என்றால் ஒழுக்கம். ஆகவே ஐந்திணை ஒழுக்க நிலை கூறும் நூல் என்னும் பொருளில் இந்நூலின் பெயர் கைந்நிலை என அமை ந்துள்ளது. இந்நூலில் ஆசை, பாசம், கேசம், இரசம், இடபம், உத்தரம் போன்ற வடசொற்கள் கலந்து காணப்படுகின்றன.

கைந்நிலை நூலில் உள்ள 60 பாடல்களில் குறிஞ்சி 12, பாலை 7, முல்லை 3, மருதம் 11, நெய்தல் 12 ஆகிய 45 பாடல்கள் முழு மையான வடிவில் உள்ளன. பிற செல் அரித்த நிலையில் சிதைந் துள்ளன.

கைந்நிலை நூலில் சிவபெருமானையும், உமை அம்பிகையையும், சிவபெருமான் பெற்றெடுத்த மற்றொரு மகனான முருகனையும் வணங் குவதாகக் கடவுள் வாழ்த்து அமைகின்றது. இப்பாடலை இயற்றியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்ற குறிப்பு இடம்பெற்றுள்ளது. அப்பாடல் பற்றிய விபரங்கள் பின்வருமாறு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. வேலன் தரீஇய விரிசடைப் பெம்மான்

**சிவன் வேலனைப் பெற்றெடுத்த விரிசடையை உடைய பெருமான் எனவும், எமனைச் சினந்தழித்தவன் எனவும், கொன்றை மாலையை உடைய பெருமான் எனவும், இடப்பாகத்தில் உமா தேவியை வைத்திருப்பவன் எனவும் கூறும் பாடல்.**

வேலன் தரீஇய விரிசடைப் பெம்மான்
வாலிழை பாகத்து அமரிய கொழுவேல்
கூற்றம் கதழ்ந்நெறி கொன்றையன்
கூட்டா உலகம் கெழீஇய மலிந்தே

(கைந்நிலை-கடவுள் வாழ்த்து)

**விளக்கம்:**

வேலனைப் பெற்றெடுத்த விரிந்த சடையை உடைய பெருமான் எமனைச் சினந்தழித்தக் கொன்றை மாலையை உடைய பெருமான் ஆகிய சிவபெருமானின் இடப்பாகத்தில் அமர்ந்துள்ள உமையம்பிகை யின் இணையோடு அமர்ந்திருக்க உலகம் நன்மை பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம்

***பாடியவர் : திருமூலநாயனார்***
***(பொ.ஆ. 5 ஆம் நூற்றாண்டு)***

திருமந்திரம் எனும்நூல் திருமூலரால் எழுதப்பட்ட தமிழ் சைவசமயப் படைப்பாகும். இந்நூல் மெய்யியல் நூல் வகையைச் சேர்ந்தது. சிவமே அன்பு, அன்பே சிவம் எனக் கூறும் திருமந்திரமே சைவ சித்தாந் தத்தின் முதல் நூலாகக் கருதப்படுகிறது. திருமந்திரம் தமிழ் ஆகம நூல் என்று அழைக்கப்படுகிறது. இந்நூலுக்கு திருமந்திரர் திருமந்திர மாலை என்றும் பெயரிட்டுள்ளார். இது தமிழ் மூவாயிரம் என்றும் அழைக்கப்படுகிறது.

திருமந்திரம் ஒன்பது உட்பிரிவுகளைக் கொண்டது. இந்த உட் பிரிவானது தந்திரம் என்று அழைக்கப்படுகிறது. இதனில் 232 அதி காரங்கள், 3100 பாடல்கள் உள்ளன. 'மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்' என்பதனால் இதற்கு உரியவை 3000 செய்யுட்களே என்று அறியலாம். எஞ்சியவை பிற்சேர்க்கையாம்.

முற்றிலும் சிவனைப் பற்றிப் பாடப்பட்ட திருமந்திரம் சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. திரு மந்திரத்தை தமிழ் ஆகம நூல் என்றும், பொது நூல் என்றும், ஆகமம் சிறப்பு நூல் என்றும் சைவர் கூறுவர். தமிழில் தோன்றிய ஒன்பது ஆகமங்களே ஒன்பது தந்திரங்களாக இயற்றப்பட்டன என்பது அறிஞர் கருத்து. இதற்கு வடமொழியில் மூலநூல் இல்லையென்பர். திருமூலர் முழுத் தமிழில் இதனைப் பாடினார் என்று நம்பியாண்டார் நம்பி குறிப்பிட்டுள்ளார்.

சைவ சமய அடியாருள் காலத்தால் முந்தியவர்கள் திருமூல நாயனாரும், காரைக்கால் அம்மையாரும் ஆவர். திருமூலர் சைவ நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர். சுந்தர மூர்த்தி நாயனார், 'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்' என்று தம் பேரன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றக் கூறினார். பொ.ஆ.10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பி யாண்டார் நம்பிகள், தம் திருத்தொண்டர் திருவந்தாதியில், சுந்தரர் பொ.ஆ. எட்டாம் நூற்றாண்டினர் என்றார். அவர் திருமூலருக்கு வணக்கம் சொல்வதனால் திருமூலர் காலத்தால் முந்தியவர். அப்பர், சம்பந்தர் ஆகியோர் பாடல்களில் திருமூலரின் செல்வாக்குக் காணப் படுவதால், அவர்களின் காலமான பொ.ஆ. ஏழாம் நூற்றாண்டுக்கும் முற்பட்டவர் திருமூலர் என்று தெரிகிறது. தில்லைத் திருக்கோயிலில் உள்ள சிற்றம்பலத்திற்குக் பொ.ஆ. 500இல் ஆண்ட பல்லவ அரசன் சிம்மவர்மன் பொன் வேய்ந்தான். அதன்பின் அது பொன்னம்பலம் ஆயிற்று. திருமூலர் இப்பெயரைக் கையாள்கின்றார். எனவே, திருமூலர் பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டை ஒட்டிய காலத்தவர் என்பர் அறிஞர்.

சைவ சமயத்தின் தத்துவத்தைச் சைவசித்தாந்தம் என்பர். பதி, பசு, பாசம் என்ற மூன்றும் இச்சித்தாந்தத்தின் அடிப்படைக் கூறுகள். திருமந்திர நூலின் பெரும் பகுதி சைவ சமயத் தத்துவங்களை விளக் குவதுடன், எல்லாருக்கும் பொதுவான அறக் கருத்துகளையும் கூறு கிறது. அன்புடைமை, அருள் உடைமை, நிலையாமை, கொல்லாமை, புலால் மறுத்தல் முதலானவை இவற்றுள் சிலவாகும்.

இந்நூலின் முதல் நான்கு தந்திரங்கள் சிவஞானத்தைப் பெற விரும்புவோர் அதற்குத் தம்மைத் தகுதியாளராக்கிக் கொள்ளுதற்கு உரிய வழிகளை விளக்குகின்றன. ஐந்தாவது தந்திரம் சைவ சித்தாந்த உண்மைகளை விவரிக்கின்றது. ஆறு முதல் ஒன்பது இறுதியான தந்திரங்கள் ஞானம் பெறும் நிலையில் உணர்ந்து பெறத்தக்கனவாக உள்ள நல்ல பயன்கள் பற்றி உணர்த்துகின்றன. ஆசனம், பிராணா யாமம், தியானம், சமாதி முதலியன பற்றியும், எண்பெரும் சித்திகள் பற்றியும், உடம்பைப் பேணிக் காக்கும் வழி பற்றியும் இந்நூல் விளக்கி யுள்ளது. இறைவன் இயல்பு, உயிர்களின் இயல்பு, பாசத்தின் பண்பு, குருவின் இன்றியமையாமை, நல்வினை தீவினைகள், இவற்றின் நீக் கம், ஞானம் கைவரப் பெற்ற சிவயோகிகளின் பெருமையும், தன்மை களும் திருமந்திரத்தில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைக்கால் அம்மையார் பாடல்கள்

**பாடியவர் : காரைக்கால் அம்மையார்**

**(பொ.ஆ. 6 ஆம் நூற்றாண்டு)**

காரைக்கால் அம்மையாரின் பாடல்கள் முற்றிலும் சிவன் மீது பாடப்பட்ட பாடல்களாகும். இவர் இசைத்தமிழால் இறைவனைப் பற்றி முதன்முதலாகப் பாடியவராகவும், தமிழுக்கு அந்தாதி எனும் இலக்கண முறையை அறிமுகம் செய்தவராகவும் அறியப்பெறுகிறார். அம்மை யார் அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திரு இரட்டை மணிமாலை போன்ற நூல்களைத் இயற்றி சைவத் தமிழுக் குப் பெரும் தொண்டாற்றியுள்ளார்.இவருடைய பதிக முறைகளைப் பின் பற்றியே பிற்காலத்தில் தேவாரப் பதிகங்கள் இயற்றப்பட்டன. காரைக் கால் அம்மையாரின் பாடல்கள் அனைத்தும் சைவத் திருமுறைகளில் பதினோராம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூல்களின் காலம் பொ.ஆ. 6ஆம் நூற்றாண்டின் பிற்பாதியாகும்.

## 1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள்

காரைக்கால் அம்மையார் பாடிய இந்த பதிக முறையே முதன் முதலாகப் பாடப் பெற்றதாகும். அதனால் இவை மூத்த பதிகங்கள் என் றும், இறைவனை பதிக முறையில் பாடியமையால் திருப்பதிகம் என் றும் அழைக்கப்படுகின்றன.

திருவாலங்காட்டில் சிவபெருமான் நடனமாடுவதைக் கண்டு காரை க்கால் அம்மையார் பாடிய பாடல்கள் திருவாலங்காட்டு மூத்த திருப் பதிகங்கள் ஆகும். பதிக முறையில் பாடப்பெற்ற முதல் பாடல்கள் என்பதால் இதனை ஆதிப்பதிகம் என்றும் அழைப்பர். முதன் முறை யாக இறைவனை இசையால் பாடியதால் காரைக்கால் அம்மையா ருக்கு தமிழிசையின் தாய் என்ற சிறப்பு பெயர் ஏற்பட்டது. அம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரைப் பின்பற்றியே தேவார மூவர் இறைவனை இசையால் பாடி தேவாரம் பாடியுள்ளார்கள்.

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ள நூல்களில் ஒன்று. இது 96 வகையான சிற்றிலக்கியங்களில் ஒன்றான பதிகம் முறையில் பாடப்பெற்றது. திருவாலங் காடு என்னும் ஊர்க் கோயிலில் குடிகொண்டுள்ள சிவபெருமான் மீது பாடப்பட்ட நூல் என்பதால் இப்பெயர் பெற்றது. இந்த நூலில் 10 பாடல்கள் உள்ளன. 11ஆம் பாடலாக அடைவுப்பாடல் ஒன்றும் உள்ளது.

## 2. அற்புதத் திருவந்தாதி

காரைக்கால் அம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதி என்பது சைவத்திருமுறைகளில் பதினோராம் திருமுறைத் தொகுதியில் உள்ள ஒரு நூலாகும். இந்நூலே அந்தாதி முறையில் பாடப்பெற்ற முதல் நூலாகும். இந்நூல் ஆதி அந்தாதி என் றும், திருவந்ததாதி என்றும் அழைக்கப் பெற்றுள்ளது. இதில் மொத்தமாக 101 பாடல்கள் உள்ளன.

## 3. திருவிரட்டைமணிமாலை

காரைக்கால் அம்மையார் பாடிய திருவிரட்டைமணிமாலை என் பது இரட்டைமணிமாலையைச் சேர்ந்த நூலாகும்.இந்நூலினை காரைக் கால் அம்மையார் அற்புதத் திருவந்ததாதி நூலுக்குப் பிறகு படைத்து ள்ளார். இந்நூலில் சிவபெருமானின் சிறப்புகளை புகழ்ந்து காரைக்கால் அம்மையார் எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிற்சேர்க்கை

# ஈழத்து லிங்காஷ்டகம்

### இயற்றியவர் : என்.கே.எஸ்.திருச்செல்வம்

கோணேஸ்வரத்தில் மாதுமை லிங்கம்
கேதீஸ்வரத்தில் கௌரி லிங்கம்
முன்னேஸ்வரத்தில் வடிவு லிங்கம்
நகுலேஸ்வரத்தில் நகுல லிங்கம் 4

சந்திரசேகர ஈஸ்வர லிங்கம்
ஈஸ்வரமுனி எல்லாளனின் லிங்கம்
சிவனொளி பாதத்தில் சுமண லிங்கம்
சிவகிரி காசி அப்பனின் லிங்கம் 8

கதிரமலை கந்த சுவாமியின் லிங்கம்
குதிரைமலை அல்லி ராணியின் லிங்கம்
மானாவரியில் ராம லிங்கம்
மாமங்க ஈஸ்வர மணல் லிங்கம் 12

கொக்கட்டி மரத்தில் தான்தோன்றி லிங்கம்
ஒட்டிசுட்டானில் அநாதி லிங்கம்
ராவணன் தாயின் கன்னி லிங்கம்
ரவிகுல மாணிக்க பதவி லிங்கம் 16

அனுரா புரேச அரச லிங்கம்
புலத்தி நகரில் பத்து லிங்கம்
வானவன் மாதேவி ஈஸ்வர லிங்கம்
வாரிவன நாத வெள்ளை லிங்கம் 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவி ராமேஸ்வர ஆழி லிங்கம்
திருமங்கலை பர மேஸ்வர லிங்கம்
திருக்கரசை பதி ஜீவ லிங்கம்
திருமலை விஸ்வ நாத லிங்கம் 24

நல்லூரில் சட்ட நாதரின் லிங்கம்
நயினை சோம ஸ்கந்த லிங்கம்
நாகர்முனை கடல் பிம்ப லிங்கம்
நாக பர்வ மலை காட்டு லிங்கம் 28

உகந்தைமலை உச்சி ராவண லிங்கம்
உலக நாச்சியின் காசி லிங்கம்
சிங்கை ஆரியன் கைலாச லிங்கம்
கங்கை வெளியின் வயலில் லிங்கம் 32

வண்ணை கோயில் வைத்தீஸ்வர லிங்கம்
மண்ணித்தலை முனை மணலில் லிங்கம்
பொன்னம்பல வானேசர் கற்றளி லிங்கம்
தென்னன் மரபடி பாண்டிய லிங்கம் 36

ஆதி அகத்தியர் தாபன லிங்கம்
ஆனைகட்டி மலை பாண லிங்கம்
கண்தளை சதுர்வேதி மங்கல லிங்கம்
களனி மலையில் ஒழித்த லிங்கம் 40

தம்பலகாமம் கோண லிங்கம்
செங்கடன் கண்டியில் நாத லிங்கம்
செம்பி மலையில் தாரா லிங்கம்
சேறுநகர் மணி புரத்து லிங்கம் 44



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரியாய் மலையில் பல்லவ லிங்கம்
அரியாலை கங்கை நதியின் லிங்கம்
அரிட்ட பர்வத மலையின் லிங்கம்
அருகமணப் பூ மனையில் லிங்கம் 48

பூதவராயர் வீதியன் லிங்கம்
பூநகரில் ஆலம் கேணி லிங்கம்
புத்தூர் நடராஜ ராம லிங்கம்
சித்தன் கேணி சிதம்பர லிங்கம் 52

ரத்துமல் பதியில் நந்தி லிங்கம்
ரம்புக்கன் மொட்டை புலியின் லிங்கம்
ராட்சதக் கல் அணை குமுக்கன் லிங்கம்
ராசமலை உச்சி சதுர லிங்கம் 56

வல்வெட்டிதுறை வைத்தீஸ்வர லிங்கம்
வந்தாறுமூலை பொத்தானை லிங்கம்
வவுனிக்குளத்தில் எட்டு பட்டை லிங்கம்
வவ்வாலைக் கேணி சந்திர லிங்கம் 60

அம்பாள் பாறை குளத்து லிங்கம்
அக்கரை பத்தூர் பசுபத லிங்கம்
அனலையில் நாக ஈஸ்வர லிங்கம்
நூரளை லங்கா தீஸ்வர லிங்கம் 64

ருத்ரா புரத்தில் சோழ லிங்கம்
ரம்பைமா நாகுல ராச்சிய லிங்கம்
கொக்குத் தொடுவாய் மகா லிங்கம்
குருந்தூர் சிவனின் கோயில் லிங்கம் 68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுதாவளையில் சுயம்பு லிங்கம்
கரடியன் ஆற்று குளத்து லிங்கம்
கல்யாணி நகரில் விபீஷண லிங்கம்
காரைக்கால் விஸ்வ நாதரின் லிங்கம் 72

பனன்காமத்தில் பண்டார லிங்கம்
பண்டாரவெளியில் நாக லிங்கம்
பருத்தியூரில் பசுபதி லிங்கம்
பண்டித சோழ ஈஸ்வர லிங்கம் 76

கோட்டை அழகு ஈஸ்வர லிங்கம்
கோயில்குளம் அகில் ஆண்டவர் லிங்கம்
கொத்துமலை உச்சி கொன்றை லிங்கம்
கோட்டை முனீஸ்வர சுவாமி லிங்கம் 80

கப்பித்தா வத்தையில் தீவு லிங்கம்
கலந்தனின் ஊரில் சாஸ்த்திர லிங்கம்
காவலூரில் கணபதி லிங்கம்
காலி மீனாட்சி சுந்தர லிங்கம் 84

வெள்ளை வில்வ பத்திர லிங்கம்
எல்லை பர்வத அருவி லிங்கம்
மாவலி கங்கை சங்கம லிங்கம்
மல்லிகைத்தீவு மங்கள லிங்கம் 88

வேலணை காசி விஸ்வ லிங்கம்
நிகும்பலை நாளந்த யாக லிங்கம்
சீதா வாக்கையில் ராஜ லிங்கம்
சின்னத் தொடுவாய் கேணி லிங்கம் 92



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரமலை சிவன் கோயில் லிங்கம்
கந்தர் ஓடை நாத லிங்கம்
குடத்தனை நாகர் கோயில் லிங்கம்
கும்பகர்ணன் மலை உறங்கும் லிங்கம் 96

இலக்கு மலையில் ராவண லிங்கம்
இரத்தின புரியில் மாணிக்க லிங்கம்
இத்தியடி ஆதி சிவனின் லிங்கம்
ஈழத்து சிதம்பர வியாவில் லிங்கம் 100

நஞ்சுண்ட சிவன்நீர் கொழும்பு லிங்கம்
நந்தீஸ்வர முத்து ரஜவெளி லிங்கம்
நாகரின் வெளியில் அசோக லிங்கம்
யாகக்கல் மலையின் குகையில் லிங்கம் 104

செட்டித்தெரு சோம சுந்தர லிங்கம்
மட்டுவில் சந்ர மௌலீஸ்வர லிங்கம்
மாத்தளை பதவி ஈஸ்வர லிங்கம்
மயிலணி குடவாயில் கோட்ட லிங்கம் 108

வட்டுக் கோட்டை விசாலாட்சி லிங்கம்
விசவகிரி மலை விஷ்வ லிங்கம்
வீரகங்கை கரை கோட்டை லிங்கம்
வெடுக்கு நாரி கற்சுனை லிங்கம் 112

வேலாயுதர் வெளி தீவு லிங்கம்
வளத்தாப்பிட்டி கல் மலையில் லிங்கம்
சூரிய பெருந்துறை களப்பு லிங்கம்
இலங்கைத்துறை குன்று சமுத்ர லிங்கம் 116



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டேஸ்வரத்தில் புதைந்த லிங்கம்
தங்கத் திருமலை திவக்க லிங்கம்
தலைகுரு மலையில் அகத்திய லிங்கம்
தரவைக் காட்டில் சிதைந்த லிங்கம் 120

தஞ்சைநகர சந்தகிரி லிங்கம்
தென்திசை ராவணன் கோட்டை லிங்கம்
சங்கமன் கண்டி காட்டு லிங்கம்
சம்மன்துறை தரவை கோரக்கர் லிங்கம் 124

கிவுல்கடவை சோலை சோழ லிங்கம்
குடும்பிமலைக் குன்று உருளை லிங்கம்
குயில்வத்தை தான்தோன்றி ஈஸ்வர லிங்கம்
குயின்பெரி நவநாத சித்தரின் லிங்கம் 128

முகத்து வார அருணை லிங்கம்
முரசு மோட்டை சங்கர லிங்கம்
மண்டைதீவு தில் லேஷ்வர லிங்கம்
ஊரை தீவு ராம லிங்கம் 132

அட்டல தீசன் பட்டை லிங்கம்
ஆவரங்கால் சிவன் மூன்று லிங்கம்
எரக்கா விலவில் வீர லிங்கம்
எருவில் சிவனார் மடுவில் லிங்கம் 136

சித்தர் வில்லு தீச லிங்கம்
சித்தர் மலை சிவ நகர லிங்கம்
மணமகா வேரத்து மலையில் லிங்கம்
மாதுறை பதி நக ரீஸ்வர லிங்கம் 140



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு பாலை நெடுங் கேணி லிங்கம்
நெல்வேலி கோயில் காட்டு லிங்கம்
சங் கானை பதி மகா லிங்கம்
சம்பூர் பதி வைத்தீஸ்வர லிங்கம் 144

ஐம்பொழில் பார்வதி புரத்தின் லிங்கம்
உத்தம சோழ ஈஸ்வர லிங்கம்
உத்தமர்தம் கோயில் வலகழி லிங்கம்
உச்சன் கோட்டையில் அக்கினி லிங்கம் 148

மாணிக்க கங்கைக்கரை முத்து லிங்கம்
பரந்தன் வயலில் பட்டை லிங்கம்
தூபம் ராமர் மகேச லிங்கம்
தொப்பி குடுமியில் வேலுடன் லிங்கம் 152

நீலகிரிமலை பிராமண லிங்கம்
நிக்கா குளக்கட்டு சுடுமண் லிங்கம்
நானா தேசிகர் சேதவ லிங்கம்
பாலாவிக் கரம்பை பாண லிங்கம் 156

அர்த்த நாரீச வேராகல் லிங்கம்
அபயகிரி வட்டகாமினி லிங்கம்
பசவ குளத்தின் பண்டைய லிங்கம்
சிவிகாசாலை பண்டு லிங்கம் 160

வடநகர் விஜயன் ராமர் லிங்கம்
பங்குளி அசோகா ராமர் லிங்கம்
பெருமியன் குளத்தில் இரண்டு லிங்கம்
பிதுர்மலை தாது சேனனின் லிங்கம் 164



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வரனின் வெள்ளைக்கல் லிங்கம்
பிராமணயன் காம சிவநந்தி லிங்கம்
கல்லுடைந்த சிவ குளத்து லிங்கம்
சிவாலய கல்லு பாறை லிங்கம் 168

அந்தக்கல் மலைக்குகை முரடு லிங்கம்
புத்தன மலைக்குகை சிதைந்த லிங்கம்
கடையிற்சுவாமி சிதம்பர லிங்கம்
சுதுமலை விஸ்வ விசாலாட்சி லிங்கம் 172

கால் நூற்றாண்டில் கண்கண்ட லிங்கம்
நூல் உருவில் வரும் அஷ்டக லிங்கம்
திருவுக்காணை கொடுத்த லிங்கம்
திரிகூடகிரி மலை கோயில் லிங்கம் 176

சம்பந்தர் போற்றிய கோண லிங்கம்
சுந்தரர் பாடிய மாதோட்ட லிங்கம்
அருண கிரியின் திருப்புகழ் லிங்கம்
இலங்கை முழுவதும் லிங்கம் லிங்கம் 180



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்

1. தொல்காப்பியம்- பொருளதிகாரம்- மூலமும், உரையும்- வ.த.இராம சுப்பிரமணியம்- பூம்புகார் பதிப்பகம்- சென்னை-(முதல் பதிப்பு 2008)-2016- பக். 24, 25 (தொல்.பொருள், அகம்: நூற்பா-5)

2. தமிழர் மதம்- மொழிஞாயிறு தேவநேயப்பாவானார்- பதிப்பாசிரியர் புலவர் அ.நக்கீரன்-தமிழ் மண் பதிப்பகம்- சென்னை- (முதல் பதிப்பு 1940)-2000-பக்.31

3. சைவம்-முனைவர். இரா.செல்வ கணபதி- (தமிழ்த்துறைத் தலைவர்- சைவ சமயம், தத்துவம், வரலாறு)

4. தொல்காப்பியம்-பொருளதிகாரம்-மூலமும்,உரையும்- வ.த.இராமசுப்பிர மணியம்- பூம்புகார் பதிப்பகம்- சென்னை-(முதல் பதிப்பு 2008)- 2016-பக். 117, 118 (தொல்.பொருள், புறம்: நூற்பா-81)

5. தொல்காப்பியம்-புறத்திணை இயல்-உரைவளம்-பேராசிரியர் க. வெள்ளை வாரணன்-காமராசர் பல்கலைக்கழகம்-மதுரை-1983

6. சைவ சித்தாந்த சத்திர வரலாறு-பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்-தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு-தஞ்சாவூர்- முதற்பதிப்பு 2002-பக்.263

7. தமிழர் வரலாறு- முதலாம் பகுதி- பி.டி.சீனிவாச அய்யங்கார்- தமிழாக்கம்-புலவர் கா.கோவிந்தன்- தென்னிந்திய சைவ சித்தாந்த நூல் பதிப்புக்கழகம்-திருநெல்வேலி, சென்னை-2000-பக். 238

8. வேதமும் சைவமும்-சு.கோதண்டராமன்-சென்னை-2014-பக்.

9. A Short History of Hinduism in Ceylon-C.S.Navaratnam-Jaffna-1964-Page.63

10. சைவ சமயம்- டாக்டர். மா.இராசமாணிக்கனார்-(துணைத் தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்)- செல்வி பதிப்பகம்-காரைக்குடி-1959-பக்.22, 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. அகநானூறு, களிற்றியானை நிரை-தெளிவுரை-புலியூர் கேசிகன்-பாரி நிலையம்-சென்னை-(முதல் பதிப்பு-1960)-2010- பக்.9, 10 (அகநானூறு-கடவுள் வாழ்த்து)

12. அகநானூறு, மணிமிடை பவளம்-தெளிவுரை-புலியூர் கேசிகன்-பாரி நிலையம்-சென்னை-(முதல் பதிப்பு-1960)-2010- பக்.148, 149 (அகநானூறு - 181 : 15-19)

13. அகநானூறு, நித்திலக்கோவை -தெளிவுரை-புலியூர் கேசிகன்-பாரி நிலையம்-சென்னை-(முதல் பதிப்பு-1962)-2014- பக்.162-164 (அகநானூறு - 360 : 6-10)

14. தமிழர் வரலாறு-இரண்டாம் பகுதி- பி.டி.சீனிவாச அய்யங்கார்-தமிழாக்கம்-புலவர் கா.கோவிந்தன்-தென்னிந்திய சைவ சித்தாந்த நூல் பதிப்புக் கழகம்-திருநெல்வேலி, சென்னை-1989-பக்.200, 201

15. புறநானூறு-தெளிவுரை- புலியூர் கேசிகன்- பாரி நிலையம்- சென்னை-(முதல் பதிப்பு 1958)-2017- பக்.17, 18 (புறநானூறு-கடவுள் வாழ்த்து)

16. மேலது- பக். 26, 27, (புறம் 6. 17-20)

17. மேலது- பக். 102, 103 (புறநானூறு-55: 1-5)

18. மேலது- பக். 103, 104 (புறநானூறு-56: 1-8)

19. மேலது- பக். 140, 141, (புறநானூறு-91:6-11)

20. மேலது- பக். 217, 218, (புறநானூறு-166: 1-5)

21. மேலது- பக். 248, 249 (புறநானூறு-198: 9-13)

22. கலித்தொகை- தெளிவுரை- புலியூர் கேசிகன்- பாரி நிலையம்- சென்னை-9ஆம் பதிப்பு 2016-பக். 13-16 (கலித்தொகை-கடவுள் வாழ்த்து-1: 1-16)

23. மேலது- பக். 17, 18 (கலித்தொகை-பாலைக்கலி-1: 1-4)

24. மேலது- பக். 103, 104 (கலித்தொகை-38-குறிஞ்சிகலி: 2: 1-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. மேலது- பக். 268-272 (கலித்தொகை-103-முல்லைக்கலி: 3: 15-19, 25-29, 40-45)

26. மேலது- பக். 274-277 (கலித்தொகை : 104-முல்லைக்கலி: 4: 10-14)

27. மேலது- பக். 280-282 (கலித்தொகை : 105-முல்லைக்கலி: 5: 10-18)

28. மேலது- பக். 372, 375 (கலித்தொகை : 142-நெய்தல்கலி 25: 26-29)

29. மேலது- பக். 405, 406 (கலித்தொகை 150-நெய்தல்கலி - 32: 1-24)

30. பரிபாடல்- தெளிவுரை- புலியூர் கேசிகன்- பாரி நிலையம்- சென்னை- (1ஆம் பதிப்பு-1971) -2009-பக். 61 (பரிபாடல்- 5: 13-21)

31. மேலது- பக். 62 (பரிபாடல் 5 : 22-35)

32. மேலது- பக். 98, 99 (பரிபாடல் 8 : 1-11)

33. மேலது- பக். 113, 114 (பரிபாடல் 8 : 126-130)

34. மேலது- பக். 115, 116 (பரிபாடல் 9 : 4-8)

35. மேலது- பக். 140, 141 (பரிபாடல் 11 : 1-4)

36. மேலது- பக். 148, 149 (பரிபாடல் 11 : 74-80)

37. பதிற்றுப்பத்து- தெளிவுரை- புலியூர் கேசிகன்- பாரி நிலையம்- சென்னை- (1ஆம் பதிப்பு-1974) -2012-பக். 13-16 (பதிற்றுப்பத்து-கடவுள் வாழ்த்து)

38. மேலது- பக். 152, 153 (பதிற்றுப்பத்து-43 : 6-10)

39. ஐங்குறுநூறு-மருதம், நெய்தல்- தெளிவுரை- புலியூர் கேசிகன்- பாரி நிலையம்- சென்னை- 2008-பக். 13, 14 (ஐங்குறுநூறு-கடவுள் வாழ்த்து)

40. திருமுருகாற்றுப்படை- திருஆவினன்குடி : 151-154



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40a.திருமுருகாற்றுப்படை- திருஆவினன்குடி : 160-162

40b.திருமுருகாற்றுப்படை- திருவேரகம் : 177-182

40c.திருமுருகாற்றுப்படை- பழமுதிர்சோலை : 256-259

40d.திருமுருகாற்றுப்படை- தனிப்பாடல் : 1

40e.திருமுருகாற்றுப்படை- தனிப்பாடல் : 7

41. பெரும்பாணாற்றுப்படை- (பெரும்பாணாற்றுப்படை-429-432)

42. சிறுபாணாற்றுப்படை (சிறுபாணற்றுப்படை- 96-99)

43. மதுரைக்காஞ்சி-(மதுரைக் காஞ்சி : 38-41), (மதுரைக்காஞ்சி: 453-467)

44. பட்டினப்பாலை-(பட்டினப்பாலை -32-39)

45. பட்டினப்பாலை- நச்சினார்க்கினியர் உரை-உ.வே,சாமிநாதய்யர் தொகுப்பு-பக்கம்.58 (பட்டினப்பாலை -32-39)

46. திருக்குறள்-மூலமும் பரிப்பெருமாள் உரையும்-வித்துவான் கா.ம.வேங்கட ராமையா-அண்ணாமலைப் பல்கலைக்கழகம்-1988-பக்.1-10

47. திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே-சித்தாந்த வித்தகர் க.வச்சிர வேல் முதலியார்-சைவ சித்தாந்த மன்றம்-மதுரை-(முதல் பதிப்பு 1953)-2000

48. குறள்.திறன்,காம்

49. திருக்குறளில் சைவ சித்தாந்தம்-கு.வைத்தியனாதன்-திருவாவடுதுறை ஆதீனம்-1994

50. தமிழ்ச்சுரங்கம்.காம்

51. சிலப்பதிகாரத்தில் சிவ வழிபாடு-முனைவர் சி.சேதுராமன் இணைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர், தமிழ்த்துறை, மா.மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை

52. Tamil and Vedas-சிலப்பதிகாரக் கோவில்கள்-ஆராய்ச்சிக் கட்டுரை-லண்டன் சுவாமிநாதன்

54. சிலம்போ சிலம்பு-முனைவர் சுந்தர சண்முகனார்-சென்னை-1992-பக்.31

55. சிலப்பதிகாரம்-தெளிவுரை-புலியூர் கேசிகன்- பாரி நிலையம்- சென்னை-(1ஆம் பதிப்பு-1958) -2017-பக். 16 (சிலப்பதிகாரம்-பதிகம்: 39-41)

56. மேலது. பக். 32 (புகார்க் காண்டம்-மனையறம் படுத்த காதை-2: 39-41)

57. மேலது. பக். 73 (புகார்க் காண்டம்-இந்திரவிழவூர் எடுத்த காதை-5: 169-178)

58. மேலது. பக். 82, 83 (புகார்க் காண்டம்-கடல் ஆடு காதை-6 : 40-45)

59. மேலது. பக். 161 (மதுரைக் காண்டம்-காடுகான் காதை-11 : 72)

60. மேலது. பக். 290 (மதுரைக் காண்டம்-அழற்படு காதை-22 : 86-88)

61. மேலது. பக். 302 (மதுரைக் காண்டம்-கட்டுரைக் காதை-23: 90-92)

62. மேலது. பக். 319, 320(வஞ்சிக்காண்டம், குன்றக்குரவை-24:9: பாடல்-15, பாடல்-16)

63. மேலது. பக். 343 (வஞ்சிக் காண்டம்-கால்கோள்காதை-26 : 54-60)

64. மேலது. பக். 343 (வஞ்சிக் காண்டம்-கால்கோள்காதை- 26 : 61-67)

65. மேலது. பக். 346 (வஞ்சிக் காண்டம்-கால்கோள்காதை-26 : 98-104)

66. மேலது. பக். 388 (வஞ்சிக் காண்டம்-நடுகற்காதை-28 : 74-77)

67. மேலது. பக். 389, 391 (வஞ்சிக் காண்டம்-நடுகற்காதை-28 : 102-105)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. மணிமேகலை- தெளிவுரை-புலியூர் கேசிகன்- பாரி நிலையம்- சென்னை- (1ஆம் பதிப்பு-1961) -2017-பக். 28 (விழாவறை காதை- 1 : 54-55)

69. மேலது. பக்.50 (மலர்வனம் புக்க காதை- 3 : 144-145)

70. மேலது. பக். 324, 325 (சமயக் கணக்கர் தம் திறங்கெட்ட காதை- 27: 86-95)

71. முத்தொள்ளாயிரம்- டி.கே.சிதம்பரநாத முதலியார்- பொதிகை மலைப் பதிப்பு-தென்காசி- (முதல் பதிப்பு-1943) 1957-பக். 185, 186 (கடவுள் வாழ்த்து-99)

72. மேலது. பக். 141, 142 (77 வது பாடல்)

73. தகடூர் யாத்திரை-(வெண்பா-54)

74. நீதித்திரட்டு- மறைந்து போன பழம் தமிழ் நூல்களில் சில-1. ஆசிரிய மாலை; 2. குண்டலகேசித் திரட்டு 3. பெரும்பொருள் விளக்கம், 4. தகடூர் யாத்திரை (திரட்டு)-மதுரை தமிழ் இலக்கிய மின் தொகுப்புத் திட்டம்- பேரா. ச.பால சுந்தரம்-பதிப்பாசிரியர்-தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நுலக சங்கம்- நூ.த.லோகசுந்தரமுதலி, மயிலை, சென்னை

75. தமிழ் இலக்கிய வரலாறு- வி.செல்வநாயகம்-இலங்கைப் பல்கலைக்கழகம்-பேராதனை-ஸ்ரீலங்கா அச்சகம்-யாழ்ப்பாணம்-(முதல் பதிப்பு-1951)-1960-பக். 3

76. தமிழ் நூல் தொகுப்புக் கலை-முதல் தொகுதி-தமிழ்ப் பேராசிரியர் புலவர் சுந்தர சண்முகனார்-பாரி நிலையம்-சென்னை-1972

77. இன்னா நாற்பது இனியவை நாற்பது- மூலமும் உரையும்- உரையாசிரியர் துரை. தண்டபாணி- உமா பதிப்பகம்- சென்னை- 2015- பக். 14, 61

78. ஆசாரக்கோவை- மூலமும் உரையும்- சாரதா பதிப்பகம்- சென்னை- 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

79. ஐந்திணை எழுபது- மூலமும் விளக்க உரையும்- ஞா.மாணிக்கவாசகன் உமா பதிப்பகம்- சென்னை- 2011- பக். 17

80. கைந்நிலை- மூலமும் விளக்க உரையும்- ஞா.மாணிக்கவாசகன் உமா பதிப்பகம்- சென்னை- 2017

82. திருமூலர் திருமந்திரம்- மூலமும் விளக்க உரையும்- ஞா.மாணிக்கவாசகன்- உமா பதிப்பகம்- சென்னை- 2009

83. பதினோராம் திருமுறை-மூலமும் உரையும்- புலவர்.பி.ரா.நடராஜன்- உமா பதிப்பகம்- சென்னை- 2005- திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

84. அற்புதத் திருவந்தாதி

85. திரு இரட்டை மணிமாலை

86. Wikipedia.org

87. விக்கி மூலம். காம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டைய தமிழ் நூல்களில் சிவன்

### என்.கே.எஸ்.திருச்செல்வம்



''பண்டைய தமிழ் நூல்களில் சிவன்'' எனும் இந்நூல் தொல்காப்பியர் காலம் முதல் திருஞானசம்பந்தர் காலம் வரையில் காணப்பட்ட சங்க காலத்திலும், சங்கம் மருவிய காலத்திலும் எழுதப்பட்ட 25 தமிழ் நூல்களில் உள்ள சுமார் 80 பாடல்களில் சிவன் பற்றிக் கூறப்பட்டுள்ள விபரங்களை எடுத்தியம்புகின்றது. அத்துடன் இந்நூலின் பிற்சேர்க் கையாக நூலாசிரியர் இயற்றிய ''ஈழத்து லிங்காஷ்டகம்'' எனும் பாடல் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பாடலில் நூலாசிரியர் இலங்கையின் புராதன 160 லிங்கக் கோயில்கள் பற்றிக் கூறியு ள்ளார்.

இந்நூலாசிரியர் தமிழ்மாமணி திருச்செல்வம் அவர்கள் கிழக் கிலங்கை அம்பாறையில் பிறந்தாலும் சுமார் 35 வருடங்களாக தலைநகர் கொழும்பை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர். இவர் இந்தியாவில் தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி கோட்டையூர் வெள்ளையத் தேவரின் கொள்ளுப் பேரனும், நல்லமுத்து தேவரின் பேரனுமாவார். இவரது பெற்றோரான கல்யாண சுந்தரம், இராமக்காள் தமிழ் நாட்டையும், இலங்கையில் திருகோணமலையையும் சேர்ந்தவர்கள் என்பதுடன், இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் கலைமாணிப் பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆடை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றில் பொது முகாமையாளராகப் பணியாற்றும் ஆய்வாளர் திருச்செல்வம் வரலாற்றுத் துறையிலும், தமிழ்த் திரைப்படத் துறையிலும் கொண்ட ஈடுபாட்டால் 200க்கும் அதிகமான வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று பலராலும் பாராட்டப் பெற்றவர். இவர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராக இருப்பதுடன் முன்னணியி லுள்ள சமூக, சமய அமைப்புகளிலும் பொறுப்பான பதவிகளை வகித்து வருகின்றார்.

தமிழ் சைவசமயம் தமிழ்க்கலைகள் தொடர்பான ஆழமான அறிவுத் தேடலும், அவற்றைத் தெளிவாக விளக்கும் ஆற்றலும் இருப்பதால் திருச்செல்வம் இலங்கையின் பல பாகங்களில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற மாநாடுகள், கலந்துரையாடல்களிலும் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள விருப்புடன் அழைக்கப்பட்ட நம் நாட்டுப் பிரதிநிதியும் ஆவார். தமிழ்மாமணி விருது, நுழைபுலம் ஆய்வு விருது, தமிழியல் விருது, இலங்கை இலக்கிய பேரவை விருது, வரலாற்று ஆய்வு கேசரி விருது, வித்தகர் விருது ஆகிய விருதுகளைப் பெற்ற திருச்செல்வம் தொடர்ந்து தேடல் மற்றும் வரலாற்று ஆய்வுகள் மூலமான முடிவுகளைப் பதிவுகளாக்கி, அவற்றால் பயனுறு பணிகள் பல ஆற்றிட அவரைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**கலா கீர்த்தி உடுவை. எஸ். தில்லை நடராசா**
ஓய்வுபெற்ற அரச அதிபர்,
மற்றும் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்

ISBN 955372609-7

விலை ரூபா 390.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org